

Aid
to Beauty
a Guardian
of COMPLEXION
மருந்து சத்துக்கள், தாவர எண்ணெய்கள்—முக்
கியமாக வேப்பெண்ணெய் — வாசனைத் திரவி
யங்கள் இவைகளைக் கலப்பதில் கைதேர்ந்த
அனுபவத்தின் உருவானது மலபார் லிம்டா
சோப். தொடர்ந்து உபயோகித்தால் சரும
நோய்களை அண்டவிடாமல் தடுக்கும். மிருகக்
கொழுப்பு சேராதது. உஷ்
ணப் பிரதேசங்களுக்கு ஏற்ற
தோர் அருமையான சோப்.
LIMDA
LIMDA
LIMDA
SOAP
VEGETABLE SOAP WORKS, CALICUT.
PROPRIETORS: SAIT N.P. & CO., LTD CALICUT - BOMBAY-2, MADRAS-1

பழைய நாணய மதிப்புக் குறைவுக்கு முன் இருந்த விலையிலேயே!



கைவசம் ஸ்டாக் உள்ளவரை உலகப் பிரசித்தி பெற்ற கீழ்க் கண்ட இரண்டு ரக கடிகாரங்களையும் நாணய மதிப்புக் குறைவுக்கு முன் இருந்த விலைக்கே கொடுப்பதாக பேவர் லூபா கம்பெனியார் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறார்கள்.



IWC

No. 7393. 10''' 16 ஜுவல், தட்டை, ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கேஸ், வெண்ணிற வெள்ளி டயல், அராபிக் எண்கள் (படத்தில் உள்ளபடி)

ரூ. 244/-

No. 7397. மேலே உள்ளது போல ஆனால் 18 காரட் தங்க கேஸில்

ரூ. 548/-

FAVRE-LEUBA

பேவர் லூபா & கம்பெனி லிமிடெட் - பம்பாய் & கல்கத்தா


கோத்ரெஜ் வத்னி டாயிலெட் சோப்

ரிஜிஸ்டர்டு Vatni

இத்துடன் சிறிய ('பேபி') சைஸ்

(தாய்நாட்டைச் சார்ந்தது)

மற்றவர்கள் வாக்களிக்கும் எல்லா நன்மைகளையும் அது வழங்குகிறது. இந்த சுத்தமான பச்சை நிற சோப்பை இன்றே வாங்குங்கள். இதனால் நீங்கள்—கடைசி தேசல் வரையிலும்—அதனுடைய தூய்மையான மணம் கமழும் நுரையினால் அதிக குதூகலமடைவீர்கள். இத்துடன் குழந்தைகளின் சருமத்திற்கும் ஒரு போஷாக்கு போன்றது—இதத்தையும், தூய்மையையும் அழகையுமளிக்கிறது.



6 அணா

ஒப்புயர்வற்ற சுதேசி ஸோப்பான

கீர்த்தி வாய்ந்த வேறு சில கோத்ரெஜ் சோப்புகள்

நெ. 1 - நெ. 2 - சான்டல் - லிம்டா (வேம்பு) கள் - ஷேவிங் ஸ்டிக் - ஷேவிங் 'ரவுண்ட்'

மேலும் கிளிசரின், கூந்தல் தைலம்



100 சதம் தூய்மைக்கும், மிருகக் கொழுப்பற்றதென்பதற்கும் உத்திரவாதமானது.

கோத்ரெஜ் சோப்ஸ், லிமிடெட்
மதராஸ்: 164, பிராட்வே;
கொச்சின்: 6/36, கல்வத்தி.


கல்கி

பொருளடக்கம்

மலர் 9 | இதழ் 17 — நவம்பர் 27 — விரோதி ஆ | கார்த்திகை 12

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

வழி அனுப்பு


மகராஜியாகப் போய் வா! ஆனால், உன்னை அழைத்துச் செல்வோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையை நோக்கி வக்கரித்துக் கொண்டு போகாமல் பார்த்துக் கொள்!

கல்கி

மலர் 9 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 17

என்ன சேதி?

உதவி செய்யுங்கள்

புயலினாலும் பெரு மழையினாலும் கடல் பொங்கியதனாலும் ஆந்திரப் பிரதேசங்களுக்கு நேர்ந்துள்ள கஷ்ட நஷ்டங்கள் எவரையும் திடுக்கிடச் செய்கின்றன. அதனால் நூற்றுக்கணக்கானவர் உயிர் துறந்தனர். பதினாயிரக்கணக்கான ஆடு மாடுகள் அதோகதியாயின. லட்சக்கணக்கான வீடுகள் நாசமாயின. பச்சைப் பசேலென்று கண்களுக்குக் குளிர்ச்சி யளித்த சுமார் ஆறு லட்சம் ஏக்கர் தானிய வயல்கள் பாழாகி விட்டன. குளங்களும் ஆறுகளும் உடைத்துக் கொண்டு நூற்றுக்கணக்கான மைல்கள் தூரம் வெள்ளக்காடாகி விட்டது. சேதமடைந்த மாந்தோப்புகளும் வாழைத் தோட்டங்களும் தென்னந் தோப்புகளும் எண்ணில் அடங்காது. மொத்தம் ஐம்பது கோடி ரூபாய்க்கு மேல் சேதம் ஏற்பட்டிருக்கிறதென்று மதிப்பிடுகிறார்கள் என்றால், புயலின் உக்ரத்தை ஊகித்துக் கொள்ளலாம்.

வீடு வாசல்களை இழந்து தவிக்கும் எத்தனையோ பேர்களுக்கு உணவும் உடையும் அளிக்க வேண்டிய பொறுப்பு குறிப்பாக சென்னை மாகாண சர்க்காரையும் பொது ஜனங்களையும் சார்ந்திருக்கிறது. கவர்னர் ஜெனரல் ராஜாஜி, பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு முதல் பல பெரியோர்களும் பிரமுகர்களும் தாராளமாக நன்கொடை அளித்திருக்கிறார்கள். பலவிடங்களிலும் பெருநிதி திரட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சென்னை சர்க்கார் மேற்படி கஷ்டங்களிலிருந்து ஜனங்களுக்குப் பரிகாரம் அளிப்பதற்கான முறைகளை வெகு ஜரூராகக் கைக்கொண்டு வருகிறார்கள். சேதம் ஏற்பட்ட இடங்களைப் பார்வையிட மந்திரிகள் விரைந்து செல்கிறார்கள். விவசாயிகளுக்கு வட்டியின்றிக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தானிய விதைகளும் கால் நடைகளும் இதர சாதனங்களும் கிடைக்க வழிவகை செய்வார்கள் என்று தெரிகிறது. ஆந்திர தேசத்துக்குத் தற்போது ஏற்பட்டுள்ள சேதம் அற்ப சொற்பமல்ல. அதற்கு உதவி புரிய தேசம் முழுதும் திரண்டெழ வேண்டும். அத்தகைய கைங்கர்யத்தில் தமிழ் மகா ஜனங்களும் பங்கு எடுத்துக் கொள்ளவேண்டும்; பங்கு எடுத்துக் கொள்வார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

காரியக்கமிட்டி முடிவு

ஆந்திர மாகாணக் காங்கிரஸின் தீர்மானத்தின் பேரில் அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் சந்தேகமில்லாத ஆந்திர ஜில்லாக்களைக் கொண்ட ஆந்திர மாகாணத்தை உடனே ஸ்தாபித்து விட வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். ரொம்ப சந்தோஷம். அப்படிச் செய்வதில் யாருக்கும் லவலேசமும் ஆட்சேபம் கிடையாது. 'சந்தேகமில்லாத ஆந்திர ஜில்லா'க்களில் சித்தூர் சேருமா என்பது சந்தேகத்துக்கு இடமான விஷயம். சித்தூரில் பல பகுதிகள் தமிழர் வசிக்கும் பகுதிகளாகும். இது ஒரு பக்கம் இருக்கட்டும். புதிய ஆந்திர மாகாணம் ஏற்படும்போது அதன் அரசாங்கம் ஆந்திரமாகாணத்தின் மத்தியிலுள்ள புதிய தலை நகரிலேதான் வேலை ஆரம்பிக்க வேண்டும். பெஜவாடா, ராஜமகேந்திரபுரம், மசூலிப் பட்டணம் இவற்றில் ஒன்றைஆந்திர மாகாணத் தலை நகராக உடனே தேர்ந்தெடுக்க வேண்டும். அதை விட்டு ஆந்திரர்கள் "கொஞ்ச நாளைக்கு நாங்களும் சென்னையிலேயே தலை நகரை வைத்துக் கொள்கிறோம்" என்று சொல்லும் இஷ்கா இஷ்பா பேச்சுக்கு இடமே கொடுக்கக் கூடாது. ஆந்திரத் தலை நகரம் சென்னையில் வைத்துக் கொள்ள ஒரு நாளைக்கு இடங்கொடுத்தாலும் அதன் பயனாகப் பின்னால் வீண் குழப்பங்கள் பல உண்டாகும். "சென்னையைப் பிளக்க வேண்டும்" என்ற கோரிக்கையைக் கொல்லை வழியாக நிறைவேற்றிக் கொள்வதற்குச் செய்யும் முயற்சி என்றே கருதப்படும். மாகாணப் பிரிவினைக் கிளர்ச்சியினால்

ஏற்கெனவே ஆந்திரர்களுக்கும் தமிழர்களுக்கும் மன வேற்றுமை ஏற்பட்டிருக்கிறது. ஆந்திரத் தலைநகரைச் சென்னையில் வைத்துக் கொண்டால் அதன் பலனாக மேற்படி மன வேற்றுமை பன்மடங்கு வளரும். புதிய மாகாணத்தின் முன்னேற்றத்தில் ஆந்திர சகோதரர்கள் கவனம் செலுத்தாமல் சென்னை நகரைப் பற்றிய விவாதத்திலேயே கவனம் செலுத்துவார்கள். ஆகையால் ஆந்திர மாகாணம் ஆரம்பிக்கும் போதே அதன் அரசாங்கம் புதிய தலை நகரத்தில் புதிய கவர்னர் — புதிய மந்திரிகள் — புதிய காரியாலயங்களுடன் வேலை செய்யத் தொடங்க வேண்டும். இது விஷயத்தில் தமிழ் நாட்டுத் தலைவர்கள் கொஞ்சங்கூட விட்டுக் கொடுக்காமல் உறுதியாகவும் பிடிவாதமாகவும் இருப்பார்கள் என்று நம்புகிறோம்.

தொல்லைகள் தீரும்

வருஷா வருஷம் மாகாண காங்கிரஸ் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை இதுவரை அமுலில் இருந்து வந்தது. அந்த முறை எத்தனை தொல்லைகளுக்குக் காரணமாக இருந்தது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். தலைவர் பதவிக்குத் தகுதி வாய்ந்தவர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஒரு வருஷ காலத்திற்குள் தகுதியற்றவராகக் கருதப் படுவது வழக்கமாயிற்று! அதன் விளைவாகக் கட்சித் தலைவர் பதவியும், அதை யொட்டி மந்திரி பதவிகளும் நிலையற்று நித்திய கண்டமாக இருந்து வந்தன. திரை மறைவில் எல்லையற்ற பிரசாரங்கள் நடந்து வந்தன. ஒரு கட்சிக்குள் பல குட்டிக் கட்சிகள் முளைத்து வந்தன. எனவே, அத்தகைய விபரீத நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக இந்தியா பார்லிமெண்டரி போர்டார் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர். எந்த மாகாணத்திலும் சட்ட சபையிலுள்ள காங்கிரஸ் கட்சித் தலைவரின் பதவிக் காலம் சட்டசபையின் ஆயுள் காலத்துக்குச் சமமாக இருக்க வேண்டும் என்பதே அந்தத் தீர்மானம் ஆகும். அதைக் காங்கிரஸ் காரியக் கமிட்டியும் ஆமோதித்தது. அதை அநுசரித்து சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சியும் சட்டசபையின் ஆயுள் காலம் முடிந்து அது எப்போது கலைக்கப் படுகிறதோ, அப்போதுதான் கட்சித் தலைவரின் பதவி காலமும் முடிவடையும் என்று தீர்மானித்திருக்கிறது. சென்னை மாகாணத்தில் காங்கிரஸின் நற்பெயருக்குக் களங்கத்தை விளைவித்து வந்த பிரதி வருஷத் தேர்தல் தொல்லை ஒழிய வழி பிறந்தது வரவேற்கத் தக்கதுதான்.

இறங்கவில்லை!



"எங்களுக்குத் தெரிந்த வித்தைகளை யெல்லாம் செய்து பார்த்தும் உச்சாணிக் கிளைக்கு ஏறிய அகவிலையைக் கீழே இறங்கும்படிச் செய்ய முடியவில்லையே" என்று கனம் கோபால ரெட்டி அசெம்பிளியில்

உலகத்துக்கு ஒரு புதுமை!

அமெரிக்கா தேசம் அமெரிக்கர்களுக்குத்தான் சொந்தமேயன்றி வேறெந்த நாட்டினருக்கும் சொந்தம் என்று யாரும் சொல்லமாட்டார்கள்.

இங்கிலாந்து ஆங்கிலேயர்களுக்குத்தான் சொந்தமானது; அது தங்களுக்குத்தான் சொந்தம் என்று வேறு எந்தத் தேசத்தினராவது உரிமை கொண்டாடுவார்களா?

இலங்கை இலங்கையர்களுக்குச் சொந்தமானது; அது தங்களுக்குத்தான் சொந்தம் என்று வேறு எந்த நாட்டினர் கூறத் துணிவர்?

இவ்வாறே உலகத்திலுள்ள ஒவ்வொரு வல்லரசும், ஒவ்வொரு சிற்றரசும் அந்தந்த நாட்டு மக்களுக்குத்தான் சொந்தமானவை.

அந்தந்த தேசம் அந்தந்த தேச ஜனங்களுக்குச் சொந்தமாக இருப்பதைத்தான் சுதந்திரம் என்கிறோம்.

* * *

சென்ற வாரத்தில் இலங்கை செனேட் சபையிலே பார்லிமெண்டு தேர்தல் மசோதா விவாதத்துக்கு வந்தபோது, அதிலுள்ள அநீதியான அம்சங்களை அங்கத்தினர்கள் வெகு வன்மையாகக் கண்டித்தார்கள்.

"இலங்கை பார்லிமெண்டு தேர்தல் சட்டத் திருத்த மசோதா இங்குள்ள இந்தியத் தொழிலாளியின் நியாயமான உரிமையைப் பறிப்பதாக இருக்கிறது. இதன்படி இலங்கையில் பிறந்து வளர்ந்த இந்தியத் தொழிலாளிகளுக்குப் பிரஜா உரிமை இல்லவே இல்லை என்று ஏற்படும். இந்தத் தேசத்தில் பிறந்தவர்களுக்குப் பிரஜா உரிமை அளிக்க வேண்டியது அத்தியாவசியம் என்று சோல்பரி கமிஷன் சிபார்சு செய்தது. இந்த மசோதாவோ அந்த தர்ம நியாயமான சிபார்சுக்கு நேர் முரணாக இருக்கிறது" என்று ஓர் அங்கத்தினர் மசோதாவின் அநீதியை எடுத்துக் காட்டினார்.

"இலங்கையின் அரசியல் அபிவிருத்திக்குப் பொருளாதார முன்னேற்றம்தான் அடிப்படையாகும் என்று இலங்கைத் தலைவர்கள் கூறுகிறார்கள். ஆனால், அதே சமயத்தில் இந்த நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு முக்கியக் காரணஸ்தர்களான இந்தியத் தொழிலாளிகளை விரட்டிவிடப் பார்க்கிறார்கள். அவ்வாறு செய்வது இலங்கை அரசியல் திட்டத்தின் அடிப்படையான இலட்சியத்துக்கே விரோதமாகும். எனவே, அத்தகைய ஒரு மசோதாவைக் கொண்டுவர சர்க்காருக்குச் சட்டப்படி அதிகாரம் இல்லை" என்று சொல்லி மற்றொரு அங்கத்தினர் வாதாடினார்.

மேற்படி அங்கத்தினர்களின் கண்டனத்தை லட்சியம் செய்யாவிட்டாலும், பாரபட்சமற்ற ஐரோப்பிய அங்கத்தினர் ஒருவர் அந்தச் சபையில் கூறியதற்கு இலங்கை சர்க்கார் செவி சாய்க்காமல் இருக்க முடியாது.

கர்னல் ரைட் என்ற ஐரோப்பியர் மேலே குறிப்பிட்ட மசோதாவையும் அதன் சிருஷ்டி கர்த்தாக்களான இலங்கை சர்க்காரையும் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்.

அதிலிருந்தே அந்த மசோதா எவ்வளவு நேர்மையற்றது என்பதை எவரும் உணர்ந்து கொள்ளலாம்.

"இலங்கையில் தேசிய வெறி தாண்டவமாட ஆரம்பித்திருக்கிறது. மந்திரிகள் தாங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இங்குள்ள சில மந்திரிகளும் அரசியல் வாதிகளும் சென்ற பத்து வருஷங்களாக இந்தியர்கள்மீது தங்களுடைய வெறுப்பைக் காட்டி வந்திருக்கிறார்கள். இந்த மசோதா அத்தகைய வெறுப்பின் விளைவுதான்" என்று கர்னல் ரைட் இடித்துக் காட்டினார்.

எனவே, இதற்கு முன் இலங்கை சர்க்கார் கொண்டு வந்த அநீதியான மசோதாக்களின் ஜாப்தாவில் மேற்கண்ட மசோதாவும் சேர்ந்திருக்கிறது!

* * *

செனேட் சபையில் எழுந்த கண்டனமாரிக்கு இலங்கை சர்க்கார்

சார்பில் என்ன 'அற்புதமான' சமாதானம் கூறியிருக்கிறார்கள் தெரியுமா?

"பர்மா பர்மியர்களுடையது, மலேயா மலேயர்களுடையது, இலங்கை இலங்கையர்களுடையது என்ற கொள்கை அங்கீகரிக்கப்பட்டால்தான் ஆசியாவில் எழும் இத்தகைய கஷ்டங்களுக்குப் பரிகாரம் ஏற்படும்" என்று ஒரு பெரிய தத்துவத்தைக் கண்டுபிடித்தவர்போல் இலங்கைப் பிரமுகர் பதில் அளித்திருக்கிறார்.

ஒவ்வொரு நாடும் அந்தந்த நாட்டு மக்களுக்குச் சொந்தம் என்ற கொள்கையை யாரும் மறுக்கவில்லை.

எனவே, இலங்கை இலங்கையர்களுக்குத்தான் சொந்தம். அதை யார் ஆட்சேபித்தார்கள்?

ஆனால், இலங்கையில் பிறந்து வளர்ந்து—இலங்கையின் பொருளாதார சுபிட்சத்துக்காகப் பாடுபட்டு—இலங்கையைத் தாயகமாகக் கொண்டவர்களுக்குப் பிரஜா உரிமை அளிக்க மறுப்பது நீதியா என்பதுதான் இப்போது கேள்வியாகும்.

எந்தத் தேசத்திலும், அங்கு பிறந்து வளர்ந்தவர்களுக்கும் அதைத் தாயகமாகக் கொண்டவர்களுக்கும் பூரணப் பிரஜா உரிமை அளிப்பது தர்மமாக இருந்து வருகிறது.

இந்தியாவில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு மாத்திரமல்ல, இந்தியாவில் ஐந்து வருஷ காலம் வசித்தவர்களுக்குக்கூடப் பிரஜா உரிமை உண்டு என்ற அரசியல் தர்மம் இந்திய அரசியல் திட்டத்திலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது.

ஆனால், இலங்கையில் பிறந்து வளர்ந்து வாழ்க்கை முழுதும் பாடுபட்ட இந்தியர்களுக்கு மாத்திரம் இலங்கை சர்க்கார் பிரஜா உரிமை அளிக்க மறுப்பது தேச தர்மத்துக்கு விரோதம், அரசியல் தர்மத்துக்கு விரோதம், உலக தர்மத்துக்கு விரோதம், மானிட தர்மத்துக்கே விரோதம்!

அது உலகத்திலே எங்கும் கண்டும் கேட்டும் அறியாத ஒரு புதுமை!

ஒரு நாட்டில் பிறந்து வளர்ந்து அதைத் தாயகமாகக் கொண்டவர்களுக்கு அந்த நாட்டில் இருக்க உரிமை இல்லை என்றால், அமெரிக்காவில் அமெரிக்க வெள்ளையர்களுக்கும், ஆப்பிரிக்காவில் ஆப்பிரிக்க வெள்ளையர்களுக்கும், ஆஸ்திரேலியாவில் ஆஸ்திரேலியர்களுக்கும் இருக்க உரிமை இல்லை என்று ஏற்படும்.

ஏனெனில், அவர்கள் எல்லோரும் ஒரு காலத்தில் அந்த நாடுகளில் போய்க் குடியேறியவர்கள்தானே!

* * *

இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து அங்கு இந்தியர்கள் மிகுந்த கஷ்டத்துக்கு உள்ளாகி வருகிறார்கள்.

அவர்களுக்கு இலங்கை 'சர்க்கார் அடிமேல் அடிகொடுத்து வருகின்றனர்.

அங்குள்ள ஏழை இந்தியத் தொழிலாளர்கள் இந்தியாவிலுள்ள தங்களுடைய குடும்பங்களுக்குப் பணம் அனுப்புவதற்கு எத்தனையோ முட்டுக் கட்டைகள் போடப்பட்டிருக்கின்றன.

அவர்களுடைய பிரஜா உரிமையும் பறிக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஆலோசனைக்கு வந்துள்ள மசோதாவோ அங்குள்ள இந்தியர்களையெல்லாம் அரசியல் அனாதைகளாகும்படி செய்வதாக இருக்கிறது.

இதுவரையில் பார்லிமெண்டில் இந்தியர்களுக்கு ஓரளவு பிரதிநிதித்வம் இருந்து வந்தது. அதற்கும் முற்றுப் புள்ளி வைத்துவிட வேண்டும் என்பதே புதிய மசோதாவின் நோக்கம்.

இத்தகைய மசோதாக்களால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உள்ள நல்லுறவுக்குப் பாதகம் ஏற்படும் என்பதை இலங்கை சர்க்கார் அறிந்து கொள்ளாதது ஆச்சரியமாக இருக்கிறது.

அமெரிக்கா, பிரிட்டன் முதலிய வல்லரசுகள் இந்தியாவின் நட்பையும் இதர நாடுகளின் நல்லுறவையும் பெறப் பெரு முயற்சி செய்து வருகின்றன. அப்படியிருக்க, நேற்று சுதந்திரம் பெற்ற இலங்கை அடுத்துள்ள பிரம்மாண்டமான இந்தியாவை எப்படியாவது விரோதித்துக் கொள்ளப் பெரு முயற்சி செய்து வருகிறது!

அட்டைப்பட விளக்கம்

நிர்மானுஷ்யமான தீவில் பாழடைந்த பழைய மண்டபங்களுக்கும் பாறைச் சிற்பங்களுக்கும் மத்தியிலிருந்து ஒரு யௌவன புருஷனும் ஒரு யுவதியும் வந்தார்கள். மன்மதனையும் ரதியையும்போல அவர்கள் அழகு வாய்ந்திருந்தார்கள். ஜாவா தேசத்து நடன கோஷ்டியினரைப்போல விசித்திர ஆடை ஆபரணங்களைத் தரித்திருந்தார்கள். ஆனால் இனிய செந்தமிழில் வணக்கம் கூறினார்கள். இந்த அதிசய தம்பதிகளைப்பற்றிய "மோகினித் தீவு" என்னும் கதை இந்தக் "கல்கி" இதழில் வேறொரு பக்கத்தில் ஆரம்பமாகியிருக்கிறது. வரும் இதழ்களில் அவர்களுடைய வரலாற்றை அவர்களே சொல்லப் போகிறார்கள்.

ஆடல் பாடல்

கர்நாடகம்

மற்றொரு வெற்றி

"அபூர்வ சகோதரர்கள்" என்னும் படம் நாடெங்கும் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இதைத்தான் "மற்றொரு வெற்றி" என்று தலைப்பில் குறிப்பிட்டிருக்கிறேன். அப்படிச் சொல்லும் போது, ஜெமினி ஸ்டுடியோவின் வெற்றியையோ, ஸ்ரீ எஸ். எஸ். வாஸனுடைய வெற்றியையோ மனதில் வைத்துக்கொண்டு சொல்லவில்லை. "சுத்தமான நல்ல படங்களுக்கு நம் நாட்டிலே இடம் உண்டு" என்ற கட்சிக்காரர்களுக்கு இந்தப் படம் மற்றொரு வெற்றி என்றுதான் சொல்லுகிறேன்.

'ஸெக்ஸ் அப்பீல்' என்று சொல்லப்படும் ஆபாசக் காட்சிகளும், 'காமிக்'குகள் என்ற பெயரால் வழங்கும் விசித்திர நிகழ்ச்சிகளும் இருந்தால்தான் நம்முடைய நாட்டில் படங்கள் வெற்றிகரமாக ஓடும் என்று 'புரொட்யூஸர்கள்' என்று சொல்லப்படும் விசித்திர மனிதர்கள் முன்பெல்லாம் கூறுவதுண்டு. இதற்காக அவர்கள் நம்முடைய தேவர்கள் தேவியர்களைத் திரைகளிலே கொண்டு வந்து படாதபாடு படுத்தி வைப்பார்கள். பரமசிவனுடைய நெற்றியிலே நாமத்தைப் போடுவார்கள். மகாவிஷ்ணுவுக்கு நீண்ட தாடியைக் கொடுப்பார்கள். பிரம்மதேவனுடைய நாலு தலைகளையும் களிமண்ணாலே செய்து வைத்துவிடுவார்கள்!

இன்னும் இவர்கள் "பாமர மக்களுக்குப் பிடிக்கும்" என்று சொல்லிக் கொண்டு படங்களிலே புகுத்திய அக்கிரமங்களுக்குக் கணக்கே இல்லை. பெண்டாட்டியின் கையில் விளக்குமாற்றைக் கொடுத்துப் புருஷனை அடிக்கச் செய்வார்கள். படுக்கையறைக் கட்டிலின் கீழே சோர நாயகனை ஒளித்துவைப்பார்கள். உயிரோடு தவளைகளை விழுங்கச் செய்து "இது ஹாஸ்யம்! சிரியுங்கள்!" என்று சொல்லுவார்கள்.

இவையெல்லாம் ஆபாசமாயிருக்கின்றனவே, நம்முடைய பண்பாட்டுக்கெல்லாம் பெருமைக்கும் இழிவு தேடுகின்றனவே என்று சொன்னால், "உங்களுக்கு என்ன? நீங்கள் இப்படித்தான் சொல்லுவீர்கள். இந்தமாதிரி காட்சிகள் இருந்தால்தான் பாமர ஜனங்கள் படம் பார்ப்பார்கள்; நாங்கள் போட்ட பணம் திரும்பக் கிடைக்கும்!" என்று டாக்கி முதலாளிகள் பதில் சொல்லுவார்கள்.

மேலே நாம் அவர்களிடம் சொல்லுவதற்கு ஒன்றும் இராது. 'பாமர ஜனங்கள்' மீது என்ன பழியை வேண்டுமானாலும் போடலாம்! அந்த அப்பாவிகள் சுமந்துதான் தீரவேண்டும்! பாமர ஜனங்களைப் பற்றிப் பேச நமக்கு பாத்தியதை இல்லை. சினிமா முதலாளிகளுக்குத்தான் அந்த ஏகபோக உரிமை. "பாமர ஜனங்களுக்கு எது பிடிக்கும் என்பது உங்களுக்குத் தெரியாது!" என்று ஒரே போடாய்ப் போட்டு நம்முடைய வாயை அடைத்து விடுவார்கள்.

அப்படிப் பேசியவர்களுடைய கட்சி எவ்வளவு அபத்தமானது என்பதை "அபூர்வ சகோதரர்கள்" படம் நிரூபித்திருக்கிறது. ஒருவிதமான ஆபாசமும் இல்லாமல் படம் எடுத்தாலும் மற்ற நல்ல அம்சங்கள் பொருந்தியிருந்தால் பொது மக்கள் (பாமர ஜனங்கள் உட்பட) பார்ப்பார்கள், படம் வெற்றிகரமாக ஓடும் என்பதற்கு "அபூர்வ சகோதரர்கள்" ஒரு சிறந்த அத்தாட்சியாகும். ஆகையினால்தான், "சுத்தமான படங்கள் வேண்டும்" என்று சொல்லும் கட்சிக்கு இந்தப் படம் "மற்றொரு வெற்றி" என்று சொல்கிறேன். இதற்கு முன்னாலேயும் சில தூய்மையான படங்கள் வெளியாகி வெற்றி பெற்றிருக்கிறபடியால் இதை "மற்றொரு வெற்றி" என்று கூறுகிறேன்.

• • •

அலெக்ஸாண்டர் டூமாஸ் என்னும் பிரெஞ்சுக் கதை ஆசிரியர் விறுவிறுப்பான சம்பவங்கள் அடங்கிய கதைகளை எழுதுவதில் பிரசித்தி பெற்றவர். ஆனால் அவர் எழுதிய கதைகள் எல்லாம் சினிமாவுக்குப் பொருத்தமாயிரா. அப்படிச் சினிமாவுக்குப் பொருத்தமாயுள்ள கதைகளும் இந்திய வாழ்க்கையோடு ஒட்டி அமைவது துர்லபம். "கார்ஸிகன் பிரதர்ஸ்" என்னும் கதை சினிமா

வுக்குப் பொருத்தமாயும் இந்திய வாழ்க்கையோடு ஒருவாறு ஒட்டியமைக்கக் கூடியதாயும் உள்ளது. ஜெமினி ஸ்தாபனம் அப்படிப்பட்டக் கதையைத் தேர்ந்தெடுத்தது பற்றி முதலில் பாராட்ட வேண்டும்.

அபூர்வ சகோதரர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக் கொண்டு பிறந்தவர்கள். அவர்கள் பிறப்பதற்கு உதவி செய்த டாக்டர் சஸ்திர சிகிச்சை செய்து அவர்களைத் தனித் தனிக் குழந்தைகளாக்கி விடுகிறார். அவர்களுடைய தந்தையின் விரோதியான ஒரு ஜமீன்தாரின் சதிச் செயலினால் குழந்தைகள் தந்தையையும் தாயையும் இழந்து, காட்டில் ஒன்றும், வீட்டில் ஒன்றுமாக வளர்கின்றன. பிறக்கும் போது ஒட்டிக்கொண்டு பிறந்த காரணத்தினால் ஒரு சகோதரனுடைய உணர்ச்சி அநுபவங்கள் இன்னொரு சகோதரனை எப்போதும் பாதித்துக் கொண்டு வருகின்றன. கடைசியில் காட்டில் வளர்ந்த இளைஞன் காதல் வசப்படும்போது மற்றவனும் அந்த உணர்ச்சிக்கு ஆளாகிறான். இது காரணமாக அவர்களுடைய சகோதர வாஞ்சைக்கே பங்கம் உண்டாகும் போலிருக்கிறது. நல்லவேளையாக எதிரி மார்த்தாண்டன் அவர்களுடைய வாழ்க்கையில் குறுக்கிடுகிறான். ஒரு சகோதரன் எதிரியைக் கொல்லும் முயற்சியில் உயிரை விடுகிறான். இன்னொருவன் இழந்த ஜமீனைப் பெற்றுக் காதலித்த பெண்ணையும் மணந்து கொள்ளுகிறான்.

இந்த மோஸ் கதை விருவிருப்பான நிகழ்ச்சிகளும் உணர்ச்சிப் போராட்டங்களும் நிறைந்தது. அதில் சமய சந்தர்ப்பங்களுக்கேற்ப, இன்னும் பல புதிய நிகழ்ச்சிகளை அமைத்து "அபூர்வ சகோதரர்கள்" என்னும் படத்தை எடுத்திருக்கிறார்கள்.

கதாநாயனைச் சில நெருக்கடியான கட்டங்களுக்கு உட்படுத்தி அந்த நெருக்கடிகளிலிருந்து அவனை விடுவிக்கும் இடங்கள் மிகச் சாதுர்யமாய் அமைந்திருக்கின்றன.

* * *

சிலவா ரசிகர்கள் வியந்து பாராட்டும்படியான நடிப்புத் திறமையை இந்தப் படத்தில் காணலாம். பதினைந்து வருஷத்துக்கு முன்னாலேயே பதிபக்தி, சதி லீலாவதி முதலிய நாடகங்களில் ஸ்ரீ எம். கே. ராதா மிகவும் சோபித்தார். பிறகு அவர் நடித்த சினிமாப் படங்களில் அவரது நடிப்புத் திறமை அவ்வளவாகப் பிரகாசிக்கவில்லை. அதற்குக் காரணம் படம் எடுத்தவர்களே தவிர அவர் இல்லை என்று இந்தப் படத்தின் மூலம் ருசுவாகிறது. அபூர்வ சகோதரர்கள் இரண்டு பேர் வேஷத்திலும் ஸ்ரீ எம். கே. ராதா அபூர்வமாக நடித்திருக்கிறார். வெவ்வேறு முரண்பட்ட உணர்ச்சிகளை வெகு அற்புதமாக முகபாவத்திலும் பேச்சிலும் வெளிப்படுத்தி நடித்திருக்கிறார். முக்கியமாக, காட்டிலே வளர்ந்து உலகமறியாத சாதுவாக நடிக்கும் இடத்திலும், சகோதரனுடைய உணர்ச்சிகளுக்குத் தான் அடிமையாக இருந்து அவதிப்படுவதைக் குறித்து முறையிடும் இடத்திலும், சகோதரனிடம் உள்ள பாசமும் அருமையும் மனதில் போராடும் இடத்திலும் அவரது உன்னத நடிப்புத் திறன் வெளியாகிறது.

மார்த்தாண்டன் என்னும் ஜமீன்தாராக நடிக்கும் நாகேந்திர ராவின் நடிப்புத் திறமையை மிகச் சிறந்த மேனாட்டு நடிகரின் நடிப்புத் திறமையுடனேதான் ஒப்பிட வேண்டும். அவருடைய முகமும் கண்களும் மீசையும் புருவங்களும் மன நிலையைச் சில சமயம் வெளிப் படுத்தவும் சில சமயம் மறைத்து வைக்கவும் உபயோகப்படுகின்றன. அவர் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் அந்த அந்த வார்த்தையின் தொனியும் பாவ பூர்வமாய் அர்த்த புஷ்டியுடன் வெளிவருகின்றன. குருட்டுக் காதலினால் மதி மோசம் போன அசட்டுக் காதலனாக நடிக்கும் இடங்கள் வெகு ரஸமாயிருக்கின்றன.

ஸ்ரீமதி பானுமதி உல்லாஸ ஒய்ய நடிப்பில் அவருக்கு இணையில்லை என்று சொல்லக் கூடியவாறு நடித்திருக்கிறார். சமையல் அறையிலிருந்து வெளியேறுவதற்காக அங்கிருந்த சிப்பாய்களையும் பிறகு காவல்காரனையும் ஏமாற்றும் இடங்கள் பிரமாதம். மறுபடியும் ஒரு தடவை காவலாளிகளிடமிருந்து தப்புவதற்காக முயன்று நாட்டியக்காரிகளின் கோஷ்டியில் புகுந்து அவர்களைப் போல் தானும் ஆட முயன்று தப்புத் தவறுமாகக் கையைத் தூக்கும் கட்டம் பிரமாதத்துக்கும் மேலே. ஸ்ரீமதி பானுமதியின் நடிப்புத் திறன் இவ்வளவு என்பதைக் கண்டுபிடித்து இந்தப் படத்தில் பூரணமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

* * *

கதைப் போக்கின் அமைப்பு, டைரக்ஷன் திறமை, ஸ்டுடியோ வசதி, 'டெக்னீஷியன்'களின் ஆற்றல் ஆகியவற்றினாலேயே ஒரு படத்தை மிக வெற்றிகரமாய் எடுக்கலாம் என்பதற்கு "அபூர்வ சகோதரர்கள்" சிறந்த உதாரணமாகும்.

கதைப் போக்கில் சில இடங்களில் சந்தேகம் எழுகின்றது. (1) ஒரு சகோதரனை

அடித்தால் இன்னொரு சகோதரனுக்கு வலிக்கிறது அல்லவா? அது போலவே ஒரு சகோதரன் காதலில் இன்பமுற்றால் இன்னொரு சகோதரனும் இன்பந்தானே அடைய வேண்டும்? ஏன் துன்பமும் அருமையும் அடைகிறான்? (2) இரண்டு சகோதரர்களையும் ஒருவரை யொருவர் கத்தியால் குத்த முயன்று கீழே விழுந்து புரளும்போது கதாநாயகி ஓடி வந்து அவர்களுடைய சண்டையைத் தீர்க்க ஏன் முயலவில்லை? (3) கடிதம் எழுதி வைத்து விட்டு ஓடிப் போனவள் வேறு எங்கேயாவது தொலைந்து போகாமல் தன்னைக் கெடுக்க முயன்ற மார்த்தாண்டன் இருக்குமிடத்துக்கே போய்ச் சேர்வது ஏன்? — இம்மாதிரி சந்தேகங்கள் சில சமயம் ஏற்படுகின்றன. ஆனால் அவற்றைக் குறித்து யோசிப்பதற்கு நமக்கு அவகாசம் கிடைப்பதில்லை. அடுத்த நிகழ்ச்சி, அதற்கடுத்த நிகழ்ச்சி, மோதிக்கொண்டு வந்து நம்மைத் திணறச் செய்கின்றன. படத்தில் 'டெம்போ' என்று சொன்னால் இந்தப் படத்திலேதான் பார்க்க வேண்டும். 'படம் ஓடுகிறது' என்று சாதாரணமாய்ச் சொல்லுவதுண்டு. இந்தப் படமோ விழுந்தடித்து ஒரே ஓட்டமாய் வாயுவேக மனோவேகமாய் ஓடுகிறது. பார்ப்பவர்களுக்கு மூச்சு விடக் கூட அவகாசம் கிடைப்பதில்லை. யோசிப்பதற்கு நேரம் எப்படி இருக்கும்?

• • •

"அபூர்வ சகோதரர்கள்" என்னும் படம் தமிழ், ஹிந்தி என்னும் இரு பாஷைகளிலும் நாலே மாதத்தில் எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

நாலு மாதத்தில் படம் எடுப்பது ஒரு பெரிய காரியம் இல்லை. ஏதாவது ஒரு குப்பைப் படத்தை நாலு மாதத்தில் எடுத்து விட்டால் அதற்காக யாரும் பெருமை யடித்துக் கொள்ள முடியாது. படம் நன்றாயில்லாவிட்டால் "யார் இவ்வளவு அவசரப்பட்டுப் படம் எடுக்கச் சொன்னது?" என்றுதான் கேட்கத் தோன்றும்.

நாலு மாதத்திற்குள்ளே நல்ல படமாகவும் எடுத்து வெற்றி பெற்றால் அது பாராட்டப்பட வேண்டிய காரியந்தான்.

ஹிந்தியில் இதே படம் "நிஷான்" என்னும் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. அதையும் நான் பார்க்க நேர்ந்தது. தமிழைக் காட்டிலும் இரண்டொரு அம்சங்களில் திருத்தமாகவே அமைந்திருக்கிறது.

உதாரணமாக, தமிழ்ப் படத்தில் குழந்தைகளுக்குச் சிகிச்சை செய்யும் டாக்டரின் தாடி இருபது வருஷ காலம் ஒரே மாதிரியாக இருக்கிறது. ஹிந்திப் படத்தில் தாடிக்கும் வயதாகி மாறுதல் அடைந்திருப்பதைப் பார்க்கலாம்.

ஹிந்தி "நிஷான்" வடநாட்டில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது என்று தெரிகிறது. தமிழர் ஒருவர் நல்ல முறையில் ஒரு காரியத்தைச் செய்து நாடெங்கும் புகழ்பெற்றால் அதைப் பற்றிப் பெருமை கொள்ள நமக்கு உரிமை உண்டு. ஆகையால் ஸ்ரீ எஸ். எஸ். வாஸனுடைய வெற்றியைத் தமிழ்நாட்டின் வெற்றியாகவே கருதி மிக்க மகிழ்ச்சி யடைகிறோம்.

இது மேனாட்டின் பிரபலமான ஆசிரியரின் கதை யொன்றை வைத்து எடுத்த படம். இங்கிலீஷிலும் ஏற்கெனவே படமாக வெளியாகி யிருக்கிறது. உள்நாட்டுக் கதையைக் கொண்டு இம்மாதிரி உயர்ந்த முறையில் படம் எடுத்திருந்தால் சர்வதேசப் பிரசித்தி அடைந்திருக்கும்.



இந்தியன் பாங்கில் சீப் அக்கௌண்டெண்டாக இருந்து பாங்கில் உள்ள சிப்பந்திகள், மேலதிகாரிகள், பொது மக்கள் எல்லாரிடமும் நன்மதிப்புப் பெற்று வந்த ஸ்ரீ கே. பி. சுந்தரம் ஐயர் அவர்கள் தம்முடைய ஐம்பத்தாறாவது வயதில் சென்ற 18உ வெள்ளிக்கிழமை யன்று காலமானார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். அவருடைய பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் நம்முடைய மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

கல்கி

25. இதய தாபம்

மூமுத்துண்டு விரதம் கொண்ட காந்தி மகான் மதுரையிலிருந்து திருநெல்வேலிக்குப் போனார். காந்திஜியின் விரதத்தைப் பற்றிய செய்தி அவருக்கு முன்னாலேயே திருநெல்வேலிக்குச் சென்று விட்டது. அதை அறிந்த திருநெல்வேலி மக்கள் பக்தி பரவசமாயிருந்தார்கள். காங்கிரஸ் தொண்டர்களும் பொதுமக்களைக் கட்டுக்குள்ளே வைப்பதற்குப் பெரு முயற்சி செய்தார்கள். ஆகையால் பெருந் திரளான மக்கள் கூடியிருக்கும் பொதுக் கூட்டத்தில் அமைதியும் நிசப்தமும் நிலவியது. இதைக் குறித்துக் காந்திஜி திருநெல்வேலி ஜனங்களைப் பெரிதும் பாராட்டினார். "இந்தமாதிரி ஒழுங்கும் கட்டுப்பாடும் இந்தியா தேசமெங்கும் நிலைநாட்டப் பட்டுவிட்டால், நம்முடைய இயக்கம் வெற்றி அடைவது பற்றி எனக்கு யாதொரு சந்தேகமும் இல்லை" என்று மகாத்மா கூறினார். பின்னர் இராட்டையின் தத்துவத்தைப் பற்றித் தம்முடைய கருத்துக்களை அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறினார்.

காந்திஜி ஒரு ஊருக்குப் போய் ஜாகையில் இறங்கியவுடனே அவரைப் பார்ப்பதற்கு அந்த ஊர்ப் பிரமுகர்கள் பலர் வருவது வழக்கம். அப்படி வருகிறவர்கள் எல்லாரும் காந்திஜியிடம் பக்தி கொண்டவர்கள் என்றோ, அவருடைய போதனைகளைக் கடைப்பிடிக்கிறவர்கள் என்றோ சொல்ல முடியாது. "காந்திஜியைப் பார்த்துப் பேசினேன்" என்று பெருமையுடன் சொல்லிக் கொள்வதற்காகவே பலர் வந்து சேர்வார்கள். இப்படிப்பட்ட வீண் பெருமைக்காரர்கள் வந்து மகாத்மாவைப் பார்த்துப் பேசுவதற்குத் திருநெல்வேலியில் ஒரு தடை ஏற்பட்டது.

மௌலானா ஆஸாத் ஸோபானி காந்திஜியுடன் பிரயாணம் செய்தார் அல்லவா? காந்திஜி முமுத்துண்டு விரதம் கொண்டது பற்றி மதுரையிலிருந்து திருநெல்வேலி போகும்போது மௌலானா ஆஸாத் யோசனை செய்தார். இஸ்லாமிய மதக் கொள்கையின்படி இன்றியமையாத உடையை மட்டும் அணிந்துகொண்டு மற்றதை யெல்லாம் அவரும் புறக்கணித்தார். இடுப்பில் லுங்கியும் மேலே 'வெயிஸ்ட் கோட்'டும் அணிந்து கொண்டு அசல் முஸ்லிம் 'பக்கிரி'யைப் போல் தோற்றம் கொண்டார். திருநெல்வேலியில் காந்திஜி தங்கிய ஜாகையில், அவர் தங்கியிருந்த அறைக்கு வெளிப்புறத்து அறையில் இவர் உட்கார்ந்து கொண்டார். மகாத்மாவைப் பார்க்க வருகிறவர்களிடம், "உங்கள் உடம்பின் மேல் உள்ள விதேசித் துணிகளை இங்கே களைந்து எறிந்துவிட்டு உள்ளே மகாத்மாவைப் பார்க்கப் போங்கள்!" என்று சொன்னார்.

வந்தவர்களில் சிலர் மனப்பூர்வமாக விதேசித் துணிகளைக் கழற்றிக் கொடுத்தார்கள். ஒரு சிலர் வேறு வழியில்லாதபடியால் மனமின்றிக் கொடுத்தார்கள். இன்னும் சிலர் விதேசித் துணிகளைக் கொடுக்க மனமில்லாமல் "மகாத்மாவைப் பார்க்க வேண்டாம்" என்று திரும்பி ஓடியே போய்விட்டார்கள்.

இவ்வாறு வீணர்கள் வந்து மகாத்மாவின் ஓய்வைக் கெடுப்பதற்கு ஒரு முட்டுக்கட்டை திருநெல்வேலியில் ஏற்பட்டது.

விதேசித் துணிகளைத் தியாகம் செய்யத் துணிந்து காந்திஜியைத் திருநெல்வேலியில் வந்து பார்த்தவர்களில் ஒருவர் திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தவர். அவர் சென்னை மாகாணத்தில் தீண்டா வகுப்பார் அநுபவிக்கும் இன்னல்களைப் பற்றி மகாத்மாவிடம் எடுத்துச் சொன்னார். தீண்டாதார் ஹிந்துக்களாயிருந்த போதிலும் அவர்கள் ஹிந்து ஆலயங்களில் விடப்படுவதில்லை யென்ற அநீதியைப்

பற்றி உருக்கமாகக் கூறினார். இந்த அநீதியைப் போக்குவதற்காகத் திருவாங்கூரில் சில சீர்திருத்த வாதிகள் ஆலயப் பிரவேச இயக்கம் ஆரம்பிக்க விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

"என்னமாதிரி இயக்கம் ஆரம்பிக்க உத்தேசம்?" என்று காந்திஜி கேட்டார்.

"முக்கியமான கோவில் ஒன்றில் உற்சவம் நடக்கப்போகிறது. அச்சமயம் ஒரு பெரிய தீண்டாதார் கும்பலை அழைத்துக்கொண்டு கோயிலுக்குள் பிரவேசிப்போம். அதை அரசாங்க அதிகாரிகளும் மற்ற ஹிந்துக்களும் தடுத்தாலும் நாங்கள் பின்வாங்கப் போவதில்லை. பலவந்தமாகப் பிரவேசித்தே தீர்வோம்" என்றார் வந்தவர்.

"கலகம் நேர்ந்தால்?" என்று மகாத்மா கேட்டார்.

"கலகம் நேர்ந்தாலும் நேரட்டும். அதற்காக நாம் என்ன செய்வது?" என்றார் வந்த மனிதர்.

அது சரியான மனோபாவம் அல்ல என்பதை மகாத்மா காந்தி அவருக்கு எடுத்துக் காட்டினார்.

"தீண்டாமை பெரிய அநீதிதான். ஹிந்துக்களில் ஒரு பகுதியாரை ஆலயங்களில் விடுவதில்லை என்பது பெருங் கொடுமைதான். ஆனால் அநீதியையும் கொடுமையையும் பலாத்காரத்தினால் போக்க முடியாது. தீண்டாமை போக வேண்டுமானால் சாதி ஹிந்துக்களின் மனம் மாற வேண்டும். பலாத்காரத்தினால் சாதி ஹிந்துக்களின் மனதை மாற்ற முடியாது. குரோதமும் துவேஷமும் அதிகமாகும். ஆகையால் ஆலயங்களுக்குள் போவதாயிருந்தால், இரண்டு பேர் அல்லது மூன்று பேராகப் போங்கள். பலாத்காரத்தைக் கையாள வேண்டாம். அதிகாரிகள் சிறைக்கு அனுப்பினால் செல்லுங்கள். இதுதான் சரியான முறை. இப்போது நான் இந்தியாவின் விடுதலையைக் கருதி ஒத்துழையாமை இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறேன். எனக்கு நீங்கள் கொஞ்சம் அவகாசம் கொடுத்தால் தேச விடுதலை இயக்கம் முடிவடைந்த பிறகு நானே ஆலயப் பிரவேச இயக்கத்தையும் முன்னின்று நடத்துவேன்!" என்றார் காந்தி மகான்.

தீண்டாமையின் கொடுமையைப் பற்றி ஏற்கெனவே மகாத்மாவுக்குத் தெரிந்துதானிருந்தது. தீண்டாமை விலக்கைக் காங்கிரஸ் திட்டங்களில் ஒன்றாகச் சேர்த்திருந்தார். ஆயினும் மேற்படி சம்பாஷணையின் பயனாக மகாத்மாவின் மனம் தீண்டாமை விலக்குப் பற்றி அதிகமாகச் சிந்திக்கத் தொடங்கியது. பிற்பாடு மகாத்மா காந்தி பேசிய இடங்களில் எல்லாம் தீண்டாமை விலக்கைப் பற்றியும் அதிகமாக வற்புறுத்திப் பேசலானார்.

பின்னால் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தி வைக்க நேர்ந்தபோது, காந்திஜி தீண்டாமை விலக்கிலும் ஆலயப் பிரவேச இயக்கத்திலும் பூரணமாகக் கவனம் செலுத்தியதை நாம் அறிவோம் அல்லவா? காந்தி மகாத்மாவின் பெரு முயற்சியினால் ஹிந்து சமூகத்துக்கு ஏற்பட்டிருந்த தீண்டாமை என்னும் நோய் நம்முடைய காலத்திலேயே தொலைந்து ஒழிந்து போனதைப் பார்த்தோம்.

• • •

திருநெல்வேலியிலிருந்து மகாத்மா திரும்பி மதுரை-திருச்சி வழியாக ஈரோட்டுக்கு வந்தார். ஈரோட்டில் அச்சமயம் சிறந்த காங்கிரஸ் தலைவராக விளங்கிய ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களின் இல்லத்தில் தங்கினார். ஈரோட்டில் சிற்றாற்றங்கரையில் ஒரு விசாலமான ஆலமரத்தின் அடியில் பொதுக் கூட்டம் மிக அமைதியாக நடந்தது. பல சமூகங்களின் சார்பாக வேலைப்பாடு அமைந்த வெள்ளிப் பேழைகளில் உபசாரப் பத்திரங்கள் மகாத்மாவுக்கு அளிக்கப் பட்டன. வெள்ளிப் பெட்டிகளையெல்லாம் பொதுக் கூட்டத்தில் ஏலம் போட்டுக் கிடைத்த பணம் திலகர் சுயராஜ்ய நிதியில் சேர்க்கப்பட்டது. மகாத்மாவுக்கு எங்கே எந்தவிதமான பரிசுப் பொருள் கிடைத்தாலும் அங்கேயே ஏலம் போட்டு ஏதேனும் ஒரு பொது நிதியில் பணத்தைச் சேர்த்து விடுவது வழக்கம்.

பொது நிதிகள் சேர்ப்பதில் மகாத்மாவுக்கு இணையான ஆற்றல் வாய்ந்தவர் யாருமே கிடையாது. அப்போதெல்லாம் பல பெண்மணிகள் மகாத்மாவைத் தரிசிக்கப் பக்தியுடன் வருவார்கள். தமிழ் நாட்டுப் பெண்மணிகள் நிறைய நகைகள் அணிந்து கொண்டிருப்பது வழக்கமல்லவா? தம்மைப் பார்க்க வரும் பெண்மணிகளைப் பார்த்து, "இந்த நகைகளை எதற்காகச் சுமக்கிறீர்கள்? என்னிடம் கழற்றிக் கொடுத்து விடுங்கள். நல்ல காரியத்துக்குப் பயன்படுத்துகிறேன்" என்று காந்திஜி கூசாமல் கேட்டு விடுவார். இந்த வழக்கத்தை அறிந்த பிறகு பெண்மணிகள் மகாத்மாவின் அருகில் போய் அவரைத் தரிசித்துப் பேசவேண்டும் என்று ஆசைப்படுவது குறைந்து போயிற்று.

ஈரோட்டிலிருந்து கோயமுத்தூருக்குப் போய்ப் பிறகு காந்திஜி சேலத்துக்குப் போன போது ஒரு சிறு சம்பவம் நிகழ்ந்தது. அப்போது சேலம் டாக்டர் வரத

ராஜுலு நாயுடு காங்கிரசின் முன்னணித் தலைவர்களில் ஒருவராயிருந்தார். அவர் தமது குடும்பத்துடன் மகாத்மாவைப் பார்ப்பதற்கு வந்தார். டாக்டர் நாயுடுவின் குமாரி, ஏழு வயதுப் பெண், கையில் பொன் வளையல்கள் அணிந்திருந்தாள். மகாத்மாஜி அதைப் பார்த்ததும் "இந்த வளையல்கள் உனக்கு என்னத்திற்கு? எனக்குக் கொடுத்து விடு!" என்றார். மகாத்மா கூறியதை ஸ்ரீ நாயுடு தமிழில் குழந்தைக்குச் சொன்னார். குழந்தை உடனே வளையல்களைக் கழற்றிக் கொடுத்து விட்டாள். "நான் விளையாட்டாகக் கேட்டேன், அம்மா! நீயே வைத்துக் கொள்!" என்று மகாத்மா பல தடவை சொல்லியும் அந்தக் குழந்தை கேட்கவில்லை. மகாத்மாவிடமிருந்து வளையல்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளக் கண்டிப்பாக மறுத்து விட்டாள்.

நாகபுரி காங்கிரஸின் அக்கிராசனர் சேலம் ஸ்ரீ சி. விஜயராகவாச்சாரியார் அல்லவா? நியாயமாக, அந்த வருஷத்தில் காங்கிரஸ் வேலைகள் எல்லாம் ஸ்ரீ விஜயராகவாச்சாரியாரின் தலைமையில் நடைபெற வேண்டும். அதற்குப் பதிலாக மகாத்மாவிடமும் அவருடைய சகாக்களிடமும் காங்கிரஸ் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு வந்து விட்டது. எனினும், பெருந் தன்மை மிக்க மகாத்மா சேலத்தில் ஸ்ரீ விஜயராகவாச்சாரியாரைப் பார்ப்பதற்கு அவருடைய வீட்டுக்குச் சென்று சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுத் திரும்பினார்.

சேலம் நகர சபையார் காந்தி மகாத்மாவுக்கு மிக வேலைப்பாடமைந்த சந்தன மரப்பெட்டி ஒன்றில் உபசாரப் பத்திரம் வைத்துக்கொடுத்தார்கள். அந்தச் சந்தன மரப் பெட்டி அப்போது சென்னைக் கவர்னராக வந்திருந்த லார்ட் வில்லிங்டனுக்காகச் செய்யப்பட்டது. ஆனால் அதை வில்லிங்டனுக்குக் கொடுப்பதற்குள்ளே ஒத்துழையாமை இயக்கம் தோன்றிவிட்டது! தமிழ் நாட்டில் ஒத்துழையாமை இயக்கத்துக்குத் தலைமை வகித்த ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் சேலத்தைச் சேர்ந்தவர். சேலம் ஜில்லா அந்த இயக்கத்தின் முன்னணியில் நின்றது. மற்ற எந்தத் தமிழ் நாட்டு நகரத்தைக் காட்டிலும் சேலத்தில் அதிகமான வக்கீல்கள் தங்கள் தொழிலை நிறுத்தி மகாத்மாவின் இயக்கத்தில் சேர்ந்தார்கள். அப்படிப்பட்ட சேலத்தில் நகர சபையும் தேசிய மனப்பான்மை கொண்டிருந்தது. கவர்னருக்கு வரவேற்பு அளிக்கும் உத்தேசத்தை அடியோடு கைவிட்டுச் சேலம் நகர சபையார் கவர்னருக்காகத் தயாரித்திருந்த சந்தனப் பெட்டியை மகாத்மா காந்திக்குக் கொடுத்ததில் வியப்பில்லையல்லவா?

லார்டு வில்லிங்டனுக்கு அந்தப் பெட்டியைக் கொடுத்திருந்தால் லேடி வில்லிங்டன் இந்தியாவிலிருந்து கொண்டு போன எத்தனையோ விலையுயர்ந்த பொருள்களுடன் அதுவும் இங்கிலாந்துக்குப் போயிருக்கும். ஆனால் மகாத்மாவுக்குக் கொடுத்த பெட்டி சேலத்திலேயே ஏலத்துக்கு விடப்பட்டு விட்டது.


தமக்காகச் செய்த பெட்டியை மகாத்மா பெற்றுக் கொண்டார் என்ற விவரம் லார்டு வெல்லிங்டனுக்குத் தெரியாமலிருக்க முடியுமா? தெரிந்துதானிருக்கும். அதை அவர் ஞாபகம் வைத்துக் கொண்டிருந்தாரா என்பது நமக்குத் தெரியாது.

ஆனால் ஒன்று தெரியும். லார்டு இர்வின் 1931-ம் வருஷக் கடைசியில் வைஸராய் பதவியிலிருந்து விலகி இங்கிலாந்து போனதும் லார்டு வில்லிங்டன் அந்தப் பதவிக்கு வந்து சேர்ந்தார். லார்டு வில்லிங்டன் செய்த முதற்காரியம் லண்டன் வட்டமேஜை மகாநாட்டிலிருந்து திரும்பி வந்த மகாத்மா காந்தியைக் கைது செய்து சிறைக்கு அனுப்பியதுதான்! மகாத்மா காந்திக்குப் பேட்டி கொடுக்கவும் லார்ட் வில்லிங்டன் இணங்கவில்லை. "சட்ட மறுப்பைக் கைவிட்டுச் சரணாகதி அடைந்தால்தான் பேட்டி கொடுக்க முடியும்" என்றார். "அதற்கு இஷ்டம் இல்லாவிட்டால் போங்கள் சிறைக்கு!" என்றார். இதைப் பற்றிப் பின்னால் விவரமாகப் பார்ப்போம்.

• • •

சேலத்தில் காங்கிரஸ் ஊழியர்கள் பலர் மகாத்மாவைப் பேட்டி கண்டார்கள். மேலே நடக்கவேண்டிய காரியங்களைப் பற்றிக் கேட்டார்கள். "இங்கிருந்து நேரே நான் குஜராத்துக்குப் போகிறேன். அடுத்த மூன்று மாதமும் குஜராத்தில்தான் இருப்பேன். சாத்விகச் சட்ட மறுப்புப் போரை ஆரம்பிப்பதற்குக் குஜராத்தைத் தயார் செய்வேன்!" என்று மகாத்மா காந்தி சேலம் காங்கிரஸ் ஊழியர்களிடம் கூறினார்.

"ஒரு வருஷத்தில் சுயராஜ்யம்" என்று மகாத்மா கூறினார் அல்லவா? அந்தத் தவணை நெருங்கி வந்து கொண்டிருந்தது. அது நெருங்க நெருங்க மகாத்மாவின் இதய தாபமும் அதிகமாகிக் கொண்டிருந்தது. வேறு எந்தக் காரியத்திலும் அவருடைய மனது செல்லவில்லை. சுயராஜ்யத்துக்காக நடத்த வேண்டிய இறுதிப் போரைப் பற்றியே மகாத்மா காந்தியின் உள்ளம் சிந்திக்கத் தொடங்கியது.



திருவையாறு திருவிழா

கோட்டு வாத்தியம் ஸ்ரீ துரையப்ப பாகவதர்

2. கோஷ்டிப் பிரிவினை

திருவையாறு திருவிழா இப்படிப் பெரிய உற்சவமாக வருஷா வருஷம் நடந்துவந்தது. இந்தச் சமயத்தில் நெற் பயிர்களில் பூச்சிகள் விழுவது போலவும், நல்ல மரத்தில் புல்லுருவி பாய்வது போலவும் சிறப்பாக நடந்து வந்த தியாகப் பிரம்ம உற்சவத்திலும் சில இடையூறுகள் தோன்றின. விஷமிகளும் பொறாமைக்காரர்களும் தங்கள் பணியில் ஈடுபட்டனர். பக்திமானாகிய நரசிம்ம பாகவதரைப் பற்றி அவர் சகோதரர் பஞ்சு பாகவதரிடமும், பஞ்சு பாகவதரைப் பற்றி நரசிம்ம பாகவதரிடமும், இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி, அவர்களுக்குள் அபிப்பிராய பேதங்களை உண்டாக்கி வைத்தார்கள். பொது மக்களுடைய உதவியால் வருவாகும் சாமான்கள் பூராவையும் பஞ்சு பாகவதர் தியாகப் பிரம்ம உற்சவ கைங்கரியத்தில் சமர்ப்பிப்பதில்லை என்றும் வித்வான்கள் மூலம் வருவாகும் ரூபாய்களை நரசிம்ம பாகவதர் சொந்த உபயோகத்துக்கு எடுத்துக் கொள்கிறார் என்றும் அவதூறுசொல்ல ஆரம்பித்துவிட்டனர்.

ஒரு வருஷம் தியாகப்பிரம்மத்தின் ஐந்தாம் நாள் உற்சவத்தன்று நரசிம்ம பாகவதருக்கும் பஞ்சு பாகவதருக்கும் சண்டை ஏற்பட்டு விட்டது. சகோதரர்களுக்குள் கலகம் மூட்டி விட்டனர் பொறாமைக்காரர்கள். "தியாகப் பிரம்ம உற்சவத்தின் வரவு சம்பந்தமாக ஊழல் நடப்பதாகக் கேள்விப்படுகிறேன்" என்று ஒருவருக்கு ஒருவர் கடுமையாகப் பேசிக்கொண்டு விரோதிகளாகி விட்டனர்.

உற்சவத்திற்கு வந்த பிரமுகர்களில் பலர் மிகவும் கஷ்டப்பட்டு அவர்களைச் சமாதானப்படுத்தினர். என்றாலும் உற்சவத்திற்கே சோதனைக் காலம் வந்துவிட்டது! மறு வருஷ உற்சவத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகையில் நரசிம்ம பாகவதர் தியாகப் பிரம்ம ஆராதனை உற்சவத்தைக் கும்பகோணத்தில் நடத்தப் போவதாகப் பத்திரிகைகளை அச்சிட்டு வெளியிட்டார். இதையறிந்த பஞ்சு பாகவதரும் திருவையாற்றில் உள்ள பக்தர்களும் பொது மக்களும் மிகுந்த வருத்தமடைந்தனர்.

சில பிரமுகர்கள் பஞ்சு பாகவதரை அழைத்துக் கொண்டு கும்பகோணம் வந்து நரசிம்ம பாகவதரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும்படி செய்தார்கள். பரஸ்பரம் ஏற்பட்ட மனத்தாங்கல்களை இருவரும் மறந்து உற்சவத்தை வழக்கம்போல் திருவையாற்றில் நடத்துவதுதான் சிறந்தது என்றும், சத்குருவின் அதிஷ்டானம் அங்கிருக்கையில் வேறு இடத்தில் உற்சவத்தை நடத்துவது உசிதமில்லை யென்றும் எவ்வளவோ எடுத்துச் சொன்னார்கள். நரசிம்ம பாகவதர் இணங்குவதாயில்லை. "நான் இனிமேல் கும்பகோணத்திலேயே உற்சவத்தை நடத்த உத்தேசித்து விட்டேன். வேண்டுமானால் என் தம்பியும் மற்றவர்களும் என்னுடன் சேர்ந்து கொள்வதில் எனக்கு ஒருவித ஆட்சேபணையுமில்லை" என்று தெரிவித்து விட்டார்.



மாங்குடி சிதம்பர பாகவதர்

கும்பகோணத்தில் பிரபலமாயிருந்த பாகவதர்களும் மற்ற சங்கீத வித்வான்களும் நரசிம்ம பாகவதரையே ஆதரித்துப் பேசினார்கள். ஆகவே தம்முடைய முயற்சி

யில் தோல்வியடைந்த பஞ்ச பாகவதரும் இதர பிரமுகர்களும் திருவையாறு வந்து அங்குள்ளவர்களிடம் கலந்து ஆலோசித்தார்கள். சுமார் அறுபது வருஷங்களுக்கு மேலாக நடந்து வந்திருக்கும் ஸ்ரீ தியாகப்பிரம்ம ஆராதனை உற்சவத்தைத் திருவையாற்றிலேயே தொடர்ச்சியாக நடத்துவது தான் முறை என்று நிர்மாணித்தனர்.

இதுவரையில் திருவையாற்றில் நடத்தப்பட்டு வந்த தியாகப் பிரம்ம ஆராதனை உற்சவங்களைப்போலவே சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தார்கள். அதற்காகப் பஞ்சபாகவதருடன் ஒத்துழைக்கத் திருவையாறு வக்கில் சீதாராமய்யர், ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யர், கல்யாணபுரம் விசுவநாத சாஸ்திரிகள், சேமம் நடேச ஐயர், உடையாள்புரம் சுவாமிநாத ஐயர், பழமார்நேரி சுவாமிநாத ஐயர், மகாவைத்தியநாத ஐயர் குமாரர் வேதாரண்ய பாகவதர், ராஜகோபால பாகவதர், சுப்ரமண்ய அய்யர் ஆகியோர் முன் வந்தனர். புஷ்ய பகுள பிரதமை முதல் பஞ்சமிவரை ஐந்து தினங்கள் வழக்கம்போலத் திருவையாற்றில் ஆராதனை உற்சவம் நடைபெறும் என்று பத்திரிகைகள் அடித்துத் தீவிரமாக வருநும் செய்தார்கள். பிரமாதமாக ஐந்து தினங்கள் உற்சவம் நடந்தது. கடைசியில் பஞ்சபாகவதரைக் கொண்டே அதிஷ்டானபூஜை ஆராதனைகளையும் செய்து ஆஞ்சநேயஸ்வாமி உற்சவத்துடன் விழாவைப் பூர்த்தி செய்தார்கள்.

இப்படித் திருவையாற்றில் ஒன்றும், கும்பகோணத்தில் ஒன்றுமாய் உற்சவம் இரண்டுபட்டு நடத்தப்படுகிறது என்பதைக் கேள்வியுற்ற வித்துவான்கள் எதில் சேருவது என்ற குழப்பத்தினால் ஒன்றிலும் சேராமல் நின்றுவிட்டனர். ஆகவே இந்த இரண்டு உற்சவங்களும் முன் வருஷங்களைப் போல் சோபிக்கவில்லை. ஆனால் அந்தந்த கோஷ்டிகளில் சம்பந்தப்பட்டவர்கள் மட்டும் தங்கள் தங்கள் உற்சவங்களை அடுத்த வருஷத்தில் இன்னும் பிரபலமாக நடத்த வேண்டும் என்று முடிவு செய்து கொண்டனர். நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது என்பது போல் ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் திருவுள்ளம் வேறுவிதமாய் இருந்தது.


பிடில் கோவிந்தசாமிப்பிள்ளை

கும்பகோணத்தில் உற்சவம் நடந்த சில மாதங்களுக்குள் நரசிம்ம பாகவதர் இறைவன் திருவடி சேர்ந்துவிட்டார். அவருடன் அங்கு உற்சவத்தை நிர்வகித்த திருப்பழனம் பஞ்சாபிகேச பாகவதர், கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர், தஞ்சாவூர் நாகராஜ பாகவதர், பிடில் கோவிந்தசாமிப் பிள்ளை, மிருதங்கம் அழகநம்பியாப் பிள்ளை, புதுச்சேரி ரங்கசாமி அய்யர் ஆகியோருக்கு ஒரு பெரிய பிரச்னை ஏற்பட்டு விட்டது. உற்சவத்தைக் கும்பகோணத்திலேயே தொடர்ந்து நடத்துவதா அல்லது திருவையாற்றில் நடத்துவதா என்று யோசிக்க ஆரம்பித்து விட்டனர். "பல வருஷங்களாய்த் திருவையாற்றில் நடந்து வந்த ஆராதனை உற்சவத்தைக் கும்பகோணத்தில் மாற்றி நடத்தியதால்தான் நரசிம்ம பாகவதரை நாம் இழந்துவிடும்படி நேர்ந்துவிட்டதோ!" என்று எண்ணிக் கவலைப்பட்டனர். ஆகவே, கும்பகோணம் கோஷ்டியார் மறுபடியும் திருவையாற்றிலேயே உற்சவத்தைத் தனியே நடத்துவது என்று நிர்மாணித்தார்கள். அதற்காகத் தங்களுடைய கட்சியை இன்னும் வலுப்படுத்த வேண்டிய முஸ்தீப்புகளைச் செய்ய ஆரம்பித்தனர்.

திருவையாற்றில் பஞ்ச பாகவதரைச் சேர்ந்த வித்துவத் கோஷ்டிகள் தங்கள் கட்சியைப் பலப்படுத்தி வந்தார்கள். சென்னையில் இருந்த சங்கீத வித்வான் திருவையாறு சபேச ஐயரைக் கொண்டு சென்னையில் வசூல் செய்யும்படி தூண்டினார்கள். இன்னும் மாடவரம் வீணை வைத்தியநாதய்யர், குலமங்கலம் வைத்தியநாத பாகவதர், சீதாராம பாகவதர், தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதர், மைலாட்டூர் கிருஷ்ணய்யர், குலமங்கலம் சௌந்தரராஜ பாகவதர், பழனி சுப்ரமண்ய பாகவதர் ஆகிய எல்லோரையும் அழைத்துத் தீவிரமாக ஆலோசனை செய்து பார்த்தார்கள். இரண்டு கட்சிகளுக்குள்ளும் ஒற்றுமை ஏற்பட வழியில்லை. பஞ்ச பாகவதரின் கோஷ்டியார் வழக்கம்போல் திருவையாறு பச்சையப்ப முதலியார் சத்திரத்திலும் காலஞ்சென்ற நரசிம்ம பாகவதரின் கோஷ்டியார் திருவையாறு கல்யாணமகால் சத்திரத்திலும் உற்சவத்தை நடத்த ஆரம்பித்தனர். இரண்டு கோஷ்டிகளும் புஷ்ய பகுள பிரதமையன்று ஆரம்பித்துப் பஞ்சமியன்று அதிஷ்டான பூஜை ஆராதனையை நடத்தினார்கள்.

ஆனால் பஞ்சு பாகவதர் கோஷ்டியார் அதிஷ்டான பூஜை செய்த பிறகே கும்பகோணம் கோஷ்டியார் அதிஷ்டான பூஜை செய்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



ஸ்ரீ சபேசய்யர்

இப்படிப் போட்டி போட்டு உற்சவம் நடத்தியவர்கள் சின்னக் கட்சி, பெரிய கட்சி என்று அழைக்கப்பட்டனர். இந்த விவரங்களை யறியாத பலர் தங்களுக்குத் தோன்றியபடி காரணங்களைச் சொல்லி வந்தனர். இது சிறிய கோஷ்டி, அது பெரிய கோஷ்டி என்றார்கள் சிலர். மற்றும் சிலர் அது பெரிய கட்டிடத்தில் நடப்பதால் பெரிய கட்சி யென்றும் சிறிய கட்டிடத்தில் நடப்பதால் சின்னக் கட்சி என்றும் சொன்னார்கள். இன்றும் சில மதியூகிகள், இது சிறு பான்மையானவர்களால் நடத்தப்படுவதால் சின்னக் கட்சி என்றழைக்கப்படுவதாயும் அது பெரும்பான்மையானவர்களால் நடத்தப்படுவதால் பெரிய கட்சி யென்று அழைக்கப்படுவதாயும் தோன்றியபடி யெல்லாம் சொல்ல ஆரம்பித்தனர்.

உண்மை என்னவென்றால் ஆதியில், சிறியவராகிய பஞ்சு பாகவதரை ஆதரித்த கோஷ்டியாரைச் சின்னக் கட்சியார் என்றும் பெரியவராகிய நரசிம்ம பாகவதரை ஆதரித்த கோஷ்டியாரைப் பெரிய கட்சியார் என்றும் குறிப்பிட்டார்களே யன்றிக் கட்சி சிறிது பெரிது என்ற மனப்பான்மையினாலோ, பெரிய கட்டிடத்தில் நடத்தினார்கள், சிறிய கட்டிடத்தில் நடத்தினார்கள் என்ற காரணத்தினாலோ சின்னக் கட்சி பெரிய கட்சி என்று ஏற்படவில்லை. இரண்டு கட்சிகளும் ஒரு சில வருஷங்கள் தங்கள் தங்கள் தேவைக் கேற்றவாறு வெவ்வேறு பெரிய இடங்களில் உற்சவங்களை நடத்தியிருக்கின்றன. சில வருஷம் பெரிய கட்சியாரும் சில வருஷம் சின்னக் கட்சியாரும் விமரிசையாக ஆராதனை உற்சவத்தை நடத்தியிருக்கிறார்கள்.

ஒரே காலத்தில் ஒரே இடத்தில் இரண்டு கோஷ்டிகள் உற்சவத்தை நடத்தியதால் சில விசித்திரங்கள் ஏற்பட்டன. அநேகமாய்ப் பெரிய கட்சியில் சீக்கிரம் சாப்பாடு கிடைத்துவிடும். சின்னக் கட்சியிலோ ஸ்நானம் பூஜை பாராயணங்கள் எல்லாம் முடித்துக் கொண்டுதான் வித்வான்கள் காப்பி சாப்பிடுவார்கள். தவிரவும் சில பெரியோர்களைக் கொண்டு 'ராமநாம ஜபம்' செய்வித்ததால் அது காலை பத்து மணி வரையில் நடக்கும். அதன் பிறகு படத்திற்குப் பூஜை நிவேதனங்கள் நடைபெறும். ஆகவே சின்னக் கட்சியில் பன்னிரண்டு மணிக்கு முன் சாப்பாடு கிடைக்காது. இதனால் அநேகர் சாப்பாட்டுக்குப் பெரிய கட்சியாரின் போஜன சாலைக்குப் போய்விடுவார்கள். சிலர் பெரிய கட்சியின் முதல் பந்தியில் சாப்பிட்டுவிட்டுச் சின்னக் கட்சியின் கடைசிப் பந்தியிலும் சாப்பிட வந்துவிடுவார்கள்!

சாப்பாட்டில் இருந்ததுபோலவே சங்கீதக் கச்சேரியிலும் கஷ்டங்கள் ஏற்பட்டன. சிறிய கோஷ்டியில் ஓர் அருமையான கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே அதைவிட இனிமையான கச்சேரி பெரிய கோஷ்டியில் நடக்கிற தென்பதைக் கேள்விப்பட்டுப்பொது ஜனங்கள் அங்கிருந்து இங்கு ஓடி வருவார்கள். அதே மாதிரி இங்கிருந்து அங்குபோவது முண்டு. இது மட்டுமா? சில சமயங்களில் ஒரு கோஷ்டியில் சுமாரான கச்சேரி ஒன்று நடந்து கொண்டிருக்கும்போதே சில விஷமிகள் மற்றொரு கோஷ்டியில் ஒரு பிரபல வித்வானின் கச்சேரி நடப்பதாகப் புரளி செய்துவிடுவார்கள். இதை நம்பி அநேகர் அங்கிருந்து எழுந்து ஓடுவார்கள்.

கட்சிகள் பிரிந்த இரண்டு வருஷங்கள் வரை மாங்குடி சிதம்பர பாகவதர் ஒரு கோஷ்டியிலும் கலந்து கொள்ளாமல் நடுநிலைமை வகித்தார். பிறகு பெரிய கட்சியில் உள்ள கண்டர்களான சில வித்துவான்கள் கேட்டுக் கொண்டதின் பேரில் கல்யாண மகாலில் ஒரு நாள் கதை செய்தார். எதிர்பாராத அளவு கூட்டம் கூடவே விஷமிகளுக்கு மிகவும் வேதனையாகப் போய்விட்டது. கூட்டத்தில் தண்ணீர்ப் பாம்புகளை விட்டுக் கலவரம் உண்டாக்கிவிட்டார்கள். பாம்பைக் கண்ட ஜனங்கள் மூலைக்கு மூலை ஓடிக் கலைய ஆரம்பித்துவிட்டனர். மாங்குடி சிதம்பர பாகவதரின் சுவாரஸ்யமான கதை குட்டிச் சுவராகிவிட்டது. அதிலிருந்து சிதம்பர பாகவதர் பெரிய கட்சியிலிருந்து விலகிச் சின்னக் கட்சியில் சேர்ந்து கொண்டார். (தொடரும்)

வேண்டாம் இந்த அரிசி!

ஸ்ரீபாத சங்கர்

இன்று சர்க்காரும் பொது மக்களும் கலந்து செய்யவேண்டிய முக்கியமான வேலை உணவு உற்பத்தி செய்வதுதான். இதைப்பற்றி சர்க்கார் ஓயாமல் அறிக்கைகளும் அபிப்பிராயங்களும் வெளியிட்டுக் கொண்டே தானிருக்கிறார்கள். ஆனால் சரியான திட்டம் போட்டு விடாமுயற்சியுடன் இந்த உணவு உற்பத்தி வேலையில் இறங்கவில்லை, விவசாய இலாகா சரியானபடி வேலை செய்யவில்லை. இவைகளை அடியோடு எடுத்து விட்டால்கூட நல்லது என்று பலர் கருதும்படியான நிலையில் தான் இவர்கள் வேலை செய்யாமலிருந்து வருகிறார்கள். விதைப்பதற்கு நெல்லோ, வரகோ, கேழ்வரகோ, துவரையோ உளுந்தோ எது கேட்டாலும், "இப்பொழுது ஸ்டாக் இல்லை; வரவழைத்துக் கொடுக்கிறோம்; பிறகு வாருங்கள்" என்று வெகு சுலபமாகப் பதில் சொல்லி அனுப்பி விடுகிறார்கள். உழுவதற்கு டிராக்டர்கள் கேட்டால் "உங்களுக்கு முன்னால் அப்ளிகேஷன் போட்டவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுத்த பிறகு உங்களுக்கும் கிடைக்கும்" என்கிறார்கள். போரிங் செட்டோ, தாலுகாவுக்கு ஒன்றுதான். எப்பொழுது கிடைக்குமோ சொல்ல முடியாது.

இது இப்படியிருக்க, மழை பெய்யாமல் அதிகக் கிணறுகள் தோண்டவேண்டிய சமயம் பார்த்து, சர்க்கார் "எங்களிடம் பணம் இல்லை; இனி கிணறு தோண்டப் பண உதவி செய்ய முடியாது" என்று திடீரென்று அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். விவசாயிகளிடமோ, உழுவதற்கு மாடு வாங்கவும் பணம் கிடையாது. கூலி ஏரை வைத்து உழுதாலோ, அவன் சரியாக உழுவதே இல்லை. "சுதந்திரம் வந்த பிறகு வேலை ஏன் செய்யவேண்டும்? வேலை செய்யாமல் சாப்பிடுவதுதான், சுதந்திரத்தின் பொருள்" என்று கேலியாகக் காலம் கடத்துகிறார்கள். நன்றாக வேலைசெய்து அதிகப் பணம் சம்பாதிக்கலாமென்பதை விட்டு விட்டு, கொஞ்ச நேரம் வேலை செய்து அதிகப் பணம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்கிறார்கள். வெறும் பணம் மாத்திரம் வைத்துக் கொண்டு என்ன செய்வது? இதைப் பற்றித் தொழிலாளர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களும், தொழிலாளர் தலைவர்களும் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். வெறும் கிளர்ச்சி செய்வதினால என்ன பயன்? அதிகமான ஜனங்கள் அதிக நேரம் வேலை செய்தால்தான் அதிக உணவுப் பொருள்கள் உண்டாக்கலாம், எல்லோரும் வயிறாரச் சாப்பிடலாம்.

சில ஜில்லாக்களில் அதிக வெள்ளத்தாலும், சில ஜில்லாக்களில் மழையே பெய்யாததினாலும் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறது. இதை உடனே சரிப்படுத்தி யாகவேண்டும்.

மந்திரிமார்களும், எம். எல். ஏ. க்களும் வேறு எல்லா வேலைகளையும் சற்று மூட்டை கட்டி வைத்துவிட்டு, சுற்றுப் பிரயாணங்களை நிறுத்திவிட்டு, இருக்கிற எல்லாப் பணத்தையும் ஆட்களையும் கொண்டு உணவுப்பொருள் உற்பத்தி செய்வதையே முதல் வேலையாக எடுத்துக் கொள்ளவேண்டும். இதில் எல்லா ஜனங்களும் பங்கெடுத்துக் கொள்ளக்கூடிய முறையில் சரியான திட்டம் போட்டு ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும்படி வேலை செய்ய வேண்டும். சாதாரண முறையில் இதைச் சமாளிக்கலாமென்று நினைப்பது நாமே பஞ்சத்தை வரவேற்பதாகும். மழை பெய்யாத எல்லா இடங்களிலும் பெரிய கிணறுகள் தோண்டி வரகு, கேழ்வரகு, கம்பு, சோளம் முதலிய தானியங்களை ஏராளமாகப் பயிரிடவேண்டும். நெல் பயிர் செய்வதைவிட இது சுலபம். செலவும் குறைவு.

ஏராளமான விவசாயிகளும், கூலி ஆட்களும் "அரிசி வேண்டாம்" என்கிறார்கள். ரேஷன் விலை அரிசி படி 0–11–3; கேழ்வரகு 0-5-6; ஒரு படி அரிசி விலைக்கு இரண்டு படி கேழ்வரகு கிடைக்கிறது. அநேக ரேஷன் கடைகளில் கேழ்வரகே கிடையாது. கொடுக்கிற இடங்களிலும் அதிகமாக அரிசிதான் கொடுக்கிறார்கள். அரிசி இல்லை என்று கதறுகிற இந்த சர்க்கார், அரிசி இறக்குமதியால் பணம் அதிகச் செலவு என்கிற சர்க்கார், எதற்காக கிராமங்களில் அரிசி ரேஷனை வைத்திருக்கவேண்டும்? "வேண்டாமே அரிசி! எங்களுக்கு வரகும், கேழ்வரகும், கம்பும், சோளமும் கொடுங்கள்" என்று கதறுகிறார்கள் கிராமவாசிகள். அவர்கள் கேட்பதைக் கொடுத்து விட்டால், பயிரிட ஏற்பாடு சரிவரச் செய்துவிட்டால், ரேஷனையே அடியோடு எடுத்து விடலாம். எல்லோரும் வயிறாரச் சாப்பிட்டு சுகமாக வாழ்ந்து மகிழ்ந்திருப்பார்கள்.

மோகினித் தீவு



முன்னுரை

அந்த இங்கிலீஷ் ஸினிமா கொஞ்சங்கூட நன்றாயில்லை: "ஏண்டா அப்பா, இங்கே வந்தோம்? காசைக் கொடுத்துத் தேளைக் கொட்டிக் கொண்ட கதையாயிருக்கிறதே!" என்ற எண்ணம் உண்டாயிற்று.

அந்தப் படத்தில் குதிரைகள் குடல் தெறிக்க ஓடிக் கொண்டிருந்தன.

ஒரு மனிதனும் இன்னொரு மனிதனும் கத்திச் சண்டை போட்டார்கள்.

ஒரு யுவனும் ஒரு யுவதியும் காதல் புரிந்தார்கள்.

மறுபடியும் குதிரைகள் ஓடின.

இரண்டு மனிதர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டார்கள்.

ஒரு யுவதியும் ஒரு யுவனும் காதல் புரிந்தார்கள்.

குதிரைகள் எவ்வளவு வேகமாய் ஓடினாலும் படம் மட்டும் மெள்ள மெள்ள நகர்ந்து கொண்டிருந்தது.

கத்திச் சண்டை பொய், துப்பாக்கிக் குண்டு பொய், காதலும் பொய்.

இந்த அபத்தத்தை எத்தனை நேரம் சகித்துக் கொண்டிருப்பது? எழுந்து போய் விடலாமா என்று தோன்றியது.

இந்தச் சமயத்தில் இடைவேளைக்காக விளக்குப் போட்டார்கள். சாதாரணமாக, ஸினிமாக் கொட்டகைகளில் இடைவேளை வெளிச்சம் போட்டதும் பெரும்பாலான ரஸிகர்கள் சுற்று முற்றும் திரும்பிப் பார்ப்பது வழக்கம். அதன் காரணம் என்ன வென்பது அன்று எனக்கு விளங்கிற்று. ஸினிமாத் திரையில் உயிரற்ற பொம்மை முகங்களைப் பார்த்துப்பார்த்து அலுத்துப் போன கண்கள் உயிருள்ள உண்மை மனிதர்களின் முகங்களைப் பார்க்க விரும்புவது இயல்புதானே? தெரிந்த முகம் ஏதேனும் தென்படுகிறதா என்று நானும் அன்றைக்குத் திரும்பிப் பார்த்தேன். இந்த உபயோக மற்ற ஸினிமாவைப் பார்க்க வந்த அசட்டுத்தனத்தை இன்னும் யாரேனும் ஒரு அறிமுகமான மனிதருடன் பகிர்ந்து கொள்வதில் சற்று நிம்மதி உண்டாகலாம் அல்லவா?

அவ்வாறு சுற்று முற்றும் பார்த்த போது தெரிந்த முகம் ஒன்று உண்மையிலேயே தெரிந்தது. யார் என்பது உடனே புலப்படவில்லை. அந்த மனிதரும் என்னைப் பார்த்து ஒரு புன்னகை புரிந்தார். நான் பட்ட அவஸ்தையை அவரும் பட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றியது.

சமிக்ஞையினால் நாங்கள் முகமன் சொல்லிக்கொண்டிருந்த சமயத்தில், என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு ரஸிகர் "சுத்த பாடாவதிப் படம்! ஒன்றே கால் ரூபாய் தண்டம்!" என்று இரைச்சல் போட்டுக் கொண்டு எழுந்து போனார்.

சற்றுத் தூரத்திலிருந்து புன்னகை புரிந்த மனிதர் அந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது என்று பரபரப்புடன் எழுந்து வந்து என் பக்கத்து நாற்காலியில் உட்கார்ந்தார்.

"என்ன சேதி?" "என்ன சமாசாரம்?" "வீட்டில் எல்லாரும் சௌக்கியமா?" "படம் சுத்த மோசமாயிருக்கிறதே!" என்று க்ஷேமலாபங்களை விசாரித்துக் கொண்டே, அந்த மனிதர் யாராயிருக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். பேச்சு வாக்கில், "இப்போது எங்கே ஜாகை?" என்று கேட்டேன்.

"ஜாகையாவது, மண்ணாங் கட்டியாவது? ஜாகை கிடைக்காதபடியினாலேதான் ஸினிமாக் கொட்டகையிலாவது பொழுதைப் போக்கலாம் என்று வந்தேன். இங்கேயும் இந்த லட்சணமாயிருக்கிறது. மறுபடியும் பர்மாவுக்கே திரும்பிப் போய் விடலாமா என்றுகூட ஒவ்வொரு சமயம் தோன்றுகிறது" என்றார்.

பர்மா என்ற வார்த்தையைக் கேட்டதும் அந்த மனிதரைப் பற்றி எனக்கு நினைவு வந்து விட்டது.

அந்த மனிதர் என் பழைய சிநேகிதர். கற்பனையும் ரஸனையும் படைத்தவர்.

கவிதையிலும் காவியத்திலும் மூழ்கியவர். அப்படிப்பட்ட மனிதர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவது அபூர்வந்தானே? பாரத நாட்டில் பிழைக்க வழியில்லையென்று கண்டு பர்மாவுக்குப் போனார். இவருடைய அதிர்ஷ்டம் அங்கேயும் தொடர்ந்து சென்றது. இவர் போய்ச் சேர்ந்த சில நாளைக்கெல்லாம் ஜப்பான் யுத்தம் மூண்டது. ஜப்பானிய சைன்யங்கள் மலாய் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டு பர்மாவின் மீது படையெடுத்து வந்தன. ஜீவனோபாயம் தேடிப் பர்மாவுக்குச் சென்ற சிநேகிதர் ஜீவன் பிழைத்தால் போதும் என்று தாய்நாட்டுக்குப் புறப்பட வேண்டியதாயிற்று. தப்பிப் பிழைத்து அவர் சென்னைவந்து சேர்ந்த புதிதில் ஒரு தடவை அவரைப் பார்த்தேன். அந்தச் சமயம் சென்னை நகரைக் காலி செய்து விட்டுச் சென்னைவாசிகள் ஓடிக் கொண்டிருந்த சமயம். ஆகையால் அப்போது அவரிடம் அதிகம் பேசுவதற்கு முடியவில்லை. அன்று பிரிந்தவரை இன்றைக்கு ஸினிமாக் கொட்டகையில் பார்த்தேன். “வாழ்க ஸினிமா!” என்று வாழ்த்தினேன். ஏனெனில், ‘பாஸ்கரக் கவிராய’ரிடம் பேசிக் கொண்டிருப்பதில் எனக்கு மிக்க பிரியம் உண்டு. கவிதா லோகத்தில் அடிக்கடி சஞ்சரித்துக் கொண்டிருந்தவராதலால் அவருக்குக் ‘கவிராயர்’ என்ற பட்டம் நண்பர் குழாத்தில் அளிக்கப்பட்டிருந்தது.

“நீங்கள் அதிர்ஷ்டசாலி! மகா யுத்தத்தின் மிக முக்கியமான அரங்கம் ஒன்றில் தாங்கள் யுத்தம் நடந்த காலத்தில் இருந்தீர்கள் அல்லவா? ஜப்பானிய விமானங்கள், வெடிகுண்டுகள், பீரங்கி வேட்டுகள்,—இவற்றின் சத்தத்தையெல்லாம் உண்மையாகவே கேட்டிருப்பீர்கள் அல்லவா? நாங்கள் அதையெல்லாம் ஸினிமாவில் பார்த்துக் கேட்பதுடன் திருப்தியடைய வேண்டியிருக்கிறது. உங்கள் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!” என்றேன் நான்.

“தூரத்துப் பச்சை கண்ணுக்கு அழகு; தூரத்து வெடிச் சத்தம் காதுக்கு இனிமை!” என்றார் நண்பர்.

“அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்?” என்று கேட்டேன்.

“இவ்வளவு தூரத்தில் நீங்கள் பத்திரமாயிருந்தபடியால் என்னை அதிர்ஷ்டக்காரன் என்கிறீர்கள். நீங்களும் என்னுடன் இருந்திருந்தால் அதை அதிர்ஷ்டம் என்று சொல்வீர்களா என்பது சந்தேகந்தான்.”

“சந்தேகமே இல்லை. நிச்சயமாக அது உங்கள் அதிர்ஷ்டந்தான். அந்த நெருக்கடியான சமயத்தில், ஜப்பானிய சைன்யம் ரங்கூனை நோக்கி வந்து கொண்டிருந்தபோது, பர்மாவில் உங்களுக்கு எத்தனையோ ரஸமான அநுபவங்கள் ஏற்பட்டிருக்கும். அவற்றையெல்லாம் உங்களிடம் கேட்க விரும்புகிறேன். ஒரு நாள் சொல்ல வேண்டும்.”

“ஒரு நாள் என்ன? இன்றைக்கே வேண்டுமானாலும் சொல்லுகிறேன். ஆனால் பர்மாவில் இருந்த சமயத்தில் எனக்கு அவ்வளவு ரஸமான அநுபவங்கள் ஏற்பட்டன என்று சொல்ல முடியாது. பர்மாவிலிருந்து இந்தியாவுக்குக் கப்பலில் திரும்பி வந்தபோதுதான் மிக அதிசயமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அதைக் கேட்டால் நீங்கள் ரொம்பவும் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்” என்றார் பாஸ்கரர்.

“பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. கட்டாயம் அந்த அநுபவத்தைச் சொல்லவேண்டும். அப்படியானால், நீங்கள் கப்பலிலா திரும்பி வந்தீர்கள்? கப்பலில் உங்களுக்கு இடம் கிடைத்ததே, அதுவே ஒரு அதிர்ஷ்டந்தானே!” என்றேன் நான்.

இந்தச் சமயத்தில், “சுத்தப் பாடாவதிப் படம்!” என்று சொல்லிவிட்டுப் போன மனிதர் திரும்பி வந்துகொண்டிருந்தார். அவருடைய இடத்தில் உட்கார்ந்திருந்த என் சிநேகிதரைக் குத்துச் சண்டைக்காரனைப் போல் உற்றுப் பார்த்தார். நண்பரும் அஞ்சா நெஞ்சங் கொண்ட வீரனைப் போல் அவரைத் திரும்ப உற்றுப் பார்த்தார்.

நெருக்கடியைத் தீர்க்க எண்ணங் கொண்ட நான், “இந்தப் பாடாவதிப் படத்தைப் பார்த்தவரையில் போதும்; வாருங்கள் போகலாம்!” என்று சொல்லி நண்பரின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போனேன்.

கடற்கரைக்குப் போய்ச் சேர்ந்தோம். பூரண சந்திரனின் பால் நில

வில் கடற்கரையின் வெண் மணல் பரப்பு வெள்ளி முலாம் பூசி விளங்கி யது. கடற்கரைச் சாலையில் வைரச் சுடர் விளக்குகள் வரிசையாக ஜொலித் தன. காசு செலவின்றிக் கடல் காற்று வாங்க வந்த பெரிய மனிதர் களின் மோட்டார் வண்டி கள் ஒவ்வொன்றாகப் புறப் பட்டுக் கொண்டிருந்தன. பௌர்ணமியானாலும் கடல் அலைகள் அன்றைக்கு அடங்கி ஒலித்துத் தம்புரா வின் சுருதியைப் போல் இனிய நாதத்தை எழுப்பிக் கொண்டிருந்தன.

"பர்மாவிலிருந்து வருவ தற்குத் தங்களுக்குக் கப்ப லில் இடம் கிடைத்ததாக் கும்! அது ஒரு அதிர்ஷ்டந் தானே? தரை மார்க்க மாக வந்தவர்கள் பட்ட கஷ்டங்களைக் கேட்டால், அப்பப்பா! பயங்கரம்!" என்றேன்.

"ஆம்; தரை மார்க்க மாகக் கிளம்பி வந்தவர்கள் எத்தனையோ கஷ்டப்பட் டார்கள். பலர் வந்து சேராமல் வழியிலேயே மாண்டு போனார்கள். தரை மார்க்கம் அவ்வளவு கஷ்டமா யிருக்கும் என்று தெரிந்துதான் நான் கால் நடைப் பிரயாணிகளுடன் கிளம்பவில்லை. கப்பலில் இடம் பெறுவதற்குப் பெரும் பிரயத்தனம் செய் தேன். கடைசியில், தூரத் தில் ஜப்பான் பீரங்கிக் குண்டுகளின் சத்தம் கேட் கத் தொடங்கிய நேரத் தில், இரங்கூன் துறை முகத்திலிருந்து கிளம்பிய கப்பல் ஒன்றில் எனக்கு இடம் கிடைத்தது. அந்த வரைக்கும் நான் அதிர்ஷ்டசாலி தான்!" என்றார் நண்பர்.

மேலும் நான் தூண்டிக் கேட்டதின் பேரில் பாஸ்கரக் கவிராயர் அந்தக் கப்பல் பிரயாணக் கதையை விவர மாகக் கூறத் தொடங்கினார்.



முதல் அத்தியாயம்

இரங்கூனிலிருந்து புறப்பட்ட கப்பலில் இடம் கிடைத்த வரையில் நான் பாக்கியசாலிதான். சந்தேகம் இல்லை. ஆனால் அந்தக் கப்பலில் பிரயாணம் செய்ய நேர்ந்ததை ஒரு பாக்கியம் என்று சொல்ல முடியாது. நரகம் என்பதாக ஒன்று இருந்தால் அது கிட்டத்தட்ட அந்தக் கப்பலைப் போலத்தான் இருக்க வேண்டும். அது ஒரு பழைய கப்பல். சாமான் ஏற்றும் கப்பல். அந்தக் கப்பலில் இந்தத் தடவை நிறையச் சாமான்களை ஏற்றியிருந்ததோடு, 'ஐயோ! போகட்டும்!' என்று சுமார் ஆயிரம் ஜனங்களையும் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். பாரந் தாங்க மாட்டாமல் அந்தக் கப்பல் திணறியது. கப்பல் நகர்ந்தபோது பழைய பலகைகளும் கீல்களும் வலி பொறுக்கமாட்டாமல் அழுதன. அதன் மீது பலமான காற்று அடித்தபோது ஆயிரங் கட்டை வண்டிகள் நகரும் போது உண்டாகும் சத்தம் எழுந்தது. அந்தக் கப்பலில் குடிகொண்டிருந்த அசுத்தத்தையும் துர்நாற்றத்தையும் சொல்லி முடியாது. இப்போது நினைத்தாலும் குடலைப் பிடுங்கிக் கொண்டு வருகிறது. ஆயிரம் ஜனங்கள்,—பல நாள் குளிக்காதவர்கள், — உடம்பு வியர்வையின் நாற்றமும், தலை மயிர் சிக்குப் பிடித்த நாற்றமும், குழந்தைகள் அசுத்தம் செய்த நாற்றமும், பழைய ரொட்டிகள், ஊசிப்போன தின் பண்டங்களின் நாற்றமும் "கடவுளே! எதற்காக மூக்கைப் படைத்தாய்!" என்று கதறும்படி செய்தன.

கப்பலில் ஏறியிருந்த ஜனங்களின் பீதி நிறைந்த கூச்சலையும் ஸ்திரீகளின் சோகப் புலம்பலையும் குழந்தைகளின் காரணமில்லாத ஓலத்தையும் இப்போது நினைத்தாலும் உடம்பு நடுங்குகிறது. ஒவ்வொரு சமயம், "இந்த மாதிரி ஜனங்கள் உயிர் பிழைத்து இந்தியா போய்ச் சேருவதிலே யாருக்கு என்ன நன்மை? இந்தக் கப்பல் கடலிலே மூழ்கிப் போய் விட்டால்கூட நல்லதுதான்!" என்ற படுபாதகமான எண்ணம்கூட என் மனதில் தோன்றியது. உலகமெங்கும் பரவியிருந்த ராட்சத யுத்தத்தின் விஷக் காற்று இப்படியெல்லாம் அப்போது மனிதர்களின் உள்ளத்தில் கிராதக எண்ணங்களை உண்டு பண்ணியிருந்தன.

இவ்விதம் அந்த அழகான கப்பலில் ஒரு நாள் பிரயாணம் முடிந்தது. மறு நாள் பிற்பகலில் கம்பியில்லாத் தந்தி மூலம் பயங்கரமான செய்தி ஒன்று வந்தது. ஒரு ஜப்பானியக் 'குரூஸர்' அந்தப் பக்கமாக வந்து கொண்டிருக்கிறது என்பதுதான் அந்தச் செய்தி. கப்பலின் காப்டனுக்கு இப்படி ஒரு



செய்தி வந்திருக்கிறது என்பது எப்படியோ அந்தக் கப்பலிலிருந்த அவ்வளவு பேருக்கும் சிறிது நேரத்துக்கெல்லாம் தெரிந்து போய் விட்டது. கப்பல் நாயகனுக்கு வந்த செய்தி ஒரே ஒரு 'குரூஸர்' கப்பலைப்பற்றியதுதான். கப்பல் பிரயாணிகளுக்குள் அந்தச் செய்தி பரவியபோது ஒரு 'குரூஸர்' ஒரு பெரிய ஜப்பானியக் கப்பற் படை ஆகிவிட்டது! ஸப்மரீன் என்னும் நீர் மூழ்கிகளும் டிஸ்ட்ராயர் என்னும் நாசகாரிகளும் டிரெட் நாட் கப்பல்களும் விமான தளக் கப்பல்களுமாகப் பேச்சு வாக்கில் பெருகிக் கொண்டே போயின. ஏற்கெனவே பயப் பிராந்தி கொண்டிருந்த ஜனங்களின் நிலைமையை இப்போது சொல்ல வேண்டியதேயில்லை. இராவணன் மாண்டு விழுந்த செய்தியைக் கேட்ட இலங்காபுரி வாசிகளைப் போல் அவர்கள் அழுது புலம்பினார்கள்.

இதுகாறும் சென்னைத் துறைமுகத்தை நோக்கிச் சென்ற கப்பல் இப்போது திசையை மாற்றிக்கொண்டு தெற்கு நோக்கிச் சென்றது. ஒரு இரவும் ஒரு பகலும் பிரயாணம் செய்த பிறகு சற்றுத் தூரத்தில் ஒரு தீவு தென்பட்டது. பசுமை போர்த்த குன்றுகளும் பாறைகளும் வானளாவிய சோலைகளும் அந்தத் தீவில் காணப்பட்டன. திருமாலின் விசாலமான மார்பில் அணிந்த மரகதப் பதக்கத்தைப் போல் நீலக் கடலின் மத்தியில் அந்தப் பச்சை வர்ணத் தீவு விளங்கியது. மாலை நேரத்துச் சூரியனின் பசும் பொன் கிரணங்கள் அந்த மரகதத் தீவின் விருட்சங்களின் உச்சியைத் தழுவி விளையாடிய அழகைக் கம்பனையும் காளிதாஸனையும் போன்ற மகா கவிகள்தான் வர்ணிக்க வேண்டும். எந்த நிமிஷத்தில் கப்பலின் மீது ஜப்பானியக் குண்டு விழுந்து கூண்டோடு கைலாசமாகக் கடலில் முழுகப் போகிறோமோ என்று பீதி கொண்டிருந்த நிலைமையிலே கூட அந்தத் தீவின் அழகைப் பார்த்த உடனே பிரயாணிகள் 'ஆஹா'காரம் செய்தார்கள்.



கப்பல் தீவை நெருங்கிச் செல்லச் செல்ல, பிரயாணிகளுக்கு மறுபடியும் கவலை உண்டாயிற்று. அந்தத் தீவின் மேலே கப்பல் மோதி விடப் போகிறதே என்றுதான். ஆனால் அந்தப் பயம் சடுதியில் நீங்கிற்று. தீவின் ஒரு பக்கத்தில் கடல் நீர் உள்ளே புகுந்து சென்று ஓர் இயற்கை

ஹார்பரைச் சிருஷ்டித் திருந்தது. அந்தக் கடல்நீர் ஓடைக்குள்ளே கப்பல் புகுந்து சென்றது. சிறிது நேரத்துக் கெல்லாம் கப்பல் நின்றது. நங்கூர மும் பாய்ச்சியாயிற்று. கப்பல் நின்ற இடத்திலிருந்து பார்த்தால் நாலாபுற மும் பச்சைப் போர்வை போர்த்திய குன்றுகள் சூழ்ந்திருந்தன. வெளி யிலே அகண்ட சமுத்திரத்தில் பிர யாணம் செய்யும் கப்பல்களுக்கு அந்த இயற்கை ஹார்பருக்குள்ளே கப்பல் நங்கூரம் பாய்ச்சி நிற்பது தெரிய முடியாது.

கப்பல் நின்று சிறிது நேரம் ஆன தும் நானும் இன்னும் சிலரும் கப்பல் நாயகரிடம் போனோம். நிலைமை எப் படி என்று விசாரித்தோம். "இனி அபாயம் ஒன்றுமில்லை; கம்பியில்லாத் தந்தியில் மறுபடி செய்தி வரும் வரை யில் இங்கேயே நிம்மதியாயிருக்கலாம்'' என்றார் காப்டன். பிறகு அந்தத் தீவைப்பற்றி விசாரித்தோம். அதற் குப் பெயர் 'மோகினித் தீவு' என்று காப்டன் கூறி, இன்னும் சில விவரங் களையும் தெரிவித்தார். இலங்கைக்குத் தென் கிழக்கே மூன்று நாள் பிரயாண தூரத்தில் அந்தத் தீவு இருக்கிறது. அநேகருக்கு அத்தகைய தீவு ஒன்று இருப்பதே தெரியாது. தெரிந்தவர் களிலும் ஒரு சிலருக்குத்தான் இம் மாதிரி அதற்குள்ளே கடல் புகுந்து சென்று இரகசிய இயற்கை ஹார்பர் ஒன்றைச் சிருஷ்டித்திருக்கிறது என்று தெரியும். அது சின்னஞ் சிறிய தீவு தான். ஒரு கரையிலிருந்து இன்னொரு கரைக்கு மூன்று காத தூரத்துக்கு மேல் இராது. தற்சமயம் அந்தத் தீவில் மனிதர்கள் யாரும் இல்லை. ஒரு காலத்தில் நாகரிகத்தில் சிறந்த மக்கள் அங்கே வாழ்ந்திருக்க வேண்டு மென்பதற்கான சின்னங்கள் பல இருக்கின்றன. அஜந்தா, எல்லோரா, மாமல்லபுரம் முதலிய இடங்களில் உள்ளவை போன்ற பழைய காலத் துச் சிற்பங்களும் பாழடைந்த கோயில் களும் மண்டபங்களும் அத் தீவில் இருக்கின்றன. வளம் நிறைந்த அத் தீவில் மக்களைக் குடியேற்றுவதற்குச் சிற்சில முயற்சிகள் செய்யப்பட்டன. அவை ஒன்றும் பலன் தரவில்லை. சில நாளைக்குமேல் அந்தத் தீவில் வசிப்ப தற்கு எவரும் இஷ்டப்படுவதில்லை. ஏதேதோ கதைகள் பல அத்தீவைப் பற்றிச் சொல்லப்படுகின்றன.

"அதோ தெரிகிறதே, அந்தக் குன் றின்மேல் ஏறிப் பார்த்தால் நான் சொன்ன பழைய காலத்துச் சிற்ப அதிசயங்களையெல்லாம் பார்க்கலாம். இதற்கு முன்னால் ஒரே ஒரு தடவை நான் அக்குன்றின்மேல் ஏறிப் பார்த் திருக்கிறேன். ஆனால் தீவுக்குள்ளே போய்ப் பார்த்தது கிடையாது!'' என்றார் கப்பல் நாயகர்.

இதைக் கேட்டதும் அந்தக் குன்றின் மேல் ஏறிப் பார்க்கவேண்டும் என்கிற அடக்க முடியாத ஆர்வம் என் மனதில் ஏற்பட்டுவிட்டது. பழைய காலத்துச் சிற்பம், சித்திரம் இவற்றில் எனக்கு உள்ள சபலம்தான் உமக்குத் தெரி யுமே? காப்டன் கூறிய விவரங்களைக் கேட்ட இன்னும் சிலரும் என் மாதிரியே ஆசை கொண்டதாகத் தெரிந்தது. எல்லாருமாகச் சேர்ந்து கப்பல் நாயகரிடம் "இங்கே கப்பல் வெறுமனே தானே நின்று கொண் டிருக்கிறது? படகிலே சென்று அந்தக் குன்றின்மேல் ஏறிப் பார்த்துவிட்டு வரலாமே!'' என்று வற்புறுத்தினோம். கப்பல் நாயகரும் கடைசியில் எங்கள் விருப்பத்துக்கு இணங்கினார்.

"இப்போதே மாலையாகி விட்டது. சீக்கிரத்தில் திரும்பி வந்துவிட வேண் டும். நான் இல்லாத சமயத்தில் ஏதா வது முக்கியமான செய்தி வரலாம் அல்லவா?'' என்று சொல்லிவிட்டு, கப்பலில் இருந்த படகுகளில் ஒன்றை இறக்கச் சொன்னார். காப்டனும் நானும் இன்னும் நாலைந்து பேரும் பட கில் ஏறிக்கொண்டோம். தாம் இல் லாதபோது ஏதேனும் செய்தி வந்தால் தமக்குக் கொடி சமிக்ஞை மூலம் அதைத் தெரியப்படுத்துவது எப்படி என்று தம்முடைய உதவி உத்தி யோகஸ்தரிடம் காப்டன் தெரிவித்து விட்டுப் படகில் ஏறினார்.

அந்த இடத்தில் கொந்தளிப்பு என் பதே இல்லாமல் தண்ணீர்ப் பரப்பு தகடுபோல இருந்தது. படகை வெகு சுலபமாகத் தள்ளிக்கொண்டு போய்க் கரையில் இறங்கினோம். கரையோர மாகச் சிறிது தூரம் நடந்து சென்ற பிறகு வசதியான ஓர் இடத்தில் குன்றின்மீது ஏறினோம். குன்றின்

உயரம் அதிகம் இல்லை. சுமார் ஐந்நூறு அல்லது அறுநூறு அடிதான் இருக்கலாம். என்றாலும் சரியான பாதை இல்லாதபடியால் ஏறுவதற்குச் சிரமமாகவே இருந்தது. மண்டி வளர்ந்திருந்த செடிகள் கொடிகளுக்குள்ளே புகுந்து அவற்றைக் கையால் ஆங்காங்கே விலக்கி விட்டுக்கொண்டு ஏறவேண்டியிருந்தது. "முன்னே நான் பார்த்ததற்கு இப்போது காடு அதிகமாக மண்டிவிட்டது" என்றார் கப்பல் நாயகர். நல்லவேளையாக அப்படி மண்டியிருந்த செடிகள் முட்செடிகள் அல்ல. ஆகையால், அரைமணி நேரத்துக்குள் குன்றின் உச்சிக்குப் போய்ச் சேர்ந்தோம்.

சூரியன் மறையும் தருணம். மஞ்சள் வெய்யிலின் கிரணங்கள் இன்னமும் அந்தப் பச்சைத் தீவின் உச்சிச் சிகரத்தின்மீது விழுந்து அதற்குப் பொன் மகுடம் சூட்டிக் கொண்டிருந்தன.

"அதோ பாருங்கள்!" என்றார் கப்பல் நாயகர்.

அவர் சுட்டிக் காட்டிய திசையை நோக்கினோம். பார்த்த கண்கள் பார்த்தபடியே அசைவின்றி நின்றோம். 'திகைத்தோம்' 'ஸ்தம்பித்தோம்' 'ஆச்சரியக் கடலில் மூழ்கினோம்' என்றெல்லாம் சொன்னாலும், உள்ளபடி சொன்னதாகாது. இந்த உலகத்தை விட்டு வேறொரு அற்புதமான சொப்பனலோகத்துக்குப் போய் விட்டோம் என்று சொன்னால், ஒருவேளை பொருத்தமாயிருக்கலாம். வரிசை வரிசையாக விஸ்தாரமான மணி மண்டபங்களும் கோயில் கோபுரங்களும் ஸ்தூபங்களும் விமானங்களும் கண்ணுக்கு எட்டிய தூரம் காட்சி அளித்தன. பர்மாவில் உள்ளவை போன்ற புத்தர் கோயில்கள், அஜந்தாவில் உள்ளவை போன்ற புத்த விஹாரங்கள், தமிழகத்தில் உள்ளவை போன்ற விஸ்தாரமான பிரகார மதில்களுடன் கூடிய கோவில்கள், வானளாவிய கோபுரங்கள், தேர்களைப் போலும் ரதங்களைப்போலும் குன்றுகளைக் குடைந்து அமைத்த ஆலயங்கள், ஆயிரக்கால் மண்டபங்கள், ஸ்தூபி வைத்த விமானங்கள், ஸ்தூபியில்லாத மாடங்கள், பாறைகளில் செதுக்கிய அபூர்வமான சிற்பங்கள், நெடிய பெரிய சிலைகள்,— ஆகா! அவ்வளவையும் பார்ப்பதற்கு ஆண்டவன் இரண்டே கண்களைக் கொடுத்திருப்பது எவ்வளவு பெரிய அநியாயம் என்று தோன்றியது.

அந்தக் காட்சியைப் பார்க்கப் பார்க்க ஒரு பக்கம் சந்தோஷமாயிருந்தது. இன்னொரு பக்கத்தில் காரணந் தெரியாத மனச் சோர்வும் உற்சாகக் குறைவும் ஏற்பட்டன.—'காரணந் தெரியாத' என்று சொன்னேனா? தவறு! தவறு! — காரணம் தெளிவாகவே இருந்தது. அந்த அதிசயச் சிற்பங்கள் எல்லாம் மிக மிகப் பழமையானவை; பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் எந்த மகா புருஷர்களாலோ கட்டப்பட்டவை; நெடுங்காலமாகப் பழுது பார்க்கப் படாமலும் செப்பனிடப்படாமலும் கேட்பாரற்றுக் கிடந்து வருகிறவை; நாலாபுறமும் கடலில் தோய்ந்து வரும் உப்புக் காற்றினால் சிறிது சிறிதாகத் தேய்ந்து மழுங்கிப் போனவை. ஒரு காலத்தில் இந்தத் தீவில் வாழ்ந்த மக்கள் குதூகலமாயும் கோலாகலமாயும் கலைப் பண்பு நிறைந்த வாழ்க்கை நடத்தியிருக்க வேண்டும். இப்போதோ அத்தீவு ஜனசூனியமாக இருக்கிறது. சிற்பங்களும் சிலைகளும் மாளிகைகளும் மண்டபங்களும் பாழடைந்து கிடக்கின்றன. வௌவால்களும் நரிகளும் எலிகளும் பெருச்சாளிகளும் அந்த மண்டபங்களில் ஒரு வேளை வாசம் செய்யக்கூடும். அந்தத் தீவைப் பார்த்தவுடன் உண்டாகிய குதூகலத்தைக் குறைத்து மனச் சோர்வை உண்டாக்குவதற்கு இந்த எண்ணம் போதாதா?...

சற்று நேரம் நின்ற இடத்தில் நின்று பார்த்த பிறகு எங்களில் ஒருவர், தீவின் உட்புறம் சென்று மேற்கூறிய சிற்ப அதிசயங்களையெல்லாம் அருகிலே போய்ப் பார்த்து விட்டு வர வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தார். என் மனதிலும் அத்தகைய ஆசை ஏற்பட்டிருந்தபடியால் அவருடைய யோசனையை நான் ஆமோதித்தேன். ஆனால் கப்பல் நாயகர் அதற்கு இணங்கவில்லை. இருட்டுவதற்குள்ளே கப்பலுக்குப் போய்விட வேண்டும் என்று வற்புறுத்தினார். "இராத்திரியில் இந்தத் தீவில் தங்குவது உசிதமில்லை. மேலும், நாம் சீக்கிரம் கப்ப

லுக்குத் திரும்பா விட்டால் கப்பலில் உள்ள பிரயாணிகள் வீணாகப் பீதி கொள்வார்கள். அதனால் ஏதேனும் விபரீதம் விளைந்தால் யார் ஜவாப்தாரி? கூடவே கூடாது! வாருங்கள் போகலாம்!" என்றார் காப்டன்.

அவர் கூறியபடியே நடந்து காட்டினார். அவரைப் பின் பற்றி மற்றவர்களும் போனார்கள். நானும் சிறிது தூரம் அவர்களைத் தொடர்ந்து போனேன். ஆனால் போவதற்கு என் உள்ளம் இணங்க வில்லை; கால்கள் கூடத் தயங்கித் தயங்கி நடந்தன. ஏதோ ஒரு மாய சக்தி என்னைப் போக வொட்டாமல் தடுத்தது. ஏதோ ஒரு மர்மமான குரல் என் அகக் காதில் 'அப்பனே! இந்தமாதிரி சந்தர்ப்பம் உன் ஆயுளில் இனி ஒரு முறை கிடைக்குமா? அந்த மூடர்களைப் பின் தொடர்ந்து நீயும் திரும்பிப் போகிறாயே?' என்று சொல்லிற்று. குன்றின் சரிவில் அவர்கள் இறங்கத் தொடங்கிய பிறகு நான் மட்டும் ஒரு பெரிய மரத்தின் பின்னால் மறைந்து நின்று கொண்டேன்.

அப்படி ஒன்றும் பிரமாதமான விஷயம் இல்லை. அந்தத் தீவின் கரையிலிருந்து கொஞ்ச தூரத்திலேதான் கப்பல் நின்றது. இங்கிருந்து சத்தம் போட்டுக் கூப்பிட்டால் கப்பலில் உள்ளவர்களுக்குக் காது கேட்டு விடும். இராத்திரி எப்படியும் கப்பல் கிளம்பப் போவதில்லை. "பொழுது விடிந்த பிறகுதான் இனிப் பிரயாணம்" என்று கப்பல் நாயகர் சொல்லிவிட்டார். பின் எதற்காக அந்த நரகத்தில் ஓர் இரவைக் கழிக்க வேண்டும்? அப்பப்பா! அந்தக் கப்பலில் எழும் துர் நாற்றமும், பிரயாணிகளின் கூச்சலும்!—அதையெல்லாம் நினைத்தாலே குடலைக் குமட்டியது. அந்தக் கப்பலுடனே ஒப்பிடும்போது இந்தத் தீவு சொர்க்கத்துக்குச் சமானமல்லவா? தீவில் துஷ்ட மிருகங்களே இல்லையென்று கப்பல் நாயகர் நிச்சயமாய்ச் சொல்லியிருக்கிறார். பின் என்ன பயம்? சிறிது நேரத்துக்கெல்லாம் பூரண சந்திரன் உதயமாகிவிடும். பால் நிலவில் அந்தத் தீவின் அற்புதங்கள் மேலும் சோபை பெற்று விளங்கும்—இவ்விதமெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டே மரத்தின் பின்னால் மறைந்து நின்றேன்.

போனவர்கள் படகில் ஏறினார்கள். கயிற்றை அவிழ்த்து விட்டார்கள். படகு கொஞ்ச தூரம் சென்றது. அப்புறம், யாரோ நான் படகில் இல்லையென்பதைக் கவனித்திருக்க வேண்டும். படகு நின்றது. காப்டனும் மற்றவர்களும் சர்ச்சை செய்யும் சத்தமும் கேட்டது. மறுபடியும் படகு இந்தக் கரையை நோக்கி வந்தது. என் நெஞ்சு திக் திக் என்று அடித்துக் கொண்டது. கரை ஓரமாகப் படகு வந்து நின்றதும் கையைத் தட்டினார்கள். உரத்த குரலில் சத்தம் போட்டுக் கூப்பிட்டார்கள். காப்டன் கைத் துப்பாக்கியை எடுத்து ஒரு தடவை வெடி தீர்த்தார். மேலும் சிறிது நேரம் காத்துக் கொண்டிருந்தார்கள். நானோ அசையவில்லை. மறுபடியும் படகு நகரத் தொடங்கிக் கப்பலை நோக்கிச் சென்றது. 'அப்பாடா!' என்று நான் பெருமூச்சு விட்டேன்.

பிறகு அந்த மரத்தின் மறைவிலிருந்து வெளியில் வந்தேன். அந்தக் குன்றிலேயே மிக உயரமான சிகரம் என்று தோன்றிய இடத்தை நோக்கி நடந்தேன். இதற்குள் சூரியன் அஸ்தமித்து நன்றாய் இருட்டி விட்டது. சிகரத்திலிருந்து கீழே பார்த்தேன். கோபுரங்கள், மண்டபங்கள் எல்லாம் இருட்டில் மறைந்திருந்தன. "நல்லது; சந்திரன் உதயமாகி வரட்டும்!" என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டு உட்கார்ந்தேன். அந்தத் தீவின் சரித்திரம் யாதாயிருக்கும் என்று மனதிற்குள் ஏதேதோ கற்பனை செய்து கொண்டிருந்தேன்.

இத்தனை நேரமும் காற்றே இல்லாமலிருந்தது. தென் திசையிலிருந்து 'குப்' என்று காற்று அடிக்கத் தொடங்கியது. ஒரு தடவை வேகமாக அடித்து மரங்கள் செடிகளையெல்லாம் குலுக்கிய பிறகு, காற்றின் வேகம் தணிந்து இனிய குளிர் பூந்தென்றலாக வீசத் தொடங்கியது. 'பூந்தென்றல்' என்று சொன்னேனல்லவா? அது உண்மையான வார்த்தை. ஏனெனில் அந்த இனிய காற்றில் மல்லிகை, பாரிஜாதம், பன்னீர், செண்பகம் ஆகிய மலர்களின் சுகந்தம் கலந்து வந்தது. சற்று நேரத்துக்குப் பிறகு பூவின் மணத்தோடு அகில் புகை — சாம்பிராணிப் புகை—

சந்தனத் தூள் புகையின் மணமும் சேர்ந்து வரத் தொடங்கியது.

இந்த அதிசயத்தைப் பற்றி நான் எண்ணிக் கொண்டிருக்கையில் மற்றொரு அதிசயம் ஏற்பட்டது. மாலை நேரங்களில் ஆலயங்களில் அடிக்கப்படும் ஆலாட்ச மணியின் சத்தம் வருவதுபோலக் கேட்டது. மணிச் சத்தம் எங்கிருந்து வருகிறது என்ற வியப்புடன் நாலுபுறமும் நோக்கினேன். ஆகா! அந்தக் காட்சியை என்னவென்று சொல்வேன்? பூரண சந்திரன் கீழ்வானத்தில் உதயமாகிச் சற்றுத் தூரம் மேலே வந்து அந்தத் தீவின் கீழ்த்திசையிலிருந்த மரங்களின் உச்சியில் தவழ்ந்து தீவின் பள்ளத் தாக்கில் பால் நிலவைப் பொழிந்தது. அந்த மோகன நிலவொளியில் முன்னே நான் சூரிய வெளிச்சத்தில் பார்த்த கோவில் கோபுரங்கள், புத்தவிஹாரங்கள், மணி மண்டபங்கள், ஸ்தூபங்கள், விமானங்கள் எல்லாம் நேற்றுத்தான் நிர்மாணிக்கப் பட்டவை போலப் புத்தம் புதியனவாகத் தோன்றின. பல நூறு வருஷத்துக் கடற்காற்றில் அடிபட்டுச் சிதிலமாகிப் போன பழைய காலத்துச் சிற்பங்களாக அவை தோன்றவில்லை.

அந்த அற்புதக் காட்சியும், ஆலாட்ச மணி ஓசையும், மலர்களின் மணத்துடன் கலந்து வந்த அகில் சாம்பிராணி வாசனையும்,—இவையெல்லாம் உண்மைதானா அல்லது சித்தப் பிரமையா என்று நான் சிந்தித்துக்கொண்டிருக்கையில், இதுவரையில் பார்த்த அதிசயங்களைக் காட்டிலும் பெரிய அதிசயம் ஒன்றைக் கண்டேன். 'ஜன சஞ்சாரம் மற்ற நிர்மானுஷ்யமான தீவு' என்றல்லவா கப்பல் நாயகர் சொன்னார்? அந்தத் தீவின் உட்பகுதியிலிருந்து, — சிற்பங்களும் சிலைகளும் இருந்த பகுதியிலிருந்து,— இரண்டு பேர் வந்து கொண்டிருந்தார்கள். நான் இருந்த திசையை நோக்கியே அவர்கள் வந்தார்கள். நான் இருப்பதைப் பார்த்துவிட்டுத்தான் வருகிறார்களோ என்று தோன்றியது. சீக்கிரமாகவே குன்றின் அடிவாரத்தை அடைந்து அதில் நான் இருந்த சிகரத்தை நோக்கி ஏறத் தொடங்கினார்கள். அதைப் பார்த்ததும் எனக்கு முதலில் ஓட்டம் எடுக்கலாமா என்று தோன்றியது. ஆனால் எங்கே ஓடுவது? எதற்காக ஓடுவது? தண்ணீர்க் கரை ஓரம் ஓடிச் சென்று கூச்சல் போடலாம். கூச்சல் போட்டால் கப்பலில் உள்ளவர்கள் வருவார்களா? என்ன நிச்சயம்?

இதற்குள் கொஞ்சம் தைரியமும் பிறந்து விட்டது. "எதற்காக ஓட வேண்டும்?" என்றும் தோன்றி விட்டது. ஓட யத்தனித்திருந்தாலும் பயன் விளைந்திராது. என் கால்கள் ஓடும் சக்தியை இழந்து நின்ற இடத்திலே ஊன்றிப் போய் விட்டன. குன்றின்மேல் ஏறி வருகிறவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தேன். ஒரு கணமும் என் கண்களை அவர்களிடமிருந்து அகற்றமுடியவில்லை. அவர்கள் யார், இங்கே எப்போது வந்தார்கள், எதற்காக வந்தார்கள், எவ்விதம் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்றெல்லாம் தெரிந்து கொள்வதில் அவ்வளவு ஆர்வம் எனக்கு உண்டாகி விட்டது.

சில நிமிஷத்துக்கெல்லாம் அவர்கள் அருகில் நெருங்கி வந்து விட்டார்கள். இருவரும் கைகோத்துக் கொண்டு நடந்து வந்தார்கள். அவர்களில் ஒருவர் ஆடவர்; இன்னொருவர் பெண்மணி. இருவரும் நவயௌவனப் பிராயத்தினர்; மன்மதனையும் ரதியையும் ஒத்த அழகுடையவர்கள். அவர்கள் உடுத்தியிருந்த ஆடைகளும் அணிந்திருந்த ஆபரணங்களும் மிக விசித்திரமாயிருந்தன. ஜாவாத் தீவிலிருந்து நடனம் ஆடும் கோஷ்டியார் ஒரு தடவை தமிழ் நாட்டுக்கு வந்திருந்தார்களே, பார்த்ததுண்டா? அம்மாதிரியான ஆடை ஆபரணங்களை அவர்கள் தரித்திருந்தார்கள்.

நான் நின்ற இடத்துக்கு அருகில் மிக நெருக்கமாக அவர்கள் நெருங்கி வந்தார்கள். என் முகத்தை உற்றுப் பார்த்தார்கள். நான் அணிந்திருந்த உடையை உற்றுப் பார்த்தார்கள். என் மனதில் ஆயிரம் கேள்விகள் எழுந்தன. அவர்களைக் கேட்பதற்குத் தான். ஆனால் ஒரு வார்த்தையாவது என்னுடைய நாவில் வரவில்லை.

முதலில் அந்த யௌவன புருஷன் தான் பேசினான். "வாருங்கள், ஐயா! வணக்கம்!" என்று நல்ல தமிழில் என்னைப் பார்த்துச் சொன்னான். என் உடம்பைப் புல்லரித்தது. (தொடரும்)

கடல் கன்னி

6. பழிக்குப் பழி

ராணியின் அரண்மனைக்கு வந்த நாற்பதாவது நாள் இரவு முழுமதி திடீரென விழித்துக் கொண்டான். கண் விழித்தவுடன் தனது அறையில் ராணி இருப்பதை அவன் கண்டான். முழுமதி பார்த்த சமயம் ராணி ஏதோ மந்திரம் ஜபித்துக் கொண்டிருந்தான்.

மந்திரம் ஜபித்து முடிந்ததும் அவன் மஞ்சள் பொடி நிறைந்த ஒரு பெட்டியைத் திறந்தான். அந்தப் பொடியைக் கொண்டு அவன் ஒரு கோடுபோல் கோலமிட்டான். அந்தக் கோடு திடீரென்று ஒரு சிறு ஓடையாக மாறிற்று. அந்த ஓடையிலிருந்த தண்ணீரை எடுத்து, ஏதோ ஒரு மாவை அதில் போட்டுக் கலந்து, அதை ஒரு பாத்திரத்தில் போட்டுப் பிசைந்தான். பிசைந்த மாவைப் பணியாரமாகத் தட்டினான். அந்தப் பணியாரத்தை மற்ற மந்திரப் பொடிகளுடன் கலந்தான். அடுப்புப் பற்ற வைத்து அதன் மீது ஒரு சட்டியை வைத்துப் பணியாரத்தைச் சட்டியில் போட்டு வறுத்தான். பணியாரம் செய்து முடித்தவுடன் அதை எடுத்துக் கொண்டு அந்த அறையை விட்டுப் போனான். தான் செய்ததையெல்லாம் முழுமதி கவனித்துக் கொண்டிருந்தான் என்பது ராணிக்குத் தெரியாது. லாபே ராணியின் அரண்மனை ஆடம்பரங்களில் கிழவன் அப்துல்லா இருப்பதையே முழுமதி மறந்திருந்தான். ராணியின் மந்திர வேலைகளைப் பார்த்தவுடன் தனக்கு ஏதோ ஆபத்து நேரப்போகிறதென்று அறிந்து அவன் அப்துல்லாவை நினைத்தான்.

அடுத்த நாள் காலை ராணியைச் சந்தித்தவுடன் தன் மாமன் அப்துல்லாவைப் பார்த்து வருவதற்கு அனுமதி அளிக்கும்படி முழுமதி கேட்டான். அவளும் அனுமதி அளிக்கவே உடனே புறப்பட்டுக் கிழவனிடம் சென்றான்.



முழுமதியை மறுபடியும் கண்டதும் கிழவன் சந்தோஷமடைந்தான். அரண்மனையில் நடந்ததையெல்லாம் முழுமதி கிழவனிடம் கூறினான். தன் சொற்படி நடந்தால் எதற்கும் கவலைப்பட வேண்டாம் என்று முழுமதிக்குக் கிழவன் அப்துல்லா தைரியம் சொன்னான்.

அப்துல்லா முழுமதியிடம் இரண்டு பணியாரங்களைக் கொடுத்து அவனிடம் கூறினான்: "அந்த ராணி தான் செய்த பணியாரத்தை உன்னிடம் கொடுத்தால் ஆட்சேபணை செய்யாதே. அதை வாங்கிக் கொள். அவள் உன்னைப் பார்க்கா

மல் இருக்கும் சமயம் பார்த்து, அவன் கொடுத்ததை மறைத்துக்கொண்டு நான் கொடுத்த பணியாரத்தைச் சாப்பிடு. தான் கொடுத்ததை நீ சாப்பிட்டதாக எண்ணிக் கொண்டு அவன் உன்மீது கொஞ்சம் தண்ணீரைத் தெளிப்பான். நீ உடனே மிருகமாக மாறுவாய் என எதிர்பார்ப்பான். ஆனால் அவ்வாறு நடக்காது. அவன் தன் மந்திரம் பலிக்காதது கண்டு ஏமாற்றமடைவான். ஆனால் தன் ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ள மாட்டான். ஏதோ உன்னிடம் தமாஷ் செய்ததாகப் பாசாங்கு செய்வான். நான் உன்னிடம் கொடுத்த பணியாரத்தைச் சாப்பிடும்படி நீ அவனைக் கேட்டுக் கொள்ள வேண்டும். அவன் அதை வாங்கிச் சாப்பிட்டவுடன் நீ அவன் மீது கொஞ்சம் தண்ணீர் தெளி. அவன் மிருகமாக மாறும்படி சபித்து விடு. இப்படிச் செய்தாயானால் அந்தக் கொடிய மந்திரக்காரி கஷ்டத்துக்குள்ளாவான். அவன் மற்றவர்களுக்கு இழைத்த தீமை இனி அவனையே வாட்டும். அவன் மிருகமாக மாறியவுடன் அந்த மிருகத்தை என்னிடம் கொண்டுவா. அப்புறம் என்ன செய்வது என்பதை நான் சொல்லுகிறேன்.''


கிழவன் கூறியதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டு முழுமதி லாயே ராணியின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். கிழவன் கொடுத்த இரண்டு பணியாரங்களையும் தனது பைக்குள் வைத்திருந்தான். அந்தப் பணியாரங்களில் ஒன்று மந்திரம் ஜெபித்தது; மற்றொன்று சாதாரணமானது. சாதாரணமானதைத் தனது பையில் மறைவாக வைத்துக்கொண்டு மந்திரம் ஜபித்ததை ராணியிடம் கொடுத்து அது தன் மாமனால் அவனுக்குப் பரிசாக அளிக்கப்பட்டது என்று கூறி, அந்தப் பணியாரத்தைச் சாப்பிடும்படி ராணியைக் கேட்டுக் கொண்டான். அதற்கு ராணி "உனக்காக இந்தப் பணியாரத்தை நான் சாப்பிடுகிறேன். நீ உன் மாமன் வீட்டிற்குச் சென்றிருந்த பொழுது நான் தயார் செய்த இந்தப் பணியாரத்தை நீ சாப்பிடு!'' என்று கூறித் தன் கையிலிருந்த மந்திரப் பணியாரத்தை முழுமதியிடம் கொடுத்தான்.



முழுமதியும் அதை வாங்கிக் கொண்டான். ராணிக்குத் தெரியாமல் மிகவும் தந்திரமாக அவன் கொடுத்த பணியாரத்தைப் பையில் வைத்துக்கொண்டு, கிழவன்கொடுத்த பணியாரத்தை எடுத்துச் சாப்பிட்டான். தன்னுடைய மந்திரப் பணியாரத்தை முழுமதி சாப்பிட்டு விட்டான் என்று எண்ணிய அந்த ராணி அருகிலிருந்த ஓடை நீரை அள்ளி அவன் மீது தெளித்து "அற்பனே! மனித உருவத்தை விட்டு நொண்டிக் குதிரையாக மாறக் கடவாய்'' என்று சபித்தான்.

ஆனால் முழுமதி மாறாமல் மனித உருவத்திலேயே இருந்தது கண்டு ராணி ஆச்சரியமடைந்தான். தான் மந்திரப் பணியாரம் செய்ததில் ஏதோ தவறு இருக்க

வேண்டும் என்று எண்ணித் தன் குற்றத்தை மறைப்பதற்காக "நான் சும்மா விளையாடினேன். உனக்குத் துன்பம் விளைவிக்கும் எண்ணம் எனக்கு இல்லை" என்று கூறினான். உடனே ராணியைப் பார்த்து முழுமதி, "நான் கொடுத்த பணியாரத்தைத் தயவு செய்து உண்ண வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். ராணியும் தன்னிடம் முழுமதி நம்பிக்கை கொள்வதற்காக அதைச் சாப்பிட்டாள். அது மந்திரப் பணியாரம் என்பது ராணிக்குத் தெரியாது. அவள் சாப்பிட்டவுடன் முழுமதி கொஞ்சம் ஜலத்தை எடுத்து ராணி மீது தெளித்து "கொடிய மந்திரவாதியே, நீ ஒரு குதிரையாக மாறக் கடவாய்!" என்று சபித்தான்.




உடனே ராணி குதிரையாக மாறி விட்டாள். அதை அழைத்துக் கொண்டு முழுமதி அப்துல்லாவிடம் சென்றான். தான் நினைத்தபடியே எல்லாம் நடந்து விட்டதையும், அந்த துஷ்ட ராணிக்குத் தக்க தண்டனை கிடைத்ததையும் கண்டு கிழவன் சந்தோஷமடைந்தான். முழுமதியைப் பார்த்து, "பிரபுவே! தாங்கள் இனி அக் குதிரை மீது ஏறிக்கொண்டு பத்திரமாகத் தங்கள் நாட்டிற்குப் பிரயாணம் செய்யலாம். ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்தக் குதிரையை யாருக்கும் விற்று விடாதீர்கள்!" என்று கூறி அனுப்பினான்.

முழுமதியும் கிழவன் சொன்னபடி நடப்பதாக வாக்களித்து அவன் செய்த உதவிகளுக்காக நன்றி செலுத்தி விட்டுக் குதிரைமீது ஏறி மாய நகரத்தை விட்டுத் தனது நாட்டுக்குக் கிளம்பினான்.

மூன்று நாட்கள் பிரயாணம் செய்த பிறகு முழுமதி ஒரு பெரிய நகரத்திற்கு வந்து சேர்ந்தான். அங்கு ஒரு கிழவன் இவனைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தான். இவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் அங்கே ஒரு கிழவி வந்து விம்மி விம்மி அழுதாள். எதற்காக அவள் அழுகிறாள் என்று கேட்டதற்குக் கிழவி முழுமதியைப் பார்த்து "உன்னுடைய குதிரை மாதிரியே என் மகனிடம் ஒரு குதிரை இருந்தது. அது இப்பொழுது இறந்துவிட்டது. தயவு செய்து இந்தக் குதிரையை எனக்கு

பேஷ்! நல்ல யோசனை!



ராமன் :— இந்த மெஷினில் ஏறி நம் 'வெயிட்' எவ்வளவு என்று பார்ப்போமா? ஒரு அணாத் தாண்டா! வாருங்கள், ஒவ்வொருவராக ஏறிப் பார்ப்போம்.

மற்றவர்கள் :- எங்களுக்கும் ஆசையாகத்தான் இருக்கிறது, 'வெயிட்' பார்க்க வேண்டுமென்று. ஆனால் எங்களிடம் ஒரு தம்பிடிகூட இல்லை! என்ன செய்வது?

ராமன் :- என்னிடம் இருக்கும் ஒரு அணாவைப் போட்டு எல்லோரும் ஏறி நிற்போம். பிறகு மொத்த வெயிட்டை நாலால் வகுத்துக் கொள்வோம்!

விற்றுவிடுங்கள். இல்லாவிட்டால் நானும் என் மகனும் துக்கம் தாங்காமல் இறந்துவிடுவோம்" என்று கூறி மேலும் விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

முழுமதி அவளை நோக்கி, "அம்மா, இந்தக் குதிரையை விற்க முடியாது. அப்படியே விற்பதாயிருந்தாலும் அதன் விலை ஆயிரம் பொன். உங்களால் தர முடியாது. அதற்குக் குறைந்து அதை விற்கவும் முடியாது" என்று சொன்னான்.

ஆனால் அவன் நினைத்ததற்கு மாறாகக் குதிரைக்கு ஆயிரம் பொன் தருவதாக அந்தக் கிழவி ஒப்புக் கொண்டாள். ஒப்புக்கொண்டதோடு அந்தக் கிழவி தன்னிடமிருந்த பையிலிருந்து ஆயிரம் பொற்காசுகளை எண்ணினாள். இது கண்டு முழுமதி கலங்கிப் போனான். "சும்மா வேடிக்கையாகக் கூறினேன். உண்மையில் இந்தக் குதிரையை விற்க மாட்டேன்" என்று கூறினான்.

இந்தச் சமயத்தில் கிழவன் அப்துல்லா வந்து "இந்த நகரத்தில் சொன்ன வார்த்தை தவறக்கூடாது. அப்படித் தவறினால் மிகுந்த தீமைகள் சம்பவிக்கக்கூடும். ஆகையால் பேசியபடி கிழவிக்குக் குதிரையை விற்றுவிடு" என்று கூறினான். அவசரமாகக் கிழவிக்கு வாக்குக் கொடுத்ததற்கு முழுமதி வருந்தினான். வேறு வழி இல்லாததால் குதிரையைக் கிழவிக்கு விற்றுவிட்டான். (தொடரும்)

எத்தனை வயது?

ராமன் தன் தங்கை கமலாவைவிட நான்கு வயது மூத்தவன். அவர்களுடைய தந்தை அவர்களுடைய தாயாரைவிடப் பதினைந்து வயது மூத்தவர். ராமனுடைய வயதையும் கமலாவின் வயதையும் பெருக்கினால் வரும் தொகை எவ்வளவோ அதுதான் அவர்களுடைய தாயின் வயது. இன்னும் ஒரு வருஷம் கழித்து ராமனுடைய வயதையும் கமலாவின் வயதையும் பெருக்கினால் அவர்களுடைய தந்தையின் வயதுக்குச் சமமாகிவிடும். அப்படியானால் அவர்களுடைய தந்தையின் வயது என்ன?

சென்ற வாரம் வெளியான புதிருக்கு விடை :—



அவசரச் சலவை!

பிரபல சினிமா நடிகரான ராபர்ட் டெய்லருக்கு ஒரு சமயம் அவசரமாக ஊருக்குப் போக வேண்டியிருந்தது. அதற்கு வேண்டிய உடுப்புகள் ஒன்றும் தயாராயில்லை. எல்லாம் அழுக்காயிருந்தன. அதற்காக அவசரச் சலவைக்குத் துணிகளைப் போட எண்ணி அவர் ஒரு சலவைச் சாலைக்குப் போனார். அங்கே பின் வருமாறு ஒரு விளம்பரப் பலகை காணப்பட்டது :—

"அவசரச் சலவை. இருபத்து நாலு மணி நேரத்தில் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் செய்யப்படும்."

ராபர்ட் டெய்லர் இந்த விளம்பரத்தைப் பார்த்ததும் சந்தோஷத்துடன் அந்தச் சலவைக் கடைக்காரரைப் பார்த்து, "ஐயா, நான் நாளைக்கு இரவு அவசரமாக ஊருக்குப் போக வேண்டும். இந்தத் துணிகளையெல்லாம் நாளை மாலை நீங்கள் அவசியம் கொடுத்துவிட வேண்டும்" என்று சொன்னார்.



அதற்குச் சலவைக் கடைக்காரர் "இன்றைக்கு என்ன தேதி?" என்று கேட்டார்.

"நாலு" என்றார் ராபர்ட்.

"அப்படியானால் ஏழாம் தேதிக் காலையில்தான் உங்களுக்குச் சலவை கிடைக்கும்!" என்றார் கடைக்காரர்.

ராபர்ட் திடுக்கிட்டு, "இருபத்து நாலு மணி நேரத்தில் அவசரச் சலவை செய்யப்படும் என்று விளம்பரம் செய்திருக்கிறீர்களே!" என்றார்.

"ஆமாம். வாஸ்தவம்தான். ஆனால், நாங்கள் ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம்தான் வேலை செய்கிறோம். அதாவது இன்றைக்குத் தேதி நாலு. இன்று எட்டு மணி நேர வேலை; நாளைக்கு எட்டு மணி நேர வேலை; மறுநாள் எட்டு மணி நேர வேலை! ஆக மொத்தம் இருபத்து நாலு மணி நேரம். சரிதானே?"

இதற்கு ராபர்ட் டெய்லர் என்ன சொல்வார்!

வாத்தியார் மகன்

நவீனன்

ஸ்ரீ எம். சுந்தரம் எம். ஏ. எல். டி., பரீட்சைப் பேப்பர் திருத்துவதைச் சற்று நிறுத்தி விட்டு அன்று வந்த தினப் பத்திரிகையைப் பிரித்தார்.

ஒரு சேதி தயவு தாட்சண்யம் பார்க்காமல் அவரைத் தூக்கிவாரிப் போட்டது. "ஆஹா! அப்படியா விஷயம்!" என்று பல்லை நற நறவென்று கடித்தார். நல்ல வேளையாக அந்தச் சமயம் எந்த மக்குப் பையன் பரீட்சைப் பேப்பரும் அவர் கையில் சிக்கிவிடவில்லை!

"அட, துஷ்டா! உன் புத்தி இப்படி ஏன் கெட்டுப் போகவேண்டும்? ஊரில் எவன் எக்கேடு கெட்டுப் போனால் இவனுக்கு என்ன? இவன் ஏன் இந்த வழிக்கு எல்லாம் போகிறான். அயோக்கியப் பயல்!" என்று சுந்தரம் படபடப்புடன் பொரிந்துத் தள்ளினார்.

அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை; கோபம் கொதித்துக்கொண்டு வந்து குடியேறிற்று. கையும் காலும் பதறின. இப்படியும் அப்படியும் நடைபோட்டார். மறுபடியும் அந்தத் தினப் பேப்பரைத் தாவி எடுத்து அட்சரம் விடாமல் படித்துப் பார்த்தார். அதற்குமேல் அவரால் பொறுக்க முடியவில்லை! "மீனாட்சி!" என்று கூப்பிட்டார்.

அவர் மனைவி, "மீனாட்சி!" என்ற குரலிலே இருந்த கடூரத்தைப் புரிந்து கொண்டவள்போலக் கையிலிருந்த கரண்டியை அப்படியே போட்டு விட்டு 'விறு விறு'வென்று கணவர் அருகே வந்து நின்றாள்.

"காலேஜிலே படிக்கிறானே உன் பிள்ளை, அவன் லட்சணத்தைப் பாரு" என்று சொல்லிவிட்டுப் பத்திரிகையை எடுத்து மடித்து ஒரு பகுதியை மனைவியிடம் கடுமையாக நீட்டினார்.

மீனாட்சி பத்திரிகையை வாங்கிப் படித்து விட்டு விம்மினாள். "கண்ணா! ஏண்டா அப்பா பேரைக் கெடுக்கிறாய்? இதற்குத்தானா அரும்பாடு பட்டு உன்னைக் காலேஜில் சேர்க்கச் சொன்னேன்?" என்று சொல்லித் தேம்பினாள்.

* * *

சமீபத்தில் மேதாவிபுரம் கலாசாலையில் ஸ்தாபகர் தினத்தன்று நடந்த அமளிகளும், அல்லோலகல்லோலங்களும் உங்களுக்குத் தெரியும் அல்லவா? சில 'தோழர்களின்' தூண்டுதலினால், மாணவர்களில் ஒரு கோஷ்டி ஏற்பட்டு படிக்க வந்த இடம் என்பதைக்கூட மறந்து "கலாட்டா"வைச் சிருஷ்டித்துக் கொண்டார்கள் அல்லவா?

அதில் வாத்தியார் சுந்தரத்தின் மகன் கண்ணனும் ஒருவன். கண்ணன் படிப்பில் கெட்டிக்காரன். இப்படியெல்லாம் தவறான வழிக்கு என்றுமே போன இல்லை அவன். சொல்லப்போனால் எந்த ஒரு மாணவியையும் தலை நிமிர்ந்துகூடப் பார்த்தது இல்லை அவன். படிப்பு உண்டு, ஹாஸ்டல் உண்டு என்று பரம சாதுவாக இருந்தவன். அப்படிப்பட்டவனுக்கு எப்படி இந்த 'கலாட்டா' காற்று அடித்ததோ, தெரியவில்லை!

மேற்படி கலாசாலையிலிருந்து வெளியேற்றப்பட்ட மாணவர்கள் கோஷ்டியில் அவன் பெயரும் இருந்தது. 'எஸ். கண்ணன்' என்று கொட்டை எழுத்தில் அவன் பெயர் போடப்பட்டு, அந்தக் கலாசாலையைச் சுற்றி ஒரு மைல் விஸ்தீரணத்துக்கு அவன் எட்டியே பார்க்கக்கூடாது என்றும் தடை உத்தரவு போடப்பட்டு இருந்தது.

வாத்தியார் சுந்தரம் இந்தச் சேதியை எல்லாம் படித்துவிட்டுக் குன்றிப் போனார். தன் குணத்துக்கும், கண்டிப்புக்கும், கருக்கும் இப்படி ஒரு பிள்ளை பிறந்து 'வேட்டு' வைத்து விட்டானே என்று பொருமினார்.

கண்ணனை கலாசாலையில் சேர்ப்பதற்கு அவர் பட்ட பாடு நினைவுக்கு வந்தது. ஒரே ஒரு மார்க்குக் குறைவு என்பதற்காக அவனைக் கலாசாலை விரட்டி விரட்டி அடித்தது ஞாபகத்துக்கு வந்தது.

அவன் விடுமுறைக்குத் தன் ஊர் வந்து திரும்பிப் போகும்போது எல்லாம் எவ்வளவோ புத்திமதி சொல்லி அனுப்புவார். அனாவசியமாக அடிக்கடி பணத்துக்குக் கடிதம் எழுதாதே என்பார். பரீட்சை சமயத்தில் சினிமாப் பார்க்காதே என்பார்; 'பாலிடிக்ஸ்' தெரிந்து கொள். ஆனால் அதைப் பற்றிப் பேசாதே என்று கூடச் சொல்லுவார். எல்லாவற்றிற்கும் "சரி, அப்பா!" என்று பரம சாதுவைப் போலத் தலையை ஆட்டிவிட்டு, இப்போது பெரிய கல்லாகத் தூக்கிப் போட்டு விட்டானே என்று அங்கலாய்த்தார் சுந்தரம்.

அவர் வாத்தியாராக வேலை பார்த்து வந்த போர்டு ஹைஸ்கூலில் இரண்

டொரு மனிதர் கசமுசவென்று பேசிக் கொண்டது சுந்தரத்தின் காதில் விழுந்தது. "என் ஸார்! உங்கள் பிள்ளையாண்டான்கூட 'லிஸ்டில்' இருக்கிறான் போலிருக்கிறதே!" என்று இன்னொரு பி. ஏ. எல். டி., குத்திக் காட்டுவதுதான் அவருக்கு உண்மையில் பொறுக்கவில்லை.

"படிக்கப்போன இடத்தில் பாலிடிக்ஸ்! அதன் பேரால் விபரீத வேலை நிறுத்தம்! அதற்குத் தூண்டுகோல் போடத் திரைமறைவில் சில கட்சிகள்! ஐயோ! இதுதானா என் கண்ணன் கற்றுக் கொண்டான்!" என்று 'ஹோ' வென்று அலறினார் சுந்தரம். அவருக்கு வகுப்பிலும் வீட்டிலும் எந்த வேலையும் ஓடவில்லை. அன்று இரவே மேதாவிபுரம் புறப்பட்டுப் போய் பையனுக்கு நல்ல புத்தி சொல்லிப் பார்ப்பது. அவசியமானால் அவனுக்காகத் தான் மன்னிப்பு வாங்கிக் கொண்டு மறுபடியும் காலேஜில் சேர்த்து விட்டு வருவது. எதுவும் பயன்படாவிடில் கண்ணனைக் கையோடு ஊருக்குக் கூட்டிக்கொண்டு வந்து விடுவது என்று முடிவு கட்டினார் வாத்தியார் சுந்தரம். யாரிடமோ கடன் வாங்கிக் கொண்டு இதயம் கனக்க, துக்கம் நெஞ்சை அடைக்க ரயில் ஏறினார்.

* * *

ஸ்டேஷனில் இறங்கியவுடன் ஒரே சிவப்புத் தொப்பியாகக் காட்சி அளித்தது. போலீஸ் பாரா இங்கும் அங்கும் பவனி வந்து கொண்டு இருந்தது. இவ்வளவையும் பார்த்துக் கொண்டு நடந்தார் சுந்தரம். எந்தப் 'போலீஸ் லாரி'யிலாவது தன் மகனைப் பிடித்துக் கொண்டு வருகிறார்களோ என்று வழியெல்லாம் பார்த்துக் கொண்டே நடந்தார். இதயம் பட பட வென்று அடித்துக் கொள்ளத் தள்ளாடிக் கொண்டே போனார்.

"அவன் எங்கே இருக்கிறானோ. அவனைத்தான் கலாசாலைப் பக்கமே எட்டியும் பார்க்கக் கூடாது என்று உத்தரவு போட்டு இருக்கும்போது அவனுடைய 'பாசறை' எங்கு அமைக்கப்பட்டு இருக்குமோ. அவனைக் கண்டு பிடித்து நல்ல புத்திமதி சொல்ல மற்ற அடாபிடிக்காரர்கள் விட வேண்டுமே" என்றெல்லாம் சுந்தரம் சிந்திக்க ஆரம்பித்தபோது அவருக்கு என்னத்திற்குப் புறப்பட்டு வந்தோம் என்றாகி விட்டது. ஏதோ ஒரு சிறு நம்பிக்கை மட்டும் அவரைக் கலாசாலையின் பக்கம் தள்ளிக் கொண்டு போயிற்று.

வாசற்படிக்கு அருகே போனார். போலீஸ் பந்தோபஸ்துடன் கலாசாலை இறக்கப்பட்டுப் பல மாணவர்கள் 'பர்மிட்'டுடன் அடக்க வொடுக்கமாகப் போய்க் கொண்டு இருந்தார்கள். "இவ்வளவு பேர் ஒழுங்காகப் படிக்கும்போது என் பிள்ளை கண்ணனுக்கு மட்டும் என்ன கேடுகாலம்!" என்று தோன்றிய போது சுந்தரத்துக்கு அவனை வெட்டி விடலாமா என்று கோபம் வந்தது.

பெருமூச்சு விட்டுக் கொண்டே ஒரு மாணவனை அருகே அழைத்து "நன்னிலம் எஸ். கண்ணன், இண்டர் இரண்டாவது வருஷம்; என் பிள்ளை; அவன்..." என்று திக்கினார் சுந்தரம்.

"ஓஹோ! கண்ணனா? என் வகுப்புத்தான்; அவனைப் பார்க்க வேண்டுமா?" என்று அந்தப் பையன் சொல்லி முடிப்பதற்குள், "ஆமாம்! இப்போது எங்கே இருப்பான்?" என்று பரபரப்பாகக் கேட்டார் வாத்தியார் சுந்தரம். அவர் முகத்திலே பீதி ஒன்று பீறிட்டு நின்றது.

"வகுப்புக்கு வந்து இருப்பானே! அவன், நான் எல்லாம் இந்தக் கலாட்டாவில் சேரவில்லை. அன்று கல்வி மந்திரி இங்கே விஜயம் செய்திருந்த போது, கண்ணன் குடுகுடு வென்று ஓடி வந்து, தன் நண்பர்கள் சிலரை மன்னிக்க வேண்டும்; தெரியாத்தனமாகச் செய்து விட்டார்கள் என்று பார்ப்பவர் உருகும்படி வேண்டிக் கொண்ட கண்ணன் அல்லவா, அவன்? அவனுடைய அப்பாவா நீங்கள்! இதோ வரச் சொல்லுகிறேன்" என்றான்.

சுந்தரத்துக்குத் தன் செவிகளை நம்ப முடியவில்லை! "இது நிஜந்தானா?" என்று கேட்டு விட்டு ஆச்சரியத்துடன் அசைவற்று நின்றார்.

"ஆமாம்! உங்கள் கண்ணன் இல்லாவிடில் இன்னும் எவ்வளவோ பிள்ளைகளுக்குச் சீட்டுக் கிழிக்கப்பட்டிருக்கும். அவர்களைக் கண்ணன் தான் காப்பாற்றினான்" என்று அம்மாணவன் பொரித்துக் கொட்டி விட்டு "இருங்கள், வரச் சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டு நகர ஆரம்பித்தான் ஹாஸ்டல் பக்கம்.

சுந்தரம் தன்னை மறந்து நின்றவர் ஒரு கணம் யோசித்தார். அடுத்த நிமிஷம், "வேண்டாம்!" என்று அவனுடைய தவடையைத் தாங்கிச் சொல்லி விட்டு விறுவிறு என்று ஸ்டேஷனை நோக்கித் திரும்பி நடந்தார்.

போகும்போது அவர் இதயம் சொல்லிக் கொண்டே போயிற்று:—

"கண்ணனைப் பார்க்காமல் திரும்பினதுதான் சரி. பேப்பரில் வந்தது எந்த என். கண்ணனோ! நான் இதற்காகப் புறப்பட்டு வந்தேன் என்று அவன் நினைத்தால் எவ்வளவு சங்கடப்படுவான்! என்ன இருந்தாலும் அவன் என் கண்ணன் அல்லவா? தப்புத் தண்டாவுக்குப் போவானா!"



அனுதாபம்

பி.எஸ்.மணி

வைகாசி மாதம் பிறந்து விட்டது. காலை ஒன்பது மணிக்கே வெய்யிலின் உக்கிரம் தாங்க முடியவில்லை. பன்னிரண்டு மணியானால் கேட்பானேன்? வெளியில் ஒருவரும் தலைகாட்ட முடியவில்லை. வெய்யிலின் கடுமையைத் தாங்க முடியாமல் தாழ்வாரத்தில் உட்கார்ந்து விசிறியை வைத்து விசிறிக் கொண்டு 'உஸ், உஸ்' என்று சப்தமிட்டுக் கொண்டிருந்தார் பலராமய்யர். கதிரவனின் கொடூரத்தையெல்லாம் இலட்சியம் செய்யாது, கருமமே கண்ணாகக் கருதிய தபால்காரத் தங்கவேல் வீடு வீடாக ஏறி அன்றையத் தபால்களைப் பட்டுவாடாச் செய்வதில் மும்முரமாக முனைந்திருந்தான். கடைசியில் பலராமய்யர் வீட்டுக்கும் வந்து அவன் ஒரு கடிதத்தை வீசி எறிந்து விட்டுப் போனான்.

பலராமய்யர் கடிதத்தின் உறையைப் பிரித்தார். அதிலிருந்த திருமண அழைப்போடு ஒரு கடிதமும் இருந்தது. அதைப் பார்த்து விட்டு அவர் தன் மனைவி மங்களத்தைக் கூப்பிட்டார். சமையலறையில் ஏதோ காரியமாயிருந்த அவரது சஹதர்மிணி உடனே வந்தாள்.

“தெரியுமோ, உனக்கு? நம்ம பத்மாவுக்கு அடுத்த வாரம் திருச்சியில் கல்யாணமாம். நம்மைக் கட்டாயம் வந்து சேரும்படி ரிடயர்டு டிபுடி கலெக்டர் கணபதி ராமய்யர் எழுதியிருக்கிறார். பத்மா நம் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாளாம். நான் ஒரு வாரம் லீவுக்கு நாளைக்கே எழுதிப் போட்டு விடுகிறேன். நாம் இரண்டு பேரும் போகலாமல்லவா?” என்று கேட்டார் பலராமய்யர்.

“நன்றாய்ச் சொன்னீர்கள்! நாம் கட்டாயம் போக வேண்டியதுதான். அந்தத் தாயில்லாப் பெண்ணுக்கு வழி செய்து வைத்த நீங்கள் போகாவிட்டால் நன்றாயிருக்குமா? போகத்தான் வேண்டும்” என்று கனிவோடு கூறினாள் மங்களம்.

அடுத்த நிமிஷம் அவள் எதையோ நினைத்துக் கொண்டவளாய், “என்ன! பத்மாவின் சித்தப்பாவுக்குக் கல்யாணக் கடுதாசி வந்திருக்குமோ, இல்லையோ? ஒரு வேளை மறந்திருப்பார்கள்; நீங்களே போய்......” என்று ஆரம்பித்தாள்.

அதற்குள் பலராமய்யர் குறுக்கிட்டு, “அவர்கள் வந்தால் என்ன, வராவிட்டால் என்ன? தாயில்லாப் பெண்ணை வைத்துக் காப்பாற்றத் தெரியவில்லை. அவர்களுக்குக் கல்யாணக் கடுதாசி அனுப்பா விட்டால் ஒன்றும் குறைந்து போய்விடாது” என்று ஆத்திரத்துடன் கூறிவிட்டு எழுந்தார்.

ஏதோ பட்டென்று இடித்துத் தலையில் வேதனையை உண்டாக்கியது. திடுக்கிட்டு விழித்தெழுந்து சுற்றுமுற்றும் பார்த்தார். மங்களம் எதிரே நிற்கவில்லை. கல்யாணக் கடுதாசியும், கடிதமும் மாயமாய் மறைந்து விட்டன. நடந்ததெல்லாம் வெறும் கனவு என்று அப்பட்டமாகப் புரிந்தது.

சில நாட்களுக்கு முன் தான் ஒரு சிறுமியைச் சந்தித்ததும், அன்று காலையில் அடுத்த பங்களாவிலிருக்கும் கணபதி ராமய்யர் தம் வீட்டுக்கு வந்து விட்டுப் போனதும், தாம் அந்தச் சிறுமியைத் தேடிப் போய்க் காணாமல் களைத்து வீட்டுக்கு வந்து படுத்ததும் அவருடைய ஞாபகத்துக்கு வந்தது.

★

ஒருநாள் காலை ஒன்பது மணி இருக்கும். ஆபீஸுக்குப் போவதற்காக மாம்பலம் ரயில்வே ஸ்டேஷனை நோக்கிச் சென்று கொண்டிருந்தார் பலராமய்யர். முதல் தெருவைக் கடந்து இரண்டாவது தெருவை அடைந்தார். அந்தத் தெருவின்

திருப்பத்தில் ஒரு பெண் நின்று அழுது கொண்டிருந்தாள். அவளுக்குப் பத்து வயதிருக்கலாம். அப்பெண்ணின் பால் வடியும் முகமும், கிழிந்த உடையும் அவருடைய மனதைப் பெரிதும் இளகச் செய்து விட்டன. அப்பெண்ணின் அருகிலே சென்று, "என்ன அம்மா! ஏன் அழுது கொண்டிருக்கிறாய்?" என்று வினவி அவள் கண்களிலிருந்து வழிந்த நீரைத் தமது கைக்குட்டையால் துடைத்தார்.

"மாமா!...... நான் வந்து...... நான் வந்து......" என்று தேம்பிக் கொண்டே, "என் கையிலிருந்த ஓரணாக் காசைக் கீழே போட்டுட்டேன். வீட்டுக்குப் போனால் என் சித்தப்பாவும் சித்தியும் அடித்து நொறுக்கி விடுவார்கள்" என்று கூறினாள்.

"என் பாப்பா! உனக்கு அப்பா, அம்மா இல்லையா?" என்று பரிதாபத்துடன் வினவினார் பலராமய்யர்.

"இல்லை மாமா! நான் என் சித்தப்பா வீட்டிலே இருக்கிறேன். அவர் ரொம்பக் கோபக்காரர்!" என்று சொல்லும் பொழுதே அவள் கண்களிலிருந்து நீர் அருவியாகப் பொழிந்தது.


அவளுடைய பரிதாபப் பார்வையும் அழுகையும் அவரை என்னவோ செய்தன. தம் பையிலிருந்த ஓரணாக் காசை எடுத்துக் கொடுத்து, "இந்தா, இதையாவது பத்திரமாக வைத்துக் கொள். தொலைத்து விடாதே!" என்று எச்சரித்து விட்டு ஸ்டேஷனை நோக்கி நடந்தார்.

அந்தப் பெண் அவர் கொடுத்த காசைப் பத்திரமாகத் தன் கையில் வைத்துக் கொண்டாள். அதோடு மட்டுமல்ல; தான் தொலைத்த காசையும் அவள் தேடிக் கொண்டிருந்தாள்.

பலராமய்யர் கொஞ்ச தூரம் தான் சென்றிருப்பார். அதற்குள் யாரோ அவரைப் பின் தொடர்ந்து ஓடிவரும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தார். அதே பெண் அவரை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தாள். அருகில் வந்ததும் ஓடி வந்த களைப்பால் அவளுக்கு மூச்சுத் திணறியது. பேச முடியவில்லை. "என்ன, நான் கொடுத்த காசையும் தொலைத்து விட்டாயா? எதற்காக இவ்வளவு தூரம் ஓடி வந்தாய்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் பலராமய்யர்.

"இல்லை மாமா! என்னுடைய காசு அகப்பட்டு விட்டது. இந்தாருங்கள், உங்கள் காசு!" என்று கூறித் தனது கையிலிருந்த காசை அவரிடம் கொடுக்கக் கையை நீட்டினாள் சிறுமி. அப்பெண்ணின் கபடமற்ற தன்மையைக் கண்டு பலராமய்யரின் மனம் எல்லையில்லா ஆனந்தம் எய்தியது. "பரவாயில்லை; அந்தக் காசை நீயே வைத்துக்கொள். இந்தா, இன்னும் இரண்டணா; இதையும் பத்திரமாக வைத்துக் கொள்!" என்று சொல்லித் தம் பையில் அன்றைய வெற்றிலைப் பாக்குச் செலவுக்காக வைத்திருந்த இரண்டணாவையும் எடுத்துக் கொடுத்தார்.

அப் பெண் மெதுவாகக் கையை நீட்டி அந்தக் காசை வாங்கிக் கொண்டாள்.



பிறகு அவரை நோக்கிப் புன்முறுவல் செய்து விட்டு அங்கிருந்து ஓடி விட்டாள். பலராமய்யர் ஸ்டேஷனை நோக்கி விரைவாக நடக்க ஆரம்பித்தார். அன்று முழுதும் அப் பெண்ணின் உருவம் சோக சித்திரமாக அவர் மனத்தில் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தது.

★

அன்று ஞாயிற்றுக்கிழமை. காலையில் குளிப்பதற்காகக் கிணற்றடிக்குக் கிளம்பினார் பலராமய்யர். பக்கத்துப் பங்களாவிலிருக்கும் ரிடயர்டு டிபுடி கலெக்டர் அவரை நெருங்கி, "ஸார்! என் பேரக் குழந்தையைப் பார்த்துக் கொள்ளுவதற்கு ஒரு சிறு பெண் கிடைத்தால் தேவலை. அந்தப் பெண்ணை நானே வளர்த்து வயது வந்ததும் கல்யாணம் செய்து வைத்து விடுகிறேன்" என்றார்.

இதைக் கேட்டதும் பலராமய்யருக்கு அன்று பார்த்த அநாதைப் பெண்ணின் ஞாபகம் வந்தது. அவளை அழைத்துக் கொண்டு வந்து இவர் வீட்டில் விட்டு விட்டால் என்ன? அப்பெண்ணுக்கும் உபகாரம் செய்ததுபோல் இருக்கும்; அதே சமயத்தில் இப்பெரியவருக்கும் உதவி செய்தமாதிரி இருக்கும் என்று தோன்றியது அவருக்கு. "அப்படியே ஆகட்டும். இன்னும் மூன்று நாட்களில் நல்ல பெண்ணாகப் பார்த்து ஏற்பாடு செய்து விடுகிறேன்" என்றார் சந்தோஷத்துடன்.


அன்றைக்கே அந்த ஏழைப் பெண்ணைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டு, பலராமய்யர் அந்தத் தெரு வழியாகப் பலமுறை உலாவினார். அந்தப் பெண்ணைப் பார்க்க முடியவில்லை. அலுப்போடு வீட்டுக்கு வந்து படுத்தார். அந்தப் பெரிய மனிதர் 'நானே அந்தப் பெண்ணை வளர்த்து வயது வந்ததும் கல்யாணம் செய்து வைத்து விடுகிறேன்' என்று கடைசியில் சொல்லிவிட்டுப் போனது அவர் காதில் ஒலித்துக்கொண்டேயிருந்தது. அதுவே பல சிந்தனைகளைக் கிளப்பி அப் பெண்ணுக்குக் கல்யாணம் நடப்பதாகவே கனவு காணும் அளவுக்கு அவரைக் கொண்டு வந்து விட்டு விட்டது.

★

இரண்டு நாட்கள் சென்றன. அப் பெண்ணைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. மூன்றாம் நாள் சாயந்திரம் பலராமய்யர் அலுப்புடன் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார். யாரோ ஒரு பெண் அழும் குரல் கேட்டது. அவருக்கு அக் குரலை எப்பொழுதோ, எங்கேயோ கேட்ட மாதிரி யிருந்தது. 'ஆம், அன்று பார்த்த அதே பெண்ணின் குரல்தான்; சந்தேகமில்லை' என்று தோன்றியதும் அவர் மனம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. விரைவாக அப் பெண்ணை நோக்கி நடந்தார். கொஞ்ச தூரம் வந்ததும் அவர் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டார். அவர் கண்ட காட்சி அவரைத் தூக்கி வாரிப் போடும்படி செய்தது. அவருக்கு ஒன்றுமே புரியவில்லை.

அன்று நடந்த சம்பவமே மறுபடியும் நடந்தது. யாரோ ஒரு பெரியவர் அவள் கையில் காசைக் கொடுத்து விட்டுச் சென்றார். அக்காசைப் பெற்றதும் அவளது அழுகைக் குரல் மறைந்த இடம் தெரியவில்லை. ஏதோ கீழே தேடுவதுபோல் பாசாங்கு செய்த பின் அவள் அப்பெரியவரைப் பின் தொடர்ந்து ஓடினாள். அப் பெரியவர் அக்காசை வாங்காமல் இன்னும் கொஞ்சம் காசு கொடுத்து விட்டுச் சென்றார். அவளும் வழக்கம்போல் தனது புன்னகையை வீசி விட்டு அன்ன நடை போட்டுக் கொண்டு சென்றாள்.

இந்தக் காட்சியைப் பார்த்ததும் மெய் மறந்து நின்று விட்டார் பலராமய்யர். 'ஐயோ! இச்சிறு பெண் தனது இளம் வயதில் பொய் சொல்லிப் பிழைக்க ஆரம்பித்துவிட்டாளே! இவளை அப் பெரிய மனிதரிடம் அழைத்துச் செல்ல வேண்டுமென்று விரும்பினேனே, அது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்!' என்று எண்ணியது அவர் மனம். மறு விநாடி அவர் கால்கள் தாமாகவே வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தன.



கிழவர்:—என்ன செட்டியார்? என் பையனிடம் ஒரு வீசை வெண்ணெய் வாங்கி வரச் சொன்னேன். நிறுத்துப் பார்த்தால் அரை வீசை கூட இல்லையே!

செட்டியார்:—உங்கள் பையனை நிறுத்துப் பார்த்தீர்களா?



அந்த ஜலதோஷத்தை விரட்டுங்கள்

இன்று இரவே !

ஒரே இரவில் ஜலதோஷத்தையும் இன்புளுயென்ஸாவையும் ஆஸ்ப்ரோ'' நிச்சயமாக விரட்டிவிடும் என்பதை ஆயிரக்கணக்கானவர்கள் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே ஏன் ஜலதோஷத்தால் அவஸ்தைப்படுகிறீர்கள்? அதனாலேற்படும் கோளாறுகளை—ஜுரவேகம், படுத்த படுக்கை, காலம் வீணாவது—முதலியவைகளை உணர்ந்தீர்களானால், ஒரு கணம்கூட தாமதிக்கமாட்டீர்கள். உடனடியாகச் செய்யுங்கள் :—

2 'ஆஸ்ப்ரோ'

வில்லைகளும் ஒரு கோப்பை எலுமிச்சம்பழ ரசமும் ஆச்சரியமான குணமளிக்கும்



தயாராகவிருங்கள். இன்றே ஒரு பாக்கெட் ஆஸ்ப்ரோ வாங்கி வையுங்கள். சமயத்திற்கு உதவும். சாதாரணமாக ஜலதோஷத்துக்கு அறிகுறி உலர்ந்த தொண்டையாகும். அதையும்

ஆஸ்ப்ரோவைக்கொண்டு

கொப்புளிக்கால் நீக்கிவிடலாம்



3 வில்லை கவருக்கு அ. 1½

30 வில்லை கவருக்கு அ. 15

எச்சரிக்கை ! மட்டமான வில்லைகளை உங்களுக்கு கொடுக்கக்கூடும். அவை 'ஆஸ்ப்ரோ'வைப்போல் தோன்றலாம்—ஆனால் தோற்றம் குணமளிக்காது—உட்புறந்தான் பிரதானம்.

காலக்ஷேபம்

இன்னும் ஓடுகிறது!

ஒருவர் தம் கடிகாரத்தின் பெருமையைப் பற்றித் தம் நண்பரிடம் சொல்ல ஆரம்பித்து, ஓயாமல் பேசிக் கொண்டே இருந்தார். நண்பர் பொறுமை யிழந்து, "இதென்ன ஸார், பிரமாதம்! என்னிடம் ஒரு கடிகாரம் இருந்தது. அதைக் கைப் பிசகாய்ப் போன மாதம் காவேரியில் போட்டுவிட்டேன். அது இன்னும் ஓடிக் கொண்டிருக்கிறது" என்றார்.

"என்ன! இன்னுமா ஓடுகிறது? நிஜந்தானா? அதே கடிகாரந்தானா?"

"கடிகாரமில்லை; காவேரி!"

★

இஷ்டம்போல்!

நீதிபதி (பஸ் விபத்துக்குக் காரணமா யிருந்த டிரைவரைப் பார்த்து):—நீ என்ன தான் சொல்லுகிறாய் இப்பொழுது?

டிரைவர்:—நான் என்னத்தைச் சொல்வது? இனிமேல் இந்த இழவெடுத்த ரோடு கான்ஸ்டபிள்கள் இல்லாத இடமாகப் பார்த்துப் போக வேண்டும்......!

நீதிபதி:—சரி, உன்னுடைய இஷ்டப்படி உனக்கு இரண்டு வருஷம் சிறைத் தண்டனை விதித்திருக்கிறேன், போ!

★

இயற்கைக்கு விரோதம்!

"நேற்று உங்கள் நாடகத்துக்குப் போயிருந்தேன். நன்றா யிருந்தது. ஆனால்......"

"ஆனால் என்ன? ஏதாவது குற்றங் குறைகள் இருந்தால் சொல்லுங்கள்!"

"நாடகம் நன்றா யிருக்கிறது. ஆனால் சில காட்சிகள் இயற்கைக்கு விரோதமா யிருக்கின்றன."

"அப்படியா? ஏதாவது ஒரு காட்சி சொல்லுங்கள்!"

"புது மணத் தம்பதிகளை ஒரு காட்சியில் காட்டி யிருக்கிறீர்கள். அடுத்த காட்சியில், ஆறு வருஷம் கழித்து மீண்டும் அவர்கள் வீட்டைக் காட்டுகிறீர்கள். அப்பொழுதும் அந்த வீட்டில் ஒவ்வொரு சாமானும் அது அது வைத்த இடத்தில் அப்படி அப்படியே இருப்பதாச் இருக்கிறது. அது இயற்கைக்கு விரோதம் இல்லையா?"

எப்படி?

கண் டாக்டர் (எழுத்துக்கள் அடங்கிய போர்டை மாட்டி):—ஸார், இந்தப் போர்டிலுள்ள எழுத்துக்களைத் தயவு செய்து உரக்கப் படியுங்கள்.

வந்தவர்:—டாக்டர், ஸார்! மன்னிக்க வேண்டும். எனக்குக் கண் பார்வை ரொம்பக் குறைவு. தயவு செய்து நீங்களே படித்துச் சொல்லுங்கள்!

★


அவசியம்தான்!

நாகரிக ஸ்திரீ (டாக்டரிடம் சென்று):—டாக்டர் ஸார்! எனக்கு ஒரு ஆப்பரேஷன் செய்ய வேண்டும்......

டாக்டர்:—உங்களுக்கு என்ன? எதற்கு ஆப்பரேஷன் செய்ய வேண்டும்?

நாகரிக ஸ்திரீ:—எனக்கு ஒரு உபத்திரவமும் இல்லை. எதற்காக ஆப்பரேஷன் என்றால், நான் மாதர் சங்கத்தில் சேர்ந்திருக்கிறேன். அவர்களோடு பேசுவதற்கு எனக்குச் சமாசாரம் இல்லாமல் சிரமமா யிருக்கிறது. அதற்காகத்தான்!


எப்படி முடியும்?



செட்டியார்:—சௌக்கியமா வாத்தியாரய்யா? நம்ம பையன் எப்படி இருக்கிறானுங்க?

வாத்தியார்:—உம்ம பயலுக்கும் பள்ளிக் கூடத்துக்கும் ரொம்ப ரொம்ப தூரம்! அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்......

செட்டியார்:—அதென்னமாங்க தூரமா யிருக்கும்? அவன் தினம் சைக்கிளிலேதானே வருகிறான்......!



சித்திரலேகா

ஸ்ரீ பகவதி சரண் வர்மா

மொழிபெயர்ப்பு: ரா.வீ.

சித்திரலேகா அம்மாதிரிப் பதில் சொல்வாள் என்று குமாரகிரி எதிர்பார்க்கவில்லை. அவள் 'சம்மதமில்லை' என்றுதான் சொல்லுவாள் என்று எதிர்பார்த்தான். ஆகவே, "நர்த்தகி, நீ தவறுதான் இழைக்கிறாய். நீ செய்யச் சித்தமாயிருப்பதாகச் சொல்லுகிறாயே, அந்தக் காரியம் மிகவும் கடினமானது. எல்லோருமே செய்யக் கூடிய காரியம் அல்ல அது. நான் என்னும் அகந்தையை மறப்பது மிகவும் சிரம சாத்தியமான காரியம். நீ அதைச் செய்ய முடியாது. வீண் பிரயாசை எதற்கு?" என்றான்.

சித்திரலேகா கம்பீரமாக, "யோகி! தாங்கள் சொல்லுவது சரியான வார்த்தைதான். அது கடினமான காரியந்தான் என்பதை நானும் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் காரியாம்சத்தில் ஈடேற முடியாத காரியம் என்று சொல்லி விடுவதற்கில்லையல்லவா?" என்று கேட்டாள்.

யோகி குமாரகிரி ஒரு முறை சித்திரலேகாவைத் தலையிலிருந்து கால்வரை ஏற இறங்கப் பார்த்தான். காட்டியத்தின் பொழுது அணிந்திருந்த அதே ஆடை ஆபரணங்கள்தான் அவளுடைய சரீரத்தை அப்பொழுதும் அலங்கரித்துக் கொண்டிருந்தன. அதே அழகு! வெறியூட்டும் அதே மனோமோகன உருவம்! அவளுடைய கண்களிலேதான் என்ன கவர்ச்சி! என்ன உல்லாசம்! குமாரகிரி மனதுக்குள்ளே 'இவள் ஈடு இணையற்ற அழகிதான். சந்தேகமில்லை' என்று முணுமுணுத்துக் கொண்டான். அன்றுவரை குமாரகிரி அவன் அழகிலே அவ்வளவாகக் கவனம் செலுத்தியதில்லை; அதைக் கண்டு ரசித்ததும் இல்லை. அன்பும் ஆசையும் அவன் தன் வாழ்க்கையில் என்றுமே கண்டிராத புதிய பொருள்கள். அந்த அழகைக் கண்டு யோகியின் உள்ளத்திலே, தன்னையும் மீறி ஒரு புல்லரிப்பு உண்டாயிற்று. யோகி குமாரகிரி இகலோகத்திலே இம்மாதிரியான இனம் தெரியாத இன்பத்தை நுகர்ந்தது இதுதான் முதல் தடவை. ஆகா! அந்த இன்பத்திலேதான் என்ன சுகானுபவம்! "அழகிற் சிறந்த நடனராணி! உனக்குத் தீக்ஷை அளிப்பது எவ்வளவு தூரம் உசிதமானது என்பதை நான் தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். ஆகவே, இப்பொழுது உனக்கு ஒன்றும் தீர்மானமாகச் சொல்வதற்கில்லை" என்றான்.

"இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லையா?"—குமாரகிரி சொன்ன அதே சொற்களைச் சித்திரலேகா தானும் ஒரு முறை சொன்னாள். பிறகு "ஏன்? உங்களுக்கு என்மீது நம்பிக்கை இல்லையா? அல்லது உங்களுக்கு உங்கள் மீதேதான் நம்பிக்கை இல்லையா? யோகி! ஒன்று மட்டும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். எனக்குத் தீக்ஷை அளிப்பதோ அளிக்காமலிருப்பதோ உங்கள் கையில் இருக்கிறது. ஆகவே உங்களுக்கு அது ஒரு பிரமாதமான விஷயமாகத் தோன்றியிருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அது 'வாழ்வதா, சாவதா?' என்ற இரண்டே கேள்விகளில் அடங்கிவிடுகிறது. ஆகவே உங்கள் தலை மீது ஒரு மாபெரும் பொறுப்பு சுமருகிறது. ஒரு மனிதன் வேண்டிய மட்டும் தண்ணீர் வைத்திருக்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவனிடம் ஒருவன் வந்து, 'ஸ்வாமி! தாகம் தாங்கவில்லை. கொஞ்சம் தண்ணீர் கொடுத்து உதவுங்கள்' என்று கேட்கிறான். ஆனால் தண்ணீர் வைத்திருப்பவன் தண்ணீர் தராமல், தாகத்தினால் வாடுபவன், தாகத்தினால் வாடி மடிவதைக் கண்ணுற்றவாறு நின்றால், அவனைப் போன்ற பாவி யாருமே உலகத்தில் இருக்க முடியாது. ஏழேழு ஜன்மத்திலும் அவனுடைய ஆத்மாவுக்கு இன்பம் கிட்டாது. தெரியுமா?" என்று சொன்னாள்.

இந்தப் பதிலைக் கேட்ட குமாரகிரி நடுநடுங்கி விட்டான். "நர்த்தகி! உன்னிடம் சகல விஷயங்களையும் தெளிவாகச் சொல்லி விடுவதுதான் உத்தமம். உன் இதயத்தின் ஆழத்திலே தர்சன சாஸ்திரத்தின் விபரீத

மான சித்தாந்தங்கள் வேரூன்றிப் போயிருக்கின்றன. ஆகவே உனக்குத் தீக்ஷை அளிக்கும் விஷயத்தில் என் மனம் மிகவும் தயங்குகிறது. அந்தச் சித்தாந்தங்களுக் கேற்ற தர்க்கமும், அந்தச் சித்தாந்தங்களை நம்பும் சுபரிடத்திலே அதற்கேற்ற கவர்ச்சியும் இருக்கிறது. ஆகவே அந்த விபரீத சித்தாந்தங்களை உன்னிடமிருந்து களைத் தெறிவதற்குப் பதிலாக, நானே அதில் சிக்குண்டு விட்டால்...? இல்லை, இல்லை, இல்லை..." என்று மேலே என்ன சொல்வதென்று புரியாமல் குமாரகிரி அரை குறையாகவே நிறுத்திவிட்டான். தனது மனோ பலவீனத்தை முதன் முதலாக உணர்ந்த அவன் தன்னையும் மறந்து அதை வாய் விட்டுச் சொல்லியும் விட்டான். அதுவும் அவன் தனது மனோ பலவீனத்தை வெளியிட்டது யாரிடத்தில் என்கிறீர்கள்? கேவலம் ஒரு நடன மாதினிடத்தில்! அவனுடைய துரதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்லுவது? குமாரகிரிக்குத் தன்மீதே கோபம் கோபமாக வந்தது. அவனுடைய சாந்தமான முகம் கோபத்தில் சிவந்தது. "சுந்தரி! நான் சொன்னதெல்லாம் கவைக்கு உதவாத சொற்கள். உன்னிடம் ஒன்று மட்டும் கேட்டுக் கொள்ளுகிறேன். தயவுசெய்து இப்பொழுதே, இந்த க்ஷணமே, இந்த இடத்தை விட்டுப் போய்விடு! நிலைமையை நன்றாக ஆராய்ந்து பார்ப்பதற்கு எனக்கு அவகாசம் கொடுத்து உதவி செய்!" என்று அவன் மிகவும் கடுமையாகச் சொன்னான்.



"ரொம்ப நல்லது, யோகி! நான் இங்கே இருப்பது உங்களுக்குக் கஷ்டமாக இருக்குமானால், நான் இங்கிருந்து போய் விடுவதுதான் உசிதமானது. எதிரே நிற்கும் பெண் அந்தகாரத்திலுல் சூழப்பட்டவள்; மாயையில் உழலுபவள் என்று தாங்கள் நினைக்கக்கூடும். என்னுடைய விபரீதமான சித்தாந்தங்கள் உங்களுக்கு ஒருவிதத் திகிலையும் உண்டாக்கலாம். ஆனால் தாங்கள் அவ்வாறெல்லாம் எண்ணிப் பயப்படுவதானது சிறிதும் ஆதாரமற்ற செய்கையாகும். ஏனெனில் உங்களிடம் தீக்ஷை பெறுவது என்ற நோக்கத்துடன் புறப்பட்டபொழுதே நான் என் நம்பிக்கைகள், நோக்கங்கள், பண்புகள் அனைத்தையும் மூட்டை கட்டி வைத்து விட்டுத்தான் புறப்பட்டு வந்தேன். பெண் அந்தகாரம் சூழ்ந்தவள்; மாயையில் உழலுபவள் என்று எண்ணுகிறீர்களே, அங்கேயும் தாங்கள் தவறுதான் இழைக்கிறீர்கள் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். பெண் சக்தியின் ஸ்வரூபம். அவளை ஆட்டி வைக்கும் ருத்திரதாரி தகுதி வாய்ந்த மனிதனாக இருந்தால், அவன் படைப்புத் தொழிலை மேற் கொள்ளுவான்; அவளை ஆட்டிவைப்பவன் தகுதியற்றவனாக இருந்து விட்டால், அவன் அழித்தல் தொழிலை மேற்கொண்டு விடுவான். ஆகையால் பெண்ணினிடம் பயந்து சாகும் மனிதன் ஒன்று, தகுதியற்றவனாக இருக்கவேண்டும் அல்லது மிகவும் பயங்கொள்ளியாக இருக்க வேண்டும். தகுதியற்றவன், பயங்கொள்ளி இருவருமே



அபூரணமானவர்கள்; கவைக்கு உதவாதவர்கள். இதில் சந்தேகமில்லை."

இதைச் சொல்லி முடித்ததும் சித்திரலேகா அங்கிருந்து புறப்பட்டு விட்டாள். கொஞ்ச தூரம் சென்றதும் அவள் ஏதோ நினைத்துக் கொண்டு சற்றுத் தயங்கி நின்றாள். அப்பொழுது குமாரகிரியின் பார்வை சூன்யத்தில் நிலைத்திருந்தது.

"ஆமாம், நான் ஒரு விஷயம் சொல்ல மறந்தே போய் விட்டேன். அதாவது என்னவென்றால், நான் காலைக்கு மறுபடியும் உங்களிடம் ஒரு தடவை வருவேன். இதற்கிடையே உங்களுக்கு யோசிப்பதற்கு வேண்டிய அவகாசமும் கொடுத்திருக்கிறேன். நன்றாக நீர் ஆலோசித்து எனக்குத் தீக்ஷை அளிப்பது உசிதம் என்று தோன்றினால் காலைக்குள் எனக்குப் பதில் சொல்லி விடுங்கள். நல்லது, வருகிறேன். திருவடிகளுக்கு அடியாளின் வணக்கங்கள்" என்று சொல்லிச் சித்திரலேகா புறப்பட்டாள்.

சித்திரலேகா புறப்படுவதைக் கண்டதும் யோகி குமாரகிரிக்கு ஓரேயடியாகத் தூக்கி வாரிப் போட்டது. சித்திரலேகாவின் தேனினும் இனிய குரல் அவன் காதுகளிலே இன்னும் ரீங்காரம் செய்து கொண்டிருந்தது; அவளுடைய சௌந்தர்ய ரூபம் அவன் கண்களுக்கு எதிரே ஆனந்த நர்த்தனம் புரிந்து கொண்டிருந்தது. எவ்வளவு குடித்தும் திருப்தி என்பதையே கண்டறியாத குடிகாரனைப் போல, அவன் சித்திரலேகாவை வைத்த கண் வாங்காமல் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். குடி போதையில் மூர்ச்சை போட்டு மயங்கி விழுந்து விடப் போகிறோமே என்ற பயமிருந்தும், 'கமகம' என்ற வாசனையுடன் வழிந்தோடும் ஆஸவத்தைக் காணும் பொழுது, குடிகாரனுக்கு அதைக் குடிக்காமல் சும்மா விட்டுவிட மனம் வருமா? தன்னை அடக்கி ஆள்வது குமாரகிரிக்கு மிகவும் சிரமமாகப் போய்விட்டது. ஆகவே அவன் "சுந்தரி, சற்று இரு!" என்று கூப்பிட்டுச் சித்திரலேகாவை நிறுத்தினான்.

அடுத்த கணமே குமாரகிரியின் கண்கள் குனிந்து தரையை நோக்கலாயின. அவனுடைய உள்ளத்தின் தான்தோன்றித்தனத்தைக் கண்ட ஆத்மா தன்னால் ஆன

மட்டும் எதிர்த்துப் போராடியது. ஆனால் உள்ளம், 'இந்தப் பெண்ணின் கேள்விக்குச் சரியான பதில் சொல்லி என் நிலைமையைத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டியது அவசியம்' என்று சொல்லி ஆத்மாவின் சிந்தனையையும் எதிர்ப்பையும் துடைத்தெறிந்து விட்டது. சித்திரலேகா திரும்பி வந்தாள். அவளுடைய வதனத்திலே முல்லை முறுவல் தவழ்ந்தது. இதயத்திலே இன்ப உணர்ச்சி தாண்டவமாடியது.

"யோகி! தாங்கள் தங்களுடைய பிழையை உணர்ந்து கொண்டு விட்டீர்கள் என்று தோன்றுகிறது. எதற்காக என்னைக் கூப்பிட்டீர்கள், சொல்லுங்கள்" என்று கேட்டாள் சித்திரலேகா.

குமாரகிரி வாய்திறந்து ஒன்றும் சொல்லவில்லை. அந்த மனோரம்மியமான நிலவொளியிலே அவன் சித்திரலேகாவின் எழிலைப் பருகியவாறு நின்றிருந்தான். அவன் சித்திரலேகாவின் சிங்காரத்தைக் கண்ணுற்றான்; சிங்காரத்தின் பெருமையிலே பூரித்திருந்த வனப்பு வாய்ந்த அவளுடைய உருவத்தையும் கண்ணுற்றான். அவன் மதுவைக் கண்டான்; மதுவின் மனோஹரமான வாஹினியையும் கண்டான். அவன் ஆசையை உணர்ந்தான்; ஆசையின் பெருமையை உணர்ந்தான்; அதன் மனோவலிய சக்தியையும் உணர்ந்தான். திடீரென்று அவனுடைய உள்ளத்திலே ஒரு கேள்வி எழுந்தது. "பெண் என்றால் என்ன? அழகென்பது என்ன? கடவுள் இவ்விரண்டையும் ஏன் சிருஷ்டித்தார்?"

இது சற்று அதிசயமான கேள்விதான். பல்லாண்டுகளாக உள்ளத்தே ஊறிக் கிடந்த சிந்தனைப் பிரவாகம், 'நீ என்ன வழி தவறிப் போகிறாய் போலிருக்கிறதே!' என்று எச்சரித்தது. அவன் மிகவும் சிரமப்பட்டுத் தன் உள்ளத்திலே எழுந்த கேள்விகளை எல்லாம் அடக்கி விட்டான்.

"சுந்தரி! நான் ஏதோ பிழை செய்து விட்டதாகச் சொன்னாயே! நான் அப்படி என்ன தவறு செய்து விட்டேன்? எனக்குத் தெரிந்தவரை நான் ஒரு தவறும் செய்யவில்லையே!" என்றான் குமாரகிரி.

சித்திரலேகா எதிர்வாதம் புரிய விரும்பவில்லை. "ஸ்வாமி, மன்னிக்க வேண்டும். நான் எவரை என்னுடைய குருவாக ஆக்கிக் கொள்வது என்று நிச்சயித்து விட்டேனோ, அவர் தவறே இழைக்கக் கூடியவர் அல்ல; தவறு இழைக்க வேண்டுமென்று நினைத்தாலும் கூட அவரால் தவறு இழைக்க முடியாது. ஏதோ வாய் தவறிச் சொல்லி விட்டேன். அதற்காக மன்னிக்க வேண்டுகிறேன்" என்றாள்.

"அது போகட்டும். எதற்காக என்னைக் கூப்பிட்டீர்கள், சொல்லுங்கள் என்று கேட்டாய் அல்லவா? ஒன்றுமில்லை என்று நான் சொன்னால், 'ஒரு காரணமுமில்லாமலா என்னைக் கூப்பிட்டீர்கள்?' என்று நீ கேட்பாய். இப்படியெல்லாம் நான் ஏன் செய்தேன் என்பது எனக்கே சரியாக விளங்கவில்லை. இந்தத் தடவை நான் நிச்சயமாக ஒரு மாபெரும் பிழை செய்து விட்டேன். இருந்தாலும் நான் உன்னை எதற்கோ கூப்பிட்டேன் அல்லவா? ஒரு விஷயம் சொல்லி விடுகிறேன். என்னவென்றால் உனக்குத் தீக்ஷை அளிக்க என்னால் இயலாது. அது மிகவும் சிரமசாத்தியமான காரியம். உனக்குத் தீக்ஷை அளிக்கப் புகுவதன் அர்த்தம், கடைசியில் நானே உன்னிடம் தீக்ஷை பெறுவதாக முடிந்தாலும் முடியக் கூடும். ஆகவே நான் அதற்குத் தயாராயில்லை" என்றான் குமாரகிரி.

இதைச் சொல்லி முடித்ததும் குமாரகிரியின் கண்கள் அஸ்தமனமாகப் போகும் சந்திரன்மீது லயித்துவிட்டன.

சித்திரலேகா மிகவும் கம்பீரமாகத் தோற்றமளித்தாள். அவளுடைய வதனத்திலே நிராசையின் மங்கிய ஒளி தாண்டவமாடியது. அவளுடைய கண்கள் எதையோ பறிகொடுத்து விட்டவை போலத் தோற்றமளித்தன. அவளுடைய விழிகளிலே கருணையின் சாயை படர்ந்திருந்தது. அவள் மிகவும் மெதுவான குரலில், "ஸ்வாமி! நீங்கள் செய்த தவறு, உங்களைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக எனக்கு மனவருத்தத்தை அளிக்கிறது. நான் வேறென்ன செய்வது? நீங்கள் என்னால் முடியாது என்று இலேசாகச் சொல்லிவிட்டீர்கள். அது என் வாழ்க்கையை எந்த நிலைக்குக் கொண்டு போய் விடும், எப்படிப் பாதிக்கும் என்று நான் இப்பொழுதே சொல்லி விடுவதற்கில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். நீங்கள் என்னை — என் வாழ்க்கையையே ஆட்கொண்டு விட்டீர்கள். இந்நேரம் வரை என் உள்ளத்திலே நம்பிக்கை ஒளி வீசிக் கொண்டிருந்தது. என்றைக்காவது ஒரு நாள் என் வேண்டுகோளுக்கு இரங்கி, எனக்குத் தீக்ஷை அளிக்கக் கட்டாயம் சம்மதிப்பீர்கள் என்ற இலேசான நம்பிக்கையுடன் நான் போய்க் கொண்டிருந்தேன்.

ஆனால் கொஞ்ச நஞ்ச மிருந்த அந்த நம்பிக்கையும் இன்று அடியோடு அழிந்துவிட்டது. என் வாழ்க்கை இருள் சூழ்ந்தது என்று தாங்கள் கருதலாம். நானோ உங்கள் பிரகாசத்தைக் காண விரும்புகிறேன். என் ஆசை நிறைவேறாது போலிருக்கிறது. ஆனால் அதற்காக உங்களைக் குறைகூறிப் பயனில்லை. என் பாக்கியத்தைத்தான் நொந்து கொள்ள வேண்டும்" என்றாள்.

இதைச் சொல்லியதும் சித்திரலேகா யோகி குமாரகிரிக்கு வெகு சமீபத்தில் போய் நின்றாள்.

யோகி பேசாமல் நின்றான். சித்திரலேகா அவனுடைய இரு கைகளையும் பற்றிக் கொண்டாள். யோகி தன் உடலிலே விசித்திரமான ஒருவிதப் புல்லரிப்பு உண்டாவதை உணர்ந்தான். அதில்தான் என்ன சுகம்! என்ன இன்பம்! என்ன உல்லாசம்!

"ஆமாம், நீங்களும் நானும் சேர்ந்து வாழ்வது என்பது முடியாத காரியம்தான். நானோ பெண்; நீங்களோ ஆண். நான் நடன மாது; நீங்கள் யோகி. நான் ஆசையில் உழலுபவள்; நீங்கள் சாதனையில் நாட்டம் கொண்டவர். இருவருக்கும் ஒத்து வராது தான். புயல் வருவதும் போவதும் சகஜம். தாங்களும் என் வாழ்க்கையிலே புயல்போல வந்து புயல்போலப் போகிறீர்கள். நியாயம் தானே? இனி வருங்காலத்தில் உங்களைப் பார்க்காமல் இருப்பதற்கு என்னால் ஆன பிரயத்தனங்கள் செய்வேன். ஆனால் யோகி! நாம் இருவரும் பிரிவதற்கு முன் பாக, தங்கள் பாதத்துளிகளை என் சிரசில் ஒத்திக்கொள்ள விரும்புகிறேன்" என்று சொல்லியவாறே சித்திரலேகா யோகி குமாரகிரியின் பாதங்களில் பணிந்தாள்.

குமாரகிரியின் இதயம் படபட வென்று அடித்துக் கொண்டது. சித்திரலேகா தன் பாதங்களில் பணிவதைக் கண்ட அவன் துணுக்குற்றான். அடுத்த கணம் அவன் குனிந்து சித்திரலேகாவைத் தூக்கிவிடுகிறான். அவன் அப்படிச் செய்யும் பொழுது அவனையும் அறியாமல் அவனுடைய கைகள் சித்திரலேகாவின் மார்பகத்தைத் தீண்டி விட்டன. சித்திரலேகா ஆனந்த பரவச மெய்தினாள். ஆனால் அந்த ஸ்பரிசத்தினால் யோகிக்கு யாதொரு விதமான உணர்ச்சியும் உண்டாக வில்லை. அவனுக்கு அந்த ஸ்பரிசத்தில் ஒரு மகத்துவம் இருப்பதாகவும் தோன்ற வில்லை. அவனையும் அறியாமல் ஏதோ எதேச்சையாக நேர்ந்த காரியந்தானே? அவனுடைய மனம் வேறு ஏதோ ஒரு சிந்தனைப் பிரவாகத்தில் லயித்திருந்ததால், அவன் அதை அவ்வளவாகக் கவனிக்கவும் இல்லை; பொருட் படுத்தவும் இல்லை. ஆனால் சித்திரலேகாவோ அதற்கு வேறு விதமாக அர்த்தம் செய்து கொண்டாள்.

"சித்திரலேகா! என் கால்களை நீ தொடுவானேன்?" என்று கேட்டான் குமாரகிரி.

சித்திரலேகா குமாரகிரிக்கு வெகு சமீபத்தில் நின்று கொண்டிருந்தாள். அவள் தன் முகத்தைக் குமாரகிரியின் முகத்துக்கு வெகு அருகில் கொண்டுபோய், "நீங்கள் தான் நான் பூஜிக்கும் தெய்வம். அதனால் தான்!" என்றாள்.

குமாரகிரியின் கண்கள் சித்திரலேகாவின் கண்களுடன் இரண்டறக் கலந்தன. சித்திரலேகாவின் கண்களிலே தவழ்ந்த காமக் கிறக்கம் குமாரகிரியின் கண்களையும் கிறங்கச் செய்தது. சித்திரலேகா தன் முகத்தைக் குமாரகிரியின் முகத்துக்கு வெகு சமீபத்தில் கொண்டு போனாள். அதற்காகக் குமாரகிரி தன் முகத்தை நகர்த்திக் கொள்ள வில்லை. சித்திரலேகாவின் மூச்சிலே சூடேறியது. அதே போலக் குமாரகிரியின் மூச்சிலும் சூடேறியது. அவனுடைய உடல் முழுதும் 'வெடவெட' வென்று நடுங்கத் தொடங்கியது.



அதே சமயம் குமாரகிரியின் காதுகளில் "குருதேவா!" என்று யாரோ கூப்பிடும் குரல் விழுந்தது.

குமாரகிரி துணுக்குற்றான். பாக்குப் பார்த்தவாறே ஒரு மனிதன் பெண் நாகம் ஒன்றின் சமீபத்தில் சென்று விடுகிறான். அந்த நாகம் அவனைக் கடிப்பதற்காகப் படம் எடுத்து நிற்கிறது. அந்தத் தருவாயில் ஞானத்தி

ஒரு சாதகம்!



மிருதங்க வித்வான்:—தற்காலிகமாக நான் சாதகம் பண்ணுறதையே நிறுத்தி வைச்சிருக்கேன், ஸார்!

அடுத்த வீட்டுக்காரர்:—போறது, இந்த ஒரு சாதகமாவது எனக்காக நீங்கள் செய்யறேளே, சந்தோஷம்!

விருந்து அதைக் கண்ணுற்ற ஒரு மனிதன், "பாம்பு! பாம்பு! காலடியில் பாம்பு!" என்று உரக்கக் கூவி அவனை எச்சரிக்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது பாம்பின் அருகில் நிற்கும் மனிதன் பயந்து போய்த் தீயை மிதித்துவிட்டவன் போலத் துள்ளிக் குதித்து விலகுவான் அல்லவா? அதே போலச் சித்திரலேகாவின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த குமாரகிரி துள்ளிக் குதித்துத் தூர விலகி நின்றான். அவனெதிரே விசாலதேவன் நின்று கொண்டிருந்தான். விசாலதேவனைக் கண்டதும் குமாரகிரி வெட்கிப்போய்த் தலைகுனிந்தான். என்ன அவமானம்! என்ன அவமானம்! தன் சிஷ்யனின் கண்களுக் கெதிரேயே, ஒரு நடன மாதினிடத்தில் அவன் இப்படியா தோற்றுப் போக வேண்டும்? அவன் நிலைமையை என்னவென்று சொல்லுவது?

சித்திரலேகாவுக்கு விசாலதேவன் மீது அசாத்தியமான கோபம் பொங்கியெழுந்தது. அந்த வேளையில் விசாலதேவனுக்கு அங்கே வர உரிமை ஏது? சிவ பூஜையில் கரடி நுழைந்த கதையாக விசாலதேவன் அங்கே வந்து சேர்ந்தது சித்திரலேகாவுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. இரு நாகங்கள் கூடும் பொழுது மனிதன் எதிர்ப்பட்டு விட்டால் சீறி விழுவது இயல்பேயல்லவா? விசாலதேவனை எதிரே கண்ட சித்திரலேகா பெண் நாகமெனச் சீறினாள். "நீ யார்? இந்த அவேளையில் உன்னை இங்கே யார் வரச் சொன்னது? எதற்காக வந்தாய்?" என்று மிகக் கடுமையான குரலில் கேட்டாள். அவள் குரலிலே கொதிப்பேறியிருந்தது நன்றாகத் தெரிந்தது.

"நான் குருதேவரின் சிஷ்யன். இரவு இவ்வளவு நேரமாகியும் குருதேவர் குடிலைக்குத் திரும்பிவராமற் போகவே, நான் அவரைத் தேடிக்கொண்டு புறப்பட்டேன்" என்றான் விசாலதேவன்.

"என்ன துர்ப்பாக்கியம்!" என்று முணுமுணுத்தவாறே சித்திரலேகா பெருமூச்சு விட்டாள். அதன் பின்னர் அவள் குமாரகிரியைப் பார்த்து, "நல்லது குருதேவா! நான் போய் வருகிறேன். நான் உங்களிடம் தீக்ஷை பெற விரும்புகிறேன் என்பதை மறந்து விடாதீர்கள்; நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அவசியம் நீங்கள் எனக்குத் தீக்ஷை அளித்துத்தான் ஆகவேண்டும்" என்று சொன்னாள். அவளுடைய மிருதுவான கம்பீரப் பேச்சிலே, கட்டளையிடும் எஜமானியின் தன்மை தொனித்தது.

"நான் கோலாகலம் நிறைந்த இந்த உலகத்தைத் துறந்து ஏகாந்தத்தை நாட விரும்புகிறேன். மாயையை விட்டொழித்துப் பரம்பொருளுடன் ஐக்கியமாக வேண்டும் என்னும் அவா என் உள்ளத்திலே குடி கொண்டுள்ளது. ஆகவே, குருதேவா! தாங்கள் என் வேண்டுகோளுக்கு அவசியம் செவிசாய்த்துத்தான் ஆகவேண்டும். என் வேண்டுகோளைத் தீர ஆலோசித்துப் பதில் காணுவதற்கு உங்களுக்கு வேண்டிய அவகாசமும் தருகிறேன். நீங்கள் சாதாரண மனிதர்களைக் காட்டிலும் எத்தனையோ படி உயர்ந்தவர். தாங்கள் என்னிடம் அஞ்சத் தேவையில்லை. அப்படி அஞ்சுவதற்கு யாதொரு விதமான காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை. நீங்கள் ஆசைகளனைத்தையும் அடக்கி யாண்டுவிட்டீர்கள். ஆகவேதான் நான் தங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். எந்தக் காரணத்தை முன்னிட்டும் தாங்கள் என் வேண்டுகோளை நிராகரிக்கக் கூடாது. நல்லது. தங்கள் பாதார விந்தங்களுக்கு அடியாள் வணக்கம் செலுத்துகிறேன்."

இதைச் சொல்லி முடித்ததும் சித்திரலேகா அங்கிருந்து சென்று விட்டாள்.

குமாரகிரி விசாலதேவனின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "நீ ஒரு சர்வ முட்டாள்!" என்றான். அப்பொழுது சந்திரன் அஸ்தமித்துக்கொண்டிருந்தான். (தொடரும்)

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி

275. நாய் கொடுக்கச் சிம்மம் கொள்ள!

ராவணன் அங்கதனை முதலில் பார்த்தபோது ஏதோ சாமான்யமான பேர்வழி என்று எண்ணினான். அவனை யார் என்று கேட்டபோது, அங்கதன் வெகு துடுக்காகப் பதில் சொன்னான். அதோடு, வீராதி வீரனான வாலியின் மகன்தான் வந்த தூதுவன் என்றும் தெரிந்துகொண்டான் ராவணன்.

அதன்மேல் அங்கதனைக் கொஞ்சம் வளைத்துக் கட்டுவோம் என்று எண்ணி "நீ ஏன் அந்த ராமனோடு இருக்க வேண்டும்? உன்னை வானரத் தலைவனாக நானே ஆக்குகிறேன்; நீ என்னுடைய சொந்த மகனுக்கு மேல்" என்று சொன்னான். மேலும் ராவணன் சொல்லுகிறான்:

* * *

"அந்த ராமன் உன் தந்தையைக் கொன்றான். ஏதோ போகட்டும் அது. நீ அவனுக்குக் கைகட்டிச் சேவகம் பண்ணுகிற காரியம் இருக்கிறதே, அது எவ்வளவு தப்பான காரியம்! என் பக்கமாக வந்துவிடு. வந்துவிட்டால் அந்தக் கேவலமான செய்கைக்கு விமோசனம் ஏற்பட்டு விட்டது என்று எண்ணலாம்."

தாதையைக் கொன்றான்பின் னே
 தலைசுமந்(து) இருகைநாற் றி
பேதையன் என்னவாழ்ந் தாய்,
 என்பதோர் பிழையுந்தீர்ந் தாய்!
சீதையைப் பெற்றேன், உன் னைச்
 சிறுவனும் ஆகப்பெற் றேன்;
ஏதெனக்(கு) அரியதென் றான்,
 இறுதியின் எல்லைகண் டான்.

[தாதையைக் கொன்றான் பின்னே: தந்தையாகிய வாலியைக் கொன்ற ராமனைத் தொடர்ந்து; தலை சுமந்து இருகை நாற்றி: தலையை ஏதோ ஒரு பாரமாகச் சுமந்து, வான் ஏந்தி யுத்தம் செய்ய வேண்டிய கையைக் கீழே தொங்க விட்டுக் கொண்டு; பேதையன் என்ன வாழ்ந்தாய்: வெறும் பைத்தியக்காரன் மாதிரி வாழ்ந்து வந்தாய்; என்பதோர் பிழையும் தீர்ந்தாய்: என்பதாகப் பலரும் சொல்லும் பழியை விட்டு நீங்கினாய். இது உனக்கான காரியம்: இனி எனக்கான காரியத்தைக் கேள். சீதையைப் பெற்றேன்! சீதை என் வசம் ஆய் விட்டாள்; உன்னைச் சிறுவன் ஆகப் பெற்றேன்: நீ எனது மகனாகி விட்டாய்; ஏது எனக்கு அரியது என்றான்: எந்தக் காரியம்தான் எனக்கு இனிச் செய்ய முடியாத காரியம் என்றான். யார்? இறுதியின் எல்லை கண்டான்: தனக்கு வாழ் நாள் முடிவைத் தீர்மானப்படுத்திக் கொண்டவனான ராவணன்.

குறிப்பு:—சமாதானத்துக்காக வந்த தூதுவனிடத்தில் இந்த மாதிரி பேசினால் வேறு என்ன முடிவு வரும்? ஒழிய வேண்டியது தானே ராவணன்?]

அங்கதனுடைய மனசைக் கலைத்து விடலாம் என்ற எண்ணத்தோடு மேலும் பேசுகிறான் ராவணன்:

"இன்றைக்கோ நாளைக்கோ அந்த மனிதர்கள் அழியப் போகிறார்கள்; உன்னுடைய ராஜ்யத்தை உனக்கு நான் தந்துவிட்டேன்; என்றென்றும் யாதொரு தொந்தரவும் இல்லாமல் ஆண்டு கொண்டிருக்கலாம் நீ."

'அந்நரர் இன்றுநா ளை
 அழிவதற்(கு) ஐயம்இல் லை;
உன்அர(சு) உனக்குத்தந் தேன்,
 ஆளுதி அழிகா லம்;

பொன்அரி சுமந்தபீ டத்(து)
 இமையவர் போற்றிசெய் ய,
மன்னவன் ஆக,யா னே
 சூட்டுவன் மகுடம்' என் றான்.

[ஆளுதி வாழி காலம்: என்றென்றும் ஆண்டு கொண்டிருப்பாய்; பொன் அரி சுமந்த பீடத்தில்: பொன் மயமான சிம்மங்கள் சுமந்த சிம்மாசனத்தில்; இமையவர் போற்றி செய்ய: தேவர்களே வந்து வாழ்த்திக் கொண்டிருக்க; மன்னவனாக யானே சூட்டுவன் மகுடம்: ராஜாவாக உன்னை என் கையாலேயே முடி சூட்டுகிறேன்.]

* * *

அங்கதன் ராவணனுடைய அதிகப் பிரசங்கித்தனமான பேச்சைக் கேட்டான். ஒரே சிரிப்பாய்ச் சிரிக்க ஆரம்பித்து விட்டான்.

கையோடு கையை அடித்துக் கொண்டு சிரித்தான். தோள்களும் மார்பும் குலுங்கின. ஏன், இலங்கையே குலுங்குகிறதோ என்று சொல்லும்படி இருந்தது.

அங்கதன் அதனைக்கே ளா
 அங்கையோ(டு) அங்கைதாக்கித்,
துங்கதல் தோளும்மார் பும்
 இலங்கையும் துளங்கநக் கான்,
இங்குநின் றார்கட்கெல் லாம்
 இறுதியே என்ப(து)உன் னி
உங்கள்பால் நின்றும்எம் பாற்
 போந்தனன் உம்பி' என் றான்.

[அங்கதன் அதனைக் கேளா: அங்கதன் ராவணனுடைய அதிகப் பிரசங்கத்தைக் கேட்டு; அங்கையோடு அங்கை தாக்கி: கையோடு கையை மோதி; துங்கதல் தோளும் மார்பும்: அழகான இடமான தோளும், மார்பும்; இலங்கையும் துளங்க நக்கான்: இலங்கைத் தீவுமே குலுங்குகிறதோ என்று எண்ணும்படி சிரித்தான். அப்படிச் சிரித்துக் கொண்டே பேசுகிறான்; இங்கு நின்றார்கட்கெல்லாம் இறுதியே என்பது உன்னி: இந்த இலங்கையில் தங்குகிறவர்களுக் கெல்லாம் அழிவு நிச்சயம் என்பதைத் தெரிந்து கொண்டு; உங்கள்பால் நின்றும்: உங்கள் பக்கம் இருக்கிறதை விட்டுவிட்டு; எம்பால் போந்தனன் உம்பி என்றான்: எங்கள் பக்கம் வந்துவிட்டான் உன் தம்பியாகிய விபீஷணன் என்றான்—அங்கதன்.]

* * *

அங்கதனுக்கு முதலில் சிரிப்பு வந்தது; சிரிப்பு நின்றது; அடுத்தாற்போல் கோபம் பொங்கிக் கொண்டு வருகிறது.

"வாய்க்கு வந்ததைச் சொல்லி என்னை உன் வசம் ஆக்கிக் கொள்ள நீ எத்தனிக்கிறது என்றால் அந்தப் புத்திசாலித்தனத்தை யோசித்துப் பார்க்க வேண்டியதுதானே!"

'வாய்வரத் தக்கசொல் லி
 என்னையும் வசம்செய்வா யேல்,
ஆய்தரத் தக்கதன் றோ!
 தூதுவந்(து)அரச(து) ஆள்கை
நீதரக் கொள்வென்யா னே!
 இதற்கினி நிகர்வே றுண் டோ!
நாய்தரக் கொள்ளும்சீ யம்
 நல்லர(சு)!' என் றுநக் கான்.

[வாய்வரத் தக்க சொல்லி: அறிவில்லாமல் வாய்க்கு வந்ததைச் சொல்லி; என்னையும் வசம் செய்வாயேல்: என்னை உன் வசம் ஆக்க முயற்சித்தால்; ஆய்தரத் தக்கதன்றோ: அந்த அறிவினமான எண்ணத்தைப் பற்றி என்னத்தைச் சொல்ல? யோசனை செய்கிறது வேறு உண்டா; தூது வந்து அரசது ஆள்கை: தூதனாக வந்த நான் அரசனாகப் பதவி பெற்று ஆளுகிற காரியத்தை; நீ தரக் கொள்வன் யானே: நீ கொடுக்கிறதாம், நான் கொள்கிறதாம்! ரொம்ப அழகு! இதற்கு இனி நிகர் வேறு உண்டோ: இதை ஒத்த பைத்தியக்காரத்தனம் இதுவரை கிடையாது, இனிமேல் நான் உண்டோ, கிடையாது; நாய் தரக் கொள்ளும் சீயம் நல்லரசு என்று நக்கான்: நாய் கொடுக்கச் சிம்மம் பெற்றுக் கொண்ட நாம் ராஜபதவியை, வெகு அழகு என்று சிரித்தான்—அங்கதன்.]

* * *

இகழ்ச்சி பாவம் ஒவ்வொரு வார்த்தையிலும் அபாரமாய்த் தொனிக்கிறது. அருமையான செய்யுள்.

ஒரு திருத்தம்

13—11—49 "கல்கி" இதழில் "இந்த மனிதனா லோகநாதன்?" என்னும் தலைப்புடன் வெளியான கம்பர் தரும் காட்சிக் கட்டுரையில் முதல் பக்கம், முதல் பத்தி, பன்னிரண்டாவது வரியில் 'ராமனுடைய பெரிய உருவத்தைப் பார்த்தான்' என்று இருக்கிறது. அதை 'ராவணனுடைய பெரிய உருவத்தைப் பார்த்தான்' என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும்.



"கடவுளே, காப்பாற்றும்!" என்று ஒருவர் வேண்டிக் கொண்டாராம். அதற்குக் கடவுள், "பக்தா! எதிலிருந்து உன்னைக் காப்பாற்றச் சொல்லுகிறாய்?" என்று கேட்டாராம். பக்தன், "கடவுளே! என்னை அனுகுண்டிலிருந்து காப்பாற்று என்று வேண்டவில்லை; கொள்ளை நோய் வராமல் காப்பாற்று என்று கோரவில்லை; பகைவர்களிடமிருந்து காப்பாற்று என்றும் யாசிக்கவில்லை; என்னை என் நண்பர்களிடமிருந்து காப்பாற்று என்றுதான் வேண்டுகிறேன்!" என்றானாம்.

ரேஷன் அரிசி கிடைக்கும் இந்தக் காலத்தில் ஒவ்வொரு க்ருகஸ்தனும் இவ்வாறுதான் வேண்டிக் கொள்ளும்படியிருக்கிறது!

ஒருவார ரேஷன் அரிசியை ஏழு நாளைக்கு விரவல் பண்ணிச் சமாளித்துக் கொண்டிருக்கும் நிலையில் மட்டும் இவ்வாறு கடவுளை வேண்டிக் கொள்வதில்லை; வேறு சில சமயங்களிலும் மேற்கூறியவாறு கடவுளை வேண்டிக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

சென்ற ஞாயிற்றுக்கிழமை பாருங்கள், நான் ஏதோ ஒரு நவீனத்தை வெகு சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது "ஸார்!" என்று ஒரு குரல் வந்தது.

பூஜை வேளையில் கரடி விட்டாற்போல் எவனோ இந்த வேளையில் வந்து கழுத்தறுக்கிறானே என்று எட்டிப் பார்த்தேன். என் நண்பன் சோணாசலம் நின்று கொண்டிருந்தான். "உங்களைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்று ஆரம்பித்தான். "பார்த்தாச்சோ இல்லையோ, போய்த் தொலையேன்!" என்று சொல்லத் தோன்றியது. வார்த்தை நுனி நாக்கு வரை வந்து விட்டது. நல்ல வேளை, நம் ரத்தத்தில் ஊறிப் போன பண்பாடு என்னை அவ்வாறு கூற விடாமல் தடுத்து விட்டது. "ஏது, இவ்வளவு தூரம் சோணாசலம் பிள்ளை?" என்று முகத்தில் அசட்டுச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு விசாரிக்கவும் செய்தது.

நான் படித்துக் கொண்டிருந்த நவீனத்தில் காதலி ஒரு ஆபத்தான நிலையில் அகப்பட்டுக் கொண்டிருந்தாள். அவளைக் காப்பாற்றக் காதலன் வந்தானா, இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் துடித்துக் கொண்டிருந்தது. அந்த ஆவல் இந்த சோணாசலம் பிள்ளை போய்த் தொலைந்தால்தானே நிறைவேறும்? ஆனால் சோணாசலம் பிள்ளை லேசில் போய்த் தொலைகிறவர் அல்ல; அவர் என்னுடைய க்ஷேம லாபங்கள், என் வீட்டு மாட்டின் க்ஷேம லாபங்கள், ஊர் க்ஷேம லாபங்கள், உலக க்ஷேம லாபங்கள் எல்லாம் விசாரித்து விட்டு, அப்புறம் தான் வந்த காரியத்தைச் சொல்வார். அதற்குள் பாதி நாள் கழிந்துவிடும். என் காதலி—இல்லை இல்லை; நான் படித்த நவீனத்தில் வந்த காதலி — அதுவரை அப்படியே தவித்துக் கொண்டிருக்க வேண்டியதுதானே? அட கடவுளே! நீ இந்தச் சோணாசலத்தினிடமிருந்து என்னைக் காப்பாற்ற மாட்டாயா?

சோணாசலம் தாமாக வந்த காரியத்தைச் சொல்லிவிட்டுப் போகட்டும் என்றிருந்தால் இரண்டு மணி நேரத்துக்கு முன்னால் என் வீட்டை விட்டுக் கிளம்ப மாட்டார். ஆகவே, நான் ஒரு சூழ்ச்சி செய்தேன்.

"சோணாசலம்! சரியாக எட்டரை மணிக்கு நான் ஒருவரைப் பார்க்கிறதாகச் சொல்லியிருந்தேன். அதன்படி நான் போக வேண்டும். பேசிக் கொண்டே நடப்போமா?" என்று சொல்லி விட்டு, பஸ் ஸ்டாண்டு வரை அவரைக் கொண்டுபோய் பஸ்ஸில் ஏற்றி விட்டு வீட்டுக்கு வந்தேன். 'அப்பாடா! விட்டது சனியன்!' என்ற ஆறுதலுடன் உற்சாகமாகத் துள்ளிக் குதித்துக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தேன். நுழைந்ததும் அங்கொரு காட்சி கண்ணில் பட்டது. தலை கிறுகிறுவென்று சுழலத் தொடங்கியது. என் நண்பர் ஆறுமுகம் என் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்!

அவ்வளவுதான்; என் நவீனத்தில் வந்த காதலியை அன்று நான் கைவிட வேண்டியதாயிற்று.

* * *

இன்னொரு நாள் நடந்ததையும் சொல்லிவிடுகிறேன். அன்று காரியாலயத்திலிருந்து வீட்டுக்கு வந்ததும் சட்டையைக் கழற்றிப் போட்டுவிட்டுக் கை கால் அலம்பிக் கொண்டேன். வழக்கம்போல் காப்பி பலகாரம் சாப்பிட்டுவிட்டுச் சற்று உலாவிவிட்டு வருவோம் என்று மீண்டும் சட்டையை மாட்டிக் கொண்டு புறப்பட்டேன். எங்கள் தெருவுக்கு அடுத்த தெருவில் ஒரு ஹோட்டல் இருக்கிறது. அதை நான் நெருங்கினேனோ இல்லையோ, ஹோட்டலுக்குள்ளிருந்து வாயில் பீடாவைக் குதப்பிக் கொண்டே வெளியே வந்த பாலு என்மேல் மூட்டிக் கொண்டான்!

பத்தடி தூரத்தில் பாலுவைப் பார்த்திருந்தேனானால், முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு அவனைப் பார்க்காதவன் போல் பாவனை செய்து கொண்டு நான் வேறு பக்கம் போயிருப்பேன். ஏனெனில், கடவுள் எந்த எந்த நண்பர்களிடமிருந்து நான் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்கு ஒரு ஜாபிதா கேட்பாரானால், அதில் முதல் பெயர் பாலுவின் பெயராகத்தான் இருக்கும்!

பாலு பிடித்துக் கொண்டானானால் லேசில் விட மாட்டான். பச்சை மிளகாயிலிருந்து பாலிஸம் வரையுள்ள அத்தனை விஷயங்களைப் பற்றியும் பேசித் தீர்ப்பான். அவைகளைப் பற்றி அவனுடைய மேலான அபிப்பிராயங்களை நம் காது புளிக்கக் கொட்டித் தீர்ப்பான். இவையனைத்தையும் கேட்டுத் தொலைக்க வேண்டும் என்றால் யாரால் முடியும்?

அதனால் பாலு பேசத் தொடங்கு முன்னரே, "என்ன பாலு! சௌக்கியமா? எனக்கு இன்று அசாத்தியமாகத் தலையை வலிக்கிறது; சூடாக ஒரு கப் காப்பி சாப்பிட்டு விட்டு வருகிறேன். அது வரை கொஞ்சம் பொறுத்துக் கொள்கிறாயா?" என்றேன்.

அதற்கு அவன் சொன்ன பதில் என்னைத் தூக்கி வாரிப் போட்டது. "இல்லையப்பா! எனக்கும் இன்று காரியம் இருக்கு; டவுனுக்குப் போகணும்!" என்று சொல்லிவிட்டு அவன் விரைந்தான். நான் பிழைத்தேன்!



அப்பொழுதுதானே என் மனைவி போட்டுக் கொடுத்த அருமையான காப்பியை நான் சாப்பிட்டு விட்டு வந்தேன்? ஆகவே அந்த ஹோட்டலை அலக்ஷியமாகப் பார்த்துக் கொண்டு மேலே நடந்தேன்.

ஒரு விஷயம் என்னுடைய நினைவுக்கு வந்தது. அன்று எட்டரை மணிக்கு ரேடியோவில் ராஜாஜி பேசுகிறார் என்னும் விஷயம்தான் அது.


நுங்கம்பாக்கத்தில் இருக்கும் என் நண்பன் மணி ஒரு அருமையான ரேடியோ ஸெட் வைத்திருந்தான். அங்கு சென்று ராஜாஜியின் பேச்சைக் கேட்கலாம் என்று தீர்மானித்தேன். அப்போது பனகல் பார்க்குக்குக் கிழக்குக் கேட்டில் நுங்கம்பாக்கம் போகிற பஸ்ஸும் வந்து நின்றது. 'டக்'கென்று பஸ்ஸுக்குள் ஏறினேன். பஸ் புறப்பட்டது.

உட்காருவதற்கு இடமில்லாததால் தட்டுத் தடுமாறி நின்று கொண்டே டிக்கெட்டுக்காகச் சில்லறை எடுக்கச் சட்டைப் பைக்குள் கையை விட்டேன். காலணாக் காசு கூட இல்லை. எப்படியிருக்கும், சட்டையே வேறு சட்டையாக இருக்கும் போது!

ஆபீஸுக்குப் போட்டுக் கொண்டு போன சட்டையைத்தான் போட்டுக் கொண்டு வந்திருக்கிறோம் என்ற ஞாபகத்தில் பஸ் ஏறிவிட்டேன். பையில் மணிபர்ஸ் இல்லை என்று அறிந்ததும் என் முகத்தில் அசடு வழிந்து விட்டது. நான் சந்தடி செய்யாமல் இறங்கப் போனேன். பின்னாலிருந்து யாரோ என் சட்டையைப் பிடித்து இழுப்பது போலிருந்தது. திரும்பிப் பார்த்தேன்— பாலு!

அவன் என்னுடைய நிலைமையை எப்படியோ உணர்ந்து கொண்டு, "கவலைப் படாதே! நீ எங்கே போகணும் சொல்? நான் டிக்கெட் வாங்குகிறேன்" என்று சொல்லிக் கொண்டே எனக்கு நுங்கம் பாக்கத்துக்கு ஒரு டிக்கெட் வாங்கிக் கொடுத்து அங்கிருந்து திரும்பி வருவதற்கும் கையில் சில்லறை கொடுத்தான்!

எனக்கு முதலில் வேண்டாத நண்பன் சமயத்துக்கு வந்து முதல்தரமான உதவி செய்து விட்டான். அன்றிலிருந்து நான் யாரையும் வேண்டிய நண்பன், வேண்டாத நண்பன் என்று பாகுபாடு செய்வதேயில்லை.



பிள்ளையார் துணை

விசாகன்

பிரம்மசாரி கோபாலனை அவன் தாயார் அழைத்தாள். "என்டா, உனக்குக் கல்யாணம் செய்து கொள்ளுவதாக உத்தேசம் கிடையாதா? எத்தனை நாளைக்கு இப்படி ஏகாங்கியாக இருப்பதாக உத்தேசம்?" என்று அன்புடன் கடிந்து கொண்டாள். வருகிற வரன்களை யெல்லாம் அவன் தட்டிக் கழித்துவிடுகிறானே என்னும் குறை அவள் குரலில் பிரதிபலித்தது.

"விக்னேஸ்வரரை அலட்சியம் செய்து விட்டு நான் மாத்திரம் கலியாணம் செய்து கொள்ள இஷ்டமில்லை, அம்மா!" என்று தமாஷாகச் சொன்னான் கோபாலன்.

அவன் தாயாருக்குக் கொஞ்சம் கோபம் வரத்தான் செய்தது. "போதுமடா, அசடு மாதிரி தத்துப்பித்தென்று உளறாதே! சபேசன் அவன் பெண்ணுடைய ஜாதகத்தைக் கொடுத்தனுப்பியிருக்கான். பெண் சற்றுக் கறுப்புத்தான். ஆனால் கடைக் காரியம் செய்வாளாம். 'அடுப்பங்கரைப் பக்கம் நீங்கள் போகவேண்டியதாகவே இருக்காது' என்று சபேசனே அன்றைக்கு என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தான். போய்ப் பெண்ணைப் பார்த்துட்டு வா, நிச்சயம் செய்துவிடலாம்!" என்றாள் அவள்.

வாஸ்தவம். அவனுடைய அம்மா அந்தக் காலத்து ஸ்திரீ. பெண் மாநிறமோ, அல்லது அட்டைக் கரியோ அதைப் பற்றி அவளுக்கு அக்கறையில்லை. பெண் கடைக் காரியம் செய்ய வேண்டும்!

"சரி அம்மா! நீ பார்த்துச் செய்தால் சரிதான்!" என்று மழுப்பிவிட்டு நகர்ந்தான்.

அவசர அவசரமாக எங்கேயோ புறப்பட்டுக் கொண்டிருந்த அவனை அவன் தகப்பனார் அதைவிட அவசரமாகக் கூப்பிட்டு வழியில் நிறுத்தினார்.

"டேய், உனக்கு கலியாணராமய்யரைத் தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியாதே!"

"சரி, ஆறு வருஷங்களுக்கு முன்னால் அடுத்த வீட்டில் அகோரஐயர் என்று ஒருவர் குடியிருந்தாரே, தெரியுமா?" என்று கேட்டார்.

"ஊஹூம்! ஞாபகமில்லை அப்பா!"

"என்னடா, உன் ஞாபக சக்தியும் நீயும்! நம்ம ஆலங்காட்டுப் பஞ்சவையரின் ஷட்டகர் அவர்! பஞ்சவைத் தெரியாதா உனக்கு?"

வரிசைக் கிரமமான இந்தக் கேள்விகள் பிரம்மசாரிக்கு எரிச்சலை உண்டு பண்ணின. "பஞ்சவைத் தெரியாமல் என்ன! நிலையனைக்கு அடைக்கிறோமே! அந்தப் பஞ்சநாதனே!" என்று பதில் சொல்லிவிட அவன் உதடுகள் துடித்தன. ஆனால் எதிரே நின்று கேள்விகளைப் போடுபவர் அவனுடைய சாக்ஷாத் தகப்பனாரானதால் அவன் மனுதர்மத்துக்குப் பயந்து நாக்கைக் கட்டுப் படுத்தினான்.

"உனக்கு ஒருவரையுமே தெரிய வேண்டாம்! அந்தக் கலியாண ராமய்யரின் தம்பி தான் என் பால்ய சிநேகிதன். அவன் வந்து தன் பெண்ணுக்காக உன் ஜாதகத்தை வாங்கிக் கொண்டு போயிருக்கான். பத்து வேலிக் குடித்தனக்காரன். ரொக்கமாக ஐயாயிரமும், சீர் செனத்திகள் ஐயாயிரத்துக்குக் குறையாமல் செய்வான். நாம் இழுத்த இழுப்புக்கு வரக்கூடியவன். நல்ல குலம் கோத்திரம். பெண்ணுக்குக் கொஞ்சம் 'ஐ ஸைட்' 'பூவர்' என்று கேள்வி. அதனால் என்ன? உனக்கு அதிர்ஷ்டம் இருந்தால் அது தானாகவே நாளடைவில் சரியாகப் போய்விடும். பெண்ணைப் பார்க்கத் தான் வேண்டும் என்ற அவசியம் இருந்தால் நீ மாத்திரம் போய்ப் பார்த்துவிட்டு வா! நிச்சய தாம்பூலத்துக்கு ஏற்பாடு செய்யலாம்!" என்று இப்படி அதட்டி உருட்டிச் சொன்னார் தந்தை.



கண் பார்வை மங்கலாக உள்ள பெண்ணைத் தனக்குச் சிபார்சு செய்ததிலிருந்தே தன் அதிருஷ்டத்தைப் பற்றி ஊகித்துக் கொண்ட பிரம்மசாரியான கோபாலன், மனதிற்குள் சிரித்துக் கொண்டு தகப்

பிரம்மசாரிபோல நின்றான்! அப்பாவின் அபிப்பிராயம் ஒருவாறு புரிந்தது அவனுக்கு. அப்பாவைச் சொல்லுவதில் குற்றமில்லை. பழைய சம்பிரதாயங்களில் ஊறிப் போனவர் அவர்.



"யோசித்துச் சொல்லுகிறேன், அப்பா!" என்று அடக்கமாகப் பதில் சொல்லி விட்டு அகன்றான் பிரம்மசாரி.

பிரம்மசாரி கோபாலனின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தனர் அவன் தமக்கையும் அத்திம்பேரும்.

"மாப்பிள்ளைக்குக் கலியாணம் வருகிறது!" என்று சிரித்துக் கொண்டே வரவேற்றாள் சகோதரி.

"கலியாணம் வந்த பிறகுதானே மாப்பிள்ளை! அசக்குள் மாப்பிள்ளை என்கிறாயே!" று பதில் சொல்லிக் கொண்டே நுழைந்தான் தம்பி.

"உன் அத்திம்பேர் உனக்காக ஒரு அருமையான வரன் பிடித்திருக்காரடா! பெயரைக் கேட்டாலே சொக்கி விடுவாய்! சொல்லட்டுமா? ஹே......மா!" என்று எழுத்துக் கூட்டிச் சொல்லி விட்டுத் தம்பியின் முகத்தை வேடிக்கையாகக் கவனித்தாள் அக்கா.

பிரம்மசாரியின் முகம் சுருங்குவதைக் கவனித்த அவள், "ஏண்டா! ஹேமாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளக் கசக்கிறதோ? ஹேமாவை உனக்கு யாரென்று தெரியாது. தெரிந்தால் இப்படிக் கசந்து கொள்ள மாட்டாய்! உன்னுடைய காலேஜில், சுப்புணி என்று ஒரு பிள்ளை படிக்கிறதே, அவன் தங்கைதான் ஹேமா. ஹேமாவுக்கு வீணை வாசிக்கத் தெரியும். ஹேமாவின் வாய்ப்பாட்டை இன்றைக்கெல்லாம் கேட்கலாம்! ஹேமா ரொம்ப அழகு, அதி புத்திசாலி! ஹேமா பள்ளிக்கூடத்தில் மெடல் வாங்கியிருக்கிறாள்" என்று இப்படி மூச்சு விடாமல் அடுக்கினாள் சகோதரி.

சகோதரியின் வர்ணனை அவனுக்குப் பிடித்திருந்தது. அந்த க்ஷணமே ஹேமாவின் கழுத்தில் மாங்கல்யதாரணம் செய்துவிட வேண்டும் என்ற ஆசை உந்தித் தள்ளியது. தம்பியின் மனம் குளிர்ந்திருக்கிறது என்பதை அவனுடைய முக விலாசத்திலிருந்து தெரிந்து கொண்ட சகோதரி, "இந்தா அப்பா, நீ எந்தப் பெண்ணை வேண்டுமானாலும் பண்ணிக் கொள்; எனக்குச் சம்மதம். எங்களுக்குச் செய்வதில் அப்பா எதையாவது குறைத்து விடாமல் மாத்திரம் நீ பார்த்துக் கொள்" என்றாள்.

"எனக்குக் கலியாணம் நடந்தாலும் நடக்காவிட்டாலும் உனக்குச் செய்யவேண்டியதை அப்பா குறைக்கும்படி விட மாட்டேன்" என்று சொல்லி விட்டு அப்புறம் நகர்ந்தான் பிரம்மச்சாரி. அப்ஸரஸ் போன்ற ஒரு பெண்ணைத் தனக்குச் சிபாரிசு செய்ததற்காகத் தன் தமக்கையை வாழ்த்தினான் கோபாலன்.

அடுத்தாற்போல் ஹோட்டல் வாசலில் பிரம்மசாரி கோபாலனைச் சந்தித்த அவன் அத்யந்த நண்பன் வக்ரதண்டன் வழக்கம் போல அவன் முதுகில் ஒரு குத்து விட்டு அவனை வரவேற்றான். பிறகு "டேய் பழி! உனக்குக் கல்யாணமாமே; அப்பாவும் அம்மாவும் சொன்னார்களென்று ஏகமாக வரதக்ஷிணை கேட்காதேடா! நல்ல ஏழைக் குடும்பத்தில் சம்பந்தம் செய்து கொண்டு அவர்களைக் கைதூக்கி விடு. ஏழைகள் மனம் குளிர்ந்தால் நாம் நன்றாக வாழ்வோமடா! உங்கப்பா பாட்டுக்கு உன்னை ஐயாயிரம் பத்தாயிரம் என்று ஏலத்தில் விட்டுவிடப் போகிறார்! ஜாக்கிரதை!—என்ன? நான் சொன்னது ஞாபகமிருக்குமா?" என்று கூறி மறுபடியும் ஒரு குத்து விட்டான் அந்த ஏழை பங்காளனான நண்பன்.

தீனதயாளுவான தன் நண்பன் ஒரு குசேலரின் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டு, எதிர் ஜாமீன் வாங்கும் புள்ளிகளுக்கு எதிரியாக விளங்க வேண்டுமென்று விரும்புகிறான் என்பதை எளிதில் புரிந்து கொண்டான் பிரம்மசாரி கோபாலன். அவன் சொன்னதில் என்ன தவறு? எதிர் ஜாமீன் வாங்குவதைப் பற்றி எதிர்த்துப் பேசுபவர் யார் இந்தக் காலத்தில்?



கொஞ்ச தூரம் போனதும் புகழ்பெற்ற சீர்

திருத்தவாதியான இள முருகனாரைச் சந்தித்தான் கோபாலன்.



இள முருகனார் ஒரு இள முறுவலுடன் பிரம்மசாரியை வரவேற்று, "நன்று, நன்று, நண்பா! நீ திருமணம் விழைந்த காரியம்! ஊழல் நிறைந்த இந்தச் சமூகத்தை உன்னைப் போன்ற இளம் காளைகள்தான் சீர் திருத்த முடியும். நம் முன்னோர்களின் மூடப் பழக்க வழக்கங்களினால் அந்தோ, எண்ணிறந்த இளம் பெண்கள் விதவைகளாக வாழ வகையின்றிப் பரிதவிக்கின்றனர்! அவர்களுக்குப் புனர் வாழ்வளிக்க வேண்டியது உன் போன்றவர்களின் கடமையாகும். நீ எனது நண்பன் என்ற முறையில் ஒரு விதவையை மறுமணம் செய்து கொள்ள வேண்டும்" என்றார்.

இள முருகனார் சொன்னதிலும் பிசகில்லை என்று பட்டது பிரம்மசாரி கோபாலனுக்கு. "ஆகட்டும், அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு நடையைக் கட்டினான்.

விவாகப் பிரச்னை பெரிய குளறுபடியாகி அவனுடைய மூளையைக் குழப்பியது. அவன் யாரைக் கல்யாணம் செய்து கொள்வது? தாயார், தகப்பனார், பாட்டி, சகோதரி, நண்பன், சீர்திருத்தவாதி — இவர்களிடமிருந்து ஒய்வு பெற ஜன நடமாட்டம் இல்லாத தெரு ஒன்றின் வழியே போனான். தாயாருக்காகக் கூடைக் காரியம் செய்பவளையும், தகப்பனாருக்காக ஒரு யாக்ஞவல்கியின் புத்திரியையும், சகோதரிக்காக ஒரு அப்ஸரஸையும், நண்பன் வக்ரதண்டனுக்காக ஒரு குசேலனின் பெண்ணையும், சீர்திருத்த வாதிக்காக ஒரு விதவையையும் கல்யாணம் செய்து கொண்டால்தான் இவர்கள் ஒவ்வொருவரும் திருப்தியடைவார்கள் போலும்!


பிரம்மசாரி இப்படி மனம் குழம்பியபடி சென்று கொண்டிருந்தபோது "தம்பி! நீ கலியாணம் செய்து கொள்ளப் போகிறாயா?" என்று ஒரு குரல் கேட்டது. இன்னும் யாரோ தனக்கு விவாக சம்பந்தமாக யோசனை சொல்ல வருகிறார்கள் என்று பயந்த பிரம்மசாரி, "அதெல்லாம் இல்லை! காணுவது, கலியாணமாவது, செய்து கொள்ளவாவது! சுத்த பேத்தல்!" என்று சொல்லிவிட்டு ஓட முயன்றான்.

பரிகாசமாக ஒரு சிரிப்பொலியும், அதைத் தொடர்ந்து, "சபாஷ்! நல்ல யோசனை தம்பி! நீ என் கட்சியைச் சேர்ந்தவன்! வா! எனக்கும் ஒரு துணையாச்சு!" என்று மேலும் அதே குரல் கேட்டது.

குரல் வந்த திசையை அறியச் சுற்று முற்றும் பார்த்தான் கோபாலன். தன் எதிரே நித்ய பிரம்மசாரியான விக்னேஸ்வரர் நின்று கொண்டு துதிக்கையை ஆட்டி அழைப்பதைக் கண்டு திடுக்கிட்டான்!

• • •

இப்படி திடுக்கிட்டு விழித்துக் கொண்ட பிரம்மசாரி, தான் சம்பந்திகள் இறக்கப்பட்டிருந்த வீட்டில் கட்டிலில் படுத்துக் கொண்டு தூங்கிப் போனதையும், பொழுது விடிந்தால் ஹேமாவின் கழுத்தில் தாலியைக் கட்டி மாஜி பிரம்மசாரியாகப் போவதையும் உணர்ந்தான். தனக்குத் துணையாகக் கூப்பிட்ட விநாயகரின் படம் எதிரே சுவரில் தொங்கியது. அதற்கு ஒரு நமஸ்காரம் போட்டுவிட்டு அவர் கட்சியிலிருந்து விலகினான் பிரம்மசாரி கோபாலன்!



நல்ல ஆள்!

வேலைக்காரன்:— ஒரு மணி அவகாசம் கொடுங்க எசமான், ஏர்-சிலோனுக்குப் போய் வந்துடறேனுங்க!

எஜமான்:—என்ன, சிலோனுக்கு ஒரு மணி நேரத்திலே போய் விட்டு வரதாவது? என்னப்பா விளையாடறே?

வேலைக்காரன்:—அது தான் தலை மயிர் வெட்டிக்கிற இடத்துக்குங்க!

எஜமான்:—ஓஹோ! ஹேர் சலூனுக்கா? நல்ல ஆளப்பா நீ!

நமது இலங்கைக் கடிதம்

தீண்டாமை அசுரனுக்குப் புகலிடமா?

ரஜனி


கொழும்பு, நவ. 13

இலங்கையிலுள்ள இந்துக் கோவில்களின் நிர்வாகத்தை மேற்பார்வை யிடவும் ஹரிஜன ஆலயப் பிரவேசத் தடை, மிருக பலியிடுதல் ஆகியவற்றை ஒழிக்கவும் சட்டம் இயற்ற வேண்டியது அவசியமா என்பதைப் பற்றி யோசனை கூற உள்நாட்டு மந்திரியினால் நியமிக்கப் பட்டிருக்கும் விசேஷக் கமிட்டி இவ்வாரம் முதல் தனது பகிரங்க விசாரணையை ஆரம்பிக்கின்றது. அதனிடம் பல்வேறு இந்து ஆலய நிர்வாகிகளும் இந்துச் சங்கங்களும் அறிக்கைகளைச் சமர்ப்பித்த வண்ணமாயிருக்கின்றார்கள். இந்தியாவில் காந்திஜி அரும் பாடுபட்டு அழித்த தீண்டாமை அசுரனுக்கு இலங்கையில் புகலிடம் அளிப்பதா? கூடவே கூடாது என்று பதுளை சைவ பரிபாலனச் சங்கம் சமர்ப்பித்திருக்கும் ஒரு மகஜரில் வற்புறுத்தியிருக்கிறது. செனட்டர் ஏ. பி. ராஜேந்திராவும் முற்போக்குள்ள மற்றும் பல இந்துத் தலைவர்களும் ஆலயங்களில் நடைபெறும் ஊழல்களைச் சுட்டிக்காட்டி, சிதம்பரம், ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம் முதலிய ஸ்தலங்களின் புனிதத் தன்மை ஹரிஜன ஆலயப்பிரவேசத்தினால் குறைந்துவிட வில்லை யென்றும், பொதுஜன சொத்துக்களான ஆலயங்களைத் தனிநபர் சொத்துக்களாக வைத்திருப்பது தகாது என்றும், இந்தியாவைப் போல இலங்கையிலும் இந்து ஆலய பரிபாலனச் சட்டம் ஒன்றை இயற்ற வேண்டுமென்றும் வற்புறுத்தி வருகிறார்கள். ஆலயப் பிரவேசத்தை எதிர்த்து வலிகாமம் சைவ மகா சபை ஒரு மகஜரைச் சமர்ப்பித்திருக்கிறது.

யார் கட்சி நியாயம்?


இரண்டரை மாதங்களுக்கு மேலாக ரோபரி தோட்டத்தில் இலங்கை இந்தியக் காங்கிரஸ் லேபர் யூனியன் உறுதியுடன் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டம் நியாயமானது என்பது இப்போது வெளியாகி யிருக்கிறது. தோட்ட நிர்வாகிகள் சில தொழிலாளரைப் போதிய காரணமின்றி வேலையிலிருந்து நீக்கினார்கள். அதைப் பற்றி சமரசமாகக் கூடிப் பேசி முடிவு செய்யலாமென்று காங்கிரஸ் ஒரு யோசனை கூறியதையும் ஏற்க மறுத்தார்கள். அதன் காரணமாகவே இந்த வேலை நிறுத்தம் ஆரம்பமாயிற்று. எவ்வளவோ கஷ்டங்களையும் பெரும் பணச் செலவையும் பொருட்படுத்தாமல் நீதியை நிலை நிறுத்துவதற்காக இந்த வேலை நிறுத்தத்தைக் காங்கிரஸ் நடத்தியிருந்தது. அவ்விஷயத்தை விசாரணை செய்வதற்காக லேபர் கமிஷனர் ஸ்ரீ கார்த்திகேசு என்பவரை நியமித்தார். ஸ்ரீ கார்த்திகேசு இப்போது வெளியிட்டுள்ள தம்முடைய அறிக்கையில் தொழிலாளர் கட்சியை ஆதரித்துத் தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

"நீக்கப்பட்ட தொழிலாளரை தோட்ட நிர்வாகிகள் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். லேபர் யூனியன் நடவடிக்கைகளில் ஈடுபட எல்லாத் தொழிலாளருக்கும் உரிமையுண்டு. அதற்காக அவர்களை டிஸ்மிஸ் செய்வது நியாய மற்ற செய்கை" என்று விசாரணைக் கமிஷனர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்



பம்பாய் முனிசிபாலிடி இன்ஸ்பெக்டிங் ஆபீஸரான ஸ்ரீ வி. ஆர். சுப்ரமணி அவர்களின் குமாரி சௌபாக்கியவதி பத்மினிக்கும் பம்பாய் இம்பீரியல் பாங்கியின் மத்திய ஸ்தாபனத்தைச் சேர்ந்த சிரஞ்சீவி என். மஹாதேவனுக்கும் சமீபத்தில் மதுரங்காவில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் வந்தன.

பளு நீங்கியது!



பத்திரிகை விளம்பரவரி மசோதாவைச் சென்னை சர்க்கார் இறுதியாகக் கைவிட்டு விட்டதாக வரி மந்திரி கோபால் ரெட்டி அறிவித்தார்.

யில் தொழிலாளருக்குக் குடியேற்றச் சட்டத்தின்படி ஏற்பட்ட சம்பளத்தைத் தோட்டக்காரர்கள் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். சென்ற செப்டம்பர் மாதச் சம்பளத்தை அக்டோபரில் கொடுத்த போது அநியாயமாகக் குறைத்துக் கொடுப்பதாகச் சொல்லி அனேகம் தோட்டங்களில் தொழிலாளர் சம்பளம் வாங்க மறுத்து விட்டார்கள். அதேபோல நவம்பரிலும் சம்பளத்தை முதலாளிகள் வெட்டியிருப்பதை ஆட்சேபித்துப் பல தோட்டத் தொழிலாளர்கள் சம்பளம் வாங்க மறுத்து விட்டார்கள்.

இது சம்பந்தமாக ஒரு தோட்டத்தில் வேலை நிறுத்தமும் ஆரம்பமாகியிருக்கிறது. இந்த விவரங்கள் லேபர் கமிஷனரின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்றன.

ஒருர். இந்தச் சிபார்சுகளைத் தோட்ட நிர்வாகிகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயமில்லை. அப்படிக் கட்டாயப்படுத்த இலங்கையில் சட்டமும் இல்லை. ஆயினும் இப்பொழுது நியாயம் யார் கட்சியிலிருக்கிற தென்பது தெரிந்து விட்டது.

மற்றொரு அநீதி

ரப்பர் தோட்டத் தொழிலாளருக்கு நியாயமான சம்பளம் கொடுக்கும் சட்டம் கொஞ்ச காலத்துக்கு நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது ஞாபகமிருக்கலாம். ஆனால் அது மீண்டும் இப்போது அமுலுக்கு வந்திருந்திருக்கிறது. அதன்படி நியமிக்கப்பட்ட சம்பள நிர்ணய சபையினர் சம்பளங்களை உயர்த்தவேண்டும் என்று சிபார்சு செய்திருக்கின்றனர். புதிய சம்பளத் திட்டம் அனேகமாக டிஸம்பர் அல்லது ஜனவரியிலிருந்து தான் அமுலுக்கு வரக்கூடும். இதற்கிடை

சிறந்த முயற்சி

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள காந்தி சேவா சங்கம் ஒரு புனிதமான கைங்கர்யத்தை ஆரம்பித்திருக்கிறது. 1927-ம் வருஷம் மகாத்மா காந்தி இலங்கைக்கு விஜயம் செய்து, இங்கு ஒரு மாத காலம் தங்கினார். அப்பொழுது அவர் பல இடங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார். பல பள்ளிக்கூடங்களிலும் காலேஜுகளிலும் பேசினார். தனிப்பட்ட பலருக்குப் பேட்டியளித்து விவாதித்தார். ஒரு மாத காலத்தில் மகாத்மாஜி இலங்கையில் நிகழ்த்திய பிரசங்கங்களையும், பேட்டிகளில் நடத்திய விவாதங்களையும் திரட்டி ஒரு அரிய புத்தகமாக வெளியிட காந்தி சேவா சங்கம் திட்டமிட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் காந்திஜியின் விஜயத்தைப்பற்றித் தங்களுக்குத் தெரிந்த விவரங்களை அத்தாட்சிகளுடன் அனுப்பி வைக்க வேண்டுமென்று கோரியிருக்கிறது.



(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஹக்கீம் வீட்டில் அதிக நாள் சௌகரியமாகத் தங்கியிருக்க முடியாதபடி ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

ஹக்கீம் அவர்களின் பையன் என்னைப் போன்ற வேறொரு அகதிக்கு உணவளிக்கச் சென்றிருந்தான். அவன் வெகு நேரமாகியும் திரும்பி வரவில்லை. நானும் ஹக்கீம் அவர்களும் அவனைத் தேடிச் சென்றோம். சிறுவனைப் பற்றி ஒரு செய்தியுமே தெரியவில்லை. சிறுவன் ஜும்மா மசூதியிலிருந்து தரியா வழியாகப் போய்க் கொண்டிருக்கும் பொழுது சில ஹிந்துக்களால் அவன் கொல்லப் பட்டதாக அன்று இரவு எங்களுக்குச் செய்தி கிடைத்தது. அன்பும் இரக்கமும் கொண்ட சிறுவனின் உருவம் என் முன்னே தோன்றி, 'சாகப் போகும்பொழுது உனக்கு உணவளித்து உதவினேன். இருந்தும் நீ என்னைக் கொன்றாயல்லவா?' என்று அந்தப் பழக்கமான குரலில் கேட்பது போல் இருந்தது. ஆம், நான் அவனைக் கொல்லவில்லை என்பது உண்மைதான். ஆயினும் எனது மூளையில் 'ஒரு வேளை நான் ஹிந்துவாயிருந்தால்! எனது ஞாபக சக்தியை இழப்பதற்கு முன்னர் நானும் ஹக்கீம் சாஹிப்பின் குழந்தைகளைப் போன்ற முஸ்லிம் குழந்தைகளைக் கொலை செய்திருப்பேனோ, என்னவோ!' என்று உறுத்திக் கொண்டிருந்தது. எனக்கு அது பெரும் வேதனையை அளித்தது. ஆகையால் ஒரு நாள் விடியற்காலையில் வீட்டில் மற்றவர்கள் எல்லோரும் எழுந்திருப்பதற்கு முன்னால் சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டு நழுவினேன்.

அந்த நாட்களில் டில்லியில் எங்கும் பயங்கரம் நிலவியது. பட்டப் பகலிலே மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பிரதான வீதிகளில் கூடத் துப்பாக்கிக் குண்டுகள் பறந்து கொண்டிருந்தன. அப்படியும் இப்படியுமாகத் தப்பித்துக் கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தேன். பம்பாயில் நிலைமை சற்றுச் சீர்பட்டிருப்பதாகச் செய்தி கிடைத்ததால் புறப்படத் தயாராக இருந்த எல்லைப்புற மெயிலில் ஏறினேன். நெருக்கமுள்ள அந்த ரயில் வண்டியில் என் பக்கத்தில் பஞ்சாபி வாலிபன் ஒருவன் துக்கமே உருவாக அமர்ந்திருந்தான்.

வண்டி புறப்பட்டதும் "தம்பி! நீ யார்?" என்று கேட்டான்.

"எனக்குத் தெரியவில்லை, ஒரு வேளை ஹிந்துவாக இருக்கலாம், அல்லது முஸ்லிமாக இருக்கலாம்" என்றேன்.

"இந்த வழியில் முஸ்லிம்களுக்கு ஆபத்து ஏற்படும் எனக்கேள்வி. உன் முகத்தில் தாடி இருப்பதால் நீ முஸ்லிமாக இருப்பாயோ என்று சந்தேகப்பட்டு, அப்படிக் கேட்டேன்" என்றான்.

நான் என் கதை முழுவதையும் கூறினேன். பல வாரங்களாக க்ஷவரம் செய்து கொள்ளாததால் வளர்ந்திருந்த தாடியை அவன் சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் என் பேச்சை நம்ப

வில்லை என்பதை உணர்ந்தேன். பின்னர் அவனைப் பற்றிய விஷயங்களைப் பேசத் தொடங்கினேன். லாகூரில் அவனுடைய வீடும், கடையும் சூறையாடப் பட்டதாம். அவனது உறவினர்களில் சிலர் கொல்லப் பட்டனராம். மற்றும் சிலரைக் காணவே காணோமாம். ஆகவே அவன் பம்பாய்க்குச் சென்று புதிய வியாபார முயற்சிகளில் ஈடுபட உத்தேசித்திருக்கிறானாம்.

பார்பூர் அருகில் ஒரு இடத்தில் ரயில் வண்டி நிறுத்தப்பட்டது. முஸ்லிம்கள் என்று சந்தேகிக்கப்பட்ட பிரயாணிகள் அனைவரும் வெளியில் இழுத்து, ஈவிரக்கமில்லாமல் சுட்டுத் தள்ளப்பட்டனர்.

அதைப் பற்றி இப்போது நினைக்கையில் சிரிப்புத்தான் வருகிறது. ஆ! என்ன கேட்கின்றீர்கள்? கோரக் கொலை முயற்சியில் வேடிக்கை என்ன இருக்க முடியும் என்று கேட்கின்றீர்கள்? முஸ்லிம்களைச் சுட்டுத் தள்ளும் வேளையிலும், கத்தியினால் குத்திக் கொலை செய்யும் பொழுதும் 'மகாத்மா காந்திகி ஜே' என்று கொலைகாரர்கள் கோஷித்தார்கள். இந்தச் சம்பவம் சாகப் போகின்ற மனிதனைக் கூடச் சிரிக்க வைக்கக்கூடியதுதானே?

கொலைகாரர்கள் நான் ஏறியிருந்த பெட்டிக்கு வரும்பொழுது நான் சாவதற்குத் தயாராகவே இருந்தேன். நான் முஸ்லிமா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் எனக்குத் தாடி இருந்தது மட்டும் புரிந்தது. என்னைக் கொலை செய்ய அது ஒன்றே போதுமே. ஆனால் கொலைகாரர்கள் என்னைப் பார்ப்பதற்குள் எனது சக பிரயாணியான அந்த வாலிபர் என் மீது போர்வையைப் போர்த்தி மூடினார். அவர்கள் என்னைப் பற்றி விசாரித்த பொழுது அவர் கொஞ்சங்கூடத் தயங்காது "அவர் என் அண்ணா; லாகூரில் அவருக்குக் காயமேற்பட்டது. அவரை ஒன்றும் தொந்தரவு செய்யாதீர்கள். அவர் உங்கள் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் நிலையில் இல்லை" என்று கூறி அனுப்பி விட்டார். அவர்களும் அவர் பதிலில் திருப்தி யடைந்து போய் விட்டனர். குண்டுகள் பொழிந்தன. இடையே குண்டுக்கு இரையானவர்களின் சோகக் குரல்களும் கேட்டன. ரயில் வண்டியும் நகர்ந்தது.

கடைசியில் பம்பாயை அடைந்தேன். ஆனால் இங்கே, உங்கள் பாழாய்ப் போன பட்டணத்திலும் கூட, அந்தத் தொல்லை பிடித்த கேள்வியைத்தான் யாரும் கேட்கத் தொடங்கினார்கள்.

"நீ ஒரு ஹிந்துவா?"

"நீ ஒரு முஸ்லிமா?"

எனக்கும் ஒரு ஐயம் தோன்றியது. ஹிந்து யார்? முஸ்லிம் யார்? தோற்றத்தில் முஸ்லிம் போலிருந்த என்னைக் கொலைகாரர்களிடமிருந்து காப்பாற்றிய அந்த ரயில் வண்டிப் பிரயாணி, அவன் ஒரு ஹிந்துவா? கள்ளங் கபடமற்ற ஹக்கீம் சாகிபின் குழந்தையைத் த்ரியாவில் வைத்துக் கொன்றார்களே அந்தக் கொடும் பாதகர்களாகிய அவர்கள் ஹிந்துக்களா? முஸ்லிம்கள் யார்? ஹக்கீம் சாகிப்பும் அவர் குடும்பத்தினருமா? அல்லது ராவல்பிண்டியில் சிக்கிய ஆண்களையும் பெண்களையும் துன்புறுத்தி மானபங்கப் படுத்திய, வெறிபிடித்த காட்டுமிராண்டிகளா? சீக்கியர் தாம் யார்?



அன்புருவான சர்தார் சாஹிப்பும் அவர் குடும்பத்தினருமா? அல்லது டில்லியில் அழிவு வேலையில் ஈடுபட்டுள்ள ஆசாமிகளா?

யார் முஸ்லிம்? யார் ஹிந்து? யார் சீக்கியர்?

ஆயினும் அந்தக் கேள்வி எங்கு போயினும் கேட்காதவர்கள் கிடையாது. அது என் மனதிற்குள் நன்றாய்ப் பதிந்தே விட்டது. நானே என்னைக் கேட்டுக் கொள்ளத் தொடங்கினேன். "நீ யார்? யாரப்பா நீ? ஹிந்துவா? முஸ்லிமா? முஸ்லிமா? ஹிந்துவா?"

"நான் யார்? ஹிந்துவா? முஸ்லிமா?"

இரவும் பகலும் இந்த ஒரே கேள்வி என்னை வாட்டத் தொடங்கியது. நான் தூங்க முயலும் பொழுது கூட என்னைச் சுற்றிப் பயங்கர ராக்ஷஸர்கள் கூடி நின்று பழுக்கக் காய்ச்சிய இரும்பு ஈட்டியினால் குத்தி, 'நீ யார்? ஹிந்துவா? முஸ்லிமா? முஸ்லிமா? ஹிந்துவா?' என்ற கேள்விகளுக்குப் பதில் கேட்பது போல் இருந்தது. நான் கனவிலும் 'என்னைச் சும்மா விட்டு விடுங்கள். நான் யார் என்று எனக்குத் தெரியாது. நான் ஒரு ஹிந்துவுமல்ல, ஒரு முஸ்லிமுமல்ல, ஒரு சீக்கியனுமல்ல. நான் ஒரு மனித ஜன்மம் தான்?' என்றுதான் கூச்சலிடுவேன்.

பம்பாயிலும் அகதிகளுக்கு முகாம்கள் இருந்தன. "நீ ஒரு சீக்கியனாக இருந்தால் நேரே கால்சா கல்லூரிக்குப் போ. ஒரு ஹிந்துவாக இருந்தால் ராமகிருஷ்ண ஆச்ரமத்தில் போய்ச் சேர். ஒரு முஸ்லிமாக இருந்தால் வழி தேடிக் கொண்டு அன்ஜுமான் இஸ்லாம் ஹைஸ்கூலுக்குப் போ" என்றார்கள். ஆனால் நான் எங்கு போவது — நான் யாரென்றே எனக்குப் புரியவில்லையே? நான் ஒருவர் பக்கத்திலும் இருப்பதாகத் தெரியவில்லையே!



எனக்குத் தானம் கொடுப்பதுகூட மறுக்கப்பட்டது. பிச்சை கொடுப்பதற்கு முன் தங்கள் மதத்தவன்தானா என்று தானம் கொடுப்பவர் நிச்சயம் செய்து கொள்கிறார்கள். நான்தான் ஒரு இனத்தையும் சேர்ந்தவனாக இல்லையே!

அப்படியானால் நான் பட்டினியால் சாக வேண்டியதுதானா? எப்படியாவது நான் யாரென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து கொள்ளா விட்டால் வாழ வழியில்லை!

யாரோ ஒருவர் "டாக்டர் சமானியிடம் போ. அவர் ஒருவரால்தான் உனக்கு ஞாபக சக்தியை உண்டாக்க முடியும்" என்று யோசனை கூறினார்.

டாக்டர் சமானியின் பெயரைத்தான் நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்களே, அவர் ஒரு மனோ தத்துவ வைத்தியர். அவர் ரண வைத்தியத்தால் வியாதிஸ்தர்களைக் குணப்படுத்த மாட்டார். பிணியாளர்களைப் பேசச் சொல்லித் தானும் பேசிக் குணப்படுத்துவார். அங்கு நான் சென்றேன்.

அறையைச் சுற்றிலும் குளிர்ச்சியான விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. சுவரெல்லாம் வெண்மையாக இருந்தது. டாக்டரின் கோட்டும், நர்ஸின் உடையும் கூட வெண்மையாகவே இருந்தன. எல்லாவற்றையும் விட டாக்டரின் குரல் இங்கிதமாக இருந்தது.

மெதுவாக அன்புடன் என்னிடம், "உனது மனதிற்குச் சிறிது ஓய்வு

கொடு. சிரமம் ஒன்றும் கொடுக்காதே. பிறகு உன் மனதில் என்ன தோன்றுகிறதோ அதை யெல்லாம், அது எதாக இருந்தாலும் பரவாயில்லை, கூறு" என்றார். பின்னர் கையில் காகிதத்தையும் பென்சிலையும் எடுத்துக் கொண்டு நான் பேசுவதை எழுத அமர்ந்தார். நான் கண்ணை மூடிக்கொண்டு மனதை உலவும்படி செய்தேன்.

ஏதோ பார்த்த இடத்தைப் பற்றிய பழைய ஞாபகம் வந்தது போல் தோன்றவும், "நீல நிற வானம்" என்றேன். பின்னர் "நீல நிற வானம் அடிவானம் வரை பரந்து செல்லும் பசிய வயல்கள்......"

"ரொம்ப நல்லது" என்று உற்சாக மூட்டினார் டாக்டர். அவர் காகிதத்தில் பென்சிலால் குறிக்கும் சப்தம் என் காதில் பட்டது. "நிறுத்தாமல் சொல்லிக் கொண்டிரு" என்றார்.

நான் மனதில் தோன்றியவற்றை எல்லாம் கூறினேன். நீலப் பசும் வயல்கள். மாரிக் காலத்தில் வெள்ளமோடும் ஆறு. வாய்க்காலில் தண்ணீரை இறைத்தும், எறிந்தும், மூழ்கி விளையாடும் குழந்தைகள். அக் குழந்தைக் கூட்டத்தில் நானும் ஒரு

இது என்ன அதிசயம்!



தையற்காரன் (ஆச்சரியத்துடன்) :—எஜமான்! உங்களைப் பார்த்தால் மெலிந்த மனுஷனாகத்தான் தோணுதுங்க. உங்க வயிறு அளவு இரண்டு கஜத்துக்கு மேலே இருக்குதுங்களே!

குழந்தையாய்த் தண்ணீரில் குதித்து விளையாடுகிறேன்......"

தூரத்திலிருந்து வரும் குரல் போல் "இக் குழந்தைகள் யார்? ஹிந்துக் குழந்தைகளா? முஸ்லிம் குழந்தைகளா? சீக்கியக் குழந்தைகளா?" என்று டாக்டர் கேட்பது லேசாகக் காதில் விழுந்தது.

"வெறும் குழந்தைகள்தான்" என்று நான் பதில் கூறியதாகப் பட்டது.

"சரி மேலும் கூறு!"

"அறுவடைக்குப் பின்னர் காட்சியளிக்கும் வயல், ஆகாயத்தை முட்டுவதைப் போல் குவிக்கப் பட்டுள்ள தானியப் போர்கள், அறுவடைத் திருவிழா, அதோ, அதோ அந்த அற்புத டோலக் வாத்திய ஒலியையும் பாட்டையும் கேளுங்கள்!"

"அந்தப் பாட்டைப் பாடுபவர் யார்?"

"பெண்கள்."

"அது சரி, ஹிந்துப் பெண்களா, முஸ்லிம் பெண்களா, சீக்கியப் பெண்களா?"

"அவர்கள் பஞ்சாபிப் பெண்கள்; ஹிந்து, முஸ்லிம், சீக்கியர் ஆகிய அனைவரும் இருக்கின்றனர்."

டாக்டர் ஏமாற்றத்துடன் பெரு மூச்சு விட்டது காதில் பட்டது. "சரி, சரி, மேலே கூறு" என்றார்.

"எனக்கு இப்பொழுது ஒன்றும் கேட்கவில்லை; ஒன்றையும் பார்க்க முடியவில்லை" என்பதையும் கூறினேன்.

"ஏன்? என்ன காரணம்?"

"எனக்குப் பலத்த தலைவலி ஏற்பட்டிருக்கிறது. எங்கும் இருள் சூழ்ந்திருக்கிறது. ஒரு விசித்திர பயங்கர ஓசை கேட்கிறது..."

"நன்றாக முயற்சி செய்து பார். உனக்கு ஒன்றும் காண முடியவில்லையா?"

"ஆம்; இதோ எனக்குப் பார்க்க முடிகின்றது. வானை நோக்கிச் செல்லும் தீஜ்வாலை! ஊர் முழுதும் நெருப்புப் பற்றி எரிகிறது. அரவம் பெருகிக் கொண்டே வருகின்றது. கூச்சல்களும், பெண்களின் ஓலமும......"

"அது சரி; இதுதான் கலகக் காரர்கள் வேலை. இவர்கள்தான் உன் குடும்பத்தினரைக் கொன்றவர்கள். உன் வீட்டைக் கொளுத்தி உன் மன அமைதியைக் குலைத்தவர்கள்......அவர்கள் பேசுவதை நன்றாகக் காது கொடுத்துக் கேள்."

"எனக்கு ஒன்றும் புரியவில்லையே. சத்தம் பலமாகக் கேட்கிறது. கொல்லு!

கொல்லு! என்ற ஒரே வார்த்தை மட்டுந் தான் காதில் படுகிறது. டாக்டர், என்னைக் காப்பாற்றுங்கள்."

"நன்றாய்க் கவனமாய்க் கேள். உற்றுப் பார், ஞாபகப்படுத்திப் பார். உன் வீட்டைக் கொளுத்தி உன் குடும்பத்தார்களைக் கொல்லும் கும்பல் யார் என்று நன்றாகக் கவனி? அவர்கள் மீது நீ பழி வாங்க வேண்டாமா? பழிக்குப் பழி......"

ஐயையோ! நான் ஹிந்துவா, முஸ்லிமா, சீக்கியனா என்று டாக்டர் கண்டுகொள்ள முயற்சிக்கிறார் என்பதை என் மூளையில் ஒரு அலாரம் போல் எச்சரிக்கும் உணர்ச்சி ஒன்று உணர்த்தியது.

"நான் ஒரு முஸ்லிம். சர்தார் சாஹிப்பின் உறவினர்களைக் கொன்று, ரயில் வண்டியில் என்னைக் காப்பாற்றிய பஞ்சாபி ஹிந்து வாலிபன் சொத்துக்களைச் சூறையாடியவன். ஆயிரக்கணக்கான ஹிந்துக்களையும் சீக்கியர்களையும் கொன்று குவித்திருக்கிறேன்..."

"நான் ஒரு ஹிந்து. நான் ஹக்கீம் சாஹிப்பின் மகனையும் மற்றும் ஆயிரக் கணக்கான முஸ்லிம் ஆண், பெண், குழந்தைகளையும் கொன்றிருக்கிறேன்......!

"முடியாது, முடியவே முடியாது! நான் யார்? நான் யாரென்று, அறியவே விரும்பவில்லை. நான் ஹிந்துவாகவோ, முஸ்லிமாகவோ, சீக்கியனாகவோ இருக்க விரும்பவில்லை. நான் ஒரு சாதாரண மனிதப் பிறவியாகவே இருக்க விரும்புகிறேன்" என்றேன். கண்ணைத் திறந்தேன். டாக்டரைத் திக் பிரமையுடன் உட்கார வைத்து விட்டு, அந்த அறையிலிருந்து வெளியே ஓடி வந்துவிட்டேன்.

"நான் ஒரு ஹிந்து!"

"நான் ஒரு முஸ்லிம்!"

"நான் ஒரு முஸ்லிம், நான் ஒரு ஹிந்து!"

"நான் ஒரு ஹிந்து. நான் ஒரு முஸ்லிம்!"

"நான் யார்? நான் என்ன பொருளால் ஆனவன்?".

"நான் ஒரு ஹிந்து. நான் ஒரு முஸ்லிம்!"

பிளேக் கொள்ளை நோயிலிருந்து தப்பிப் பிழைத்த ஒருவன்போல் அங்கிருந்து ஓடினேன். ஆயினும் அக்குரல்கள் நான் எங்கே



பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார் பாரதி விழாவை நவம்பர் 5, 6 தேதிகளில் ஸ்ரீ ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடினார்கள். அவ்விழாவை யொட்டி நிகழ்ந்த பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெற்றவர்களை இப்படத்தில் காணலாம். ஸ்ரீமதி சக்ரவர்த்தி சதானந்த் பரிசுகளை வழங்கினார்.

சென்றாலும் என்னைத் தூக்கிப் பயமுறுத்திக் கொண்டிருந்தன.

நான் எந்தப் பக்கம் போனேனோ தெரியாது. என்னை ஒரு முரட்டுப் பயல் நிறுத்தி, "டேய், அயோக்கியப் பயலே! எங்கே போகிறாய்? நீயார்?" என்றான்.

அவன் ஒரு முஸ்லீம் காலி. அவன் கண்களிலே கொலைத் தீ ஜ்வலித்தது. அவன் கையிலிருந்த கொலைக் கருவியும், என் கண்ணில் பட்டது. ஆனால் என் மனது முன் ஏற்பட்ட பிரச்னையில் மூழ்கியிருந்தது. "நான் ஒரு ஹிந்து. நான் ஒரு முஸ்......"

"நான் முஸ்லீம்" என்று கூறி முடிப்பதற்குள், அவனது கத்தி எனது முதுகுக்குள் நுழைந்துவிட்டது. நீங்கள் இப்பொழுது பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே அதே காயந்தான் அது.

நான் தட்டுத் தடுமாறிக் கீழே விழும் நிலையில் இருக்கையில் 'காபிர் பயல்' என்று அவன் கூறியது காதில் விழுந்தது. ரத்தம் ஒழுகிக் கொண்டே யிருக்க அங்கிருந்து நடந்தேன்.

தட்டுத் தடுமாறி நடந்து வேறொரு பகுதிக்குப் போய்ச் சேர்ந்தேன். இம்முறை என்னை ஒரு ஹிந்துக் குண்டன் மறித்துக் கொண்டான். "ஏய் நீ யார்? ஹிந்துவா முஸ்லீமா?" என்று கேட்டுக் கொண்டே வேஷ்டியில் ஒளித்து வைத்திருந்த கத்தியை எடுத்தான்.

நான் எனது வாய்ப்பாட்டை விடாது கூறிக்கொண்டே இருந்தேன். "நான் ஒரு முஸ்லீம்; நான் ஒரு ஹிந்......" இந்த முறை "நான் ஹிந்து" என்று முடிப்பதற்குள் கூரிய அலகு என் வயிற்றுக்குள் பாய்ந்து விட்டது......

எனக்கு எப்படி இரண்டு வெட்டுக் காயங்கள் ஏற்பட்டன என்பது இப்போது உங்களுக்குப் புரிந்து விட்டதா? நான் முஸ்லீமாலும், ஹிந்துவாலும் குத்தப்பட்டேன். அதனால்தான் டாக்டர் ஸார்! நீங்கள் என்னைக் காப்பாற்ற முடியாது என்று சொல்லுகிறேன். நான் சாவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்னைச் சுற்றி நிற்கும் உங்களில் ஒருவர் கூட என்னைக் காப்பாற்ற முடியாது. உண்மையில் நீங்கள் என்னைக் காப்பாற்ற விரும்பவில்லை. உங்களில் ஒருவர் கூட விரும்பவில்லை என்பது எனக்குத் தெரியும். அதுமட்டுமல்ல, என் சாவுக்குப் பழி வாங்கத் தயாராக இருக்கின்றீர்கள் என்பதும் எனக்கு நன்றாய்த் தெரிகிறது. உயிர் போகும் இந்த நேரத்திலே 'நான் ஹிந்து' என்று கூறிவிட்டால் இங்கு நிற்கும் இந்த வீர ஹிந்து, குற்றமற்ற நான்கு முஸ்லீம்களைப் பழி வாங்கி விடுவார். 'நான் முஸ்லீம்' என்று கூறிவிட்டாலோ இந்த முஸ்லீம் தீரர்கள் ஹிந்து சமூகத்தையே பழி வாங்கக் கிளம்பி விடுவார்கள்.


இப்பொழுது நான் யார் என்று எனக்குப் புரிந்து விட்டதால் தான் நான் சிரிக்கிறேன். பழைய ஞாபகங்கள் இப்பொழுது தோன்றிவிட்டன. என் முன்னாலேயே கொலை செய்யப்பட்ட எனது மனைவியின் அழகிய கண்கள், கள்ளங் கபடமற்ற எனது குழந்தையின் பார்வை, என் கண் முன்னே நிற்கின்றன. இக்காட்சியைக் கண்டதால் தான் என் ஞாபக சக்தியை நான் இழக்க நேர்ந்தது. ஆம்; இதோ எனது வயல்கள், கிராமம், எனது நண்பர்கள், அண்டை வீட்டுக்காரர்கள் அனைவரின் தோற்றமும் சாகப்போகும் இந்த நேரத்திலே தோன்றுகின்றன. உயிர் போகும்பொழுது, எல்லாம் ஞாபகத்திற்கு வருகின்றது.

ஆனால் நண்பர்களே! நீங்கள் வீணாகக் காத்துக் கொண்டிருக்கின்றீர்கள். நான் ஹிந்துவோ முஸ்லீமோ என்று கூறப் போவதில்லை. என்னைக் குத்திய ஹிந்து கொலைகாரனோ முஸ்லீம் கொலைகாரனோ தவறுதலாகத் தன் இனத்தவனையே குத்திய செய்தியை நான் கூறப்போவதில்லை. ஆயிரமாயிரம் மக்களைக் கொலை செய்து என் அருமைப் பஞ்சாபின் புனிதப் பெயரைக் களங்கப்படுத்தி, தாழ்மைப் படுத்திய ஹிந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள் ஆகிய அனைவர்மீதும் பழி வாங்குவதற்கு இந்த இருவர் பெயரையும் கூறாம லிருப்பதே நல்ல வழி.

நான் ஒரு ஹிந்துவா, முஸ்லீமா?

இந்தக் கேள்வி அவர்கள் மனதை வாட்டிக்கொண்டே இருக்கும். நகர்களிலும், கிராமப் புறங்களிலும், தொழிற்சாலையின் யந்திர ஓசையிலும், டிராம்களின் ஒலியிலும், பஸ் சத்தத்திலும், ரயில் வண்டி கிளப்பும் இடி ஓசையிலும் வாணியனின் செக்கு எழுப்பும் கிரீச்சிடும் சத்தத்திலும் ஒரே ஒரு கேள்வி கேட்கப்படுவதை அறிவார்கள். அவன் ஒரு ஹிந்துவா? முஸ்லீமா? அவர்களோ அவர்கள் குழந்தைகளோ அல்லது அவர்களின் பரம்பரையினரோ ஒருகாலும் நிம்மதியாக இருக்கப் போவதில்லை. எனது பழி மகா பயங்கரமாக இருக்கும்.

நான் ஏன் சிரிக்கின்றேன் என்பதை அறிய நீங்கள் இன்னும் விரும்புகின்றீர்களா?


அக்ரிகோ கருவிகள்
மண்வெட்டிகள்
AGRICO
மண்வாரிகள்
கட்டப்பாரைகள்
இருதலை கோடாலிகள்
I A C
TRADE MARK
தி டாடா அயர்ன் &
ஸ்டீல் கம்பெனி லிமிடெட்.
தலைமை ஸேல்ஸ் ஆபீஸ்:
23 B, நேதாஜி ஸுபாஷ் ரோட், கல்கத்தா.

Edited. Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119. Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk Madras

கல்கி



ALKI நவம்பர் 27, 1949 4 அண

REGD. No. M. 4392